HELLO MOBILE WORLD


122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

அறைவு 03 இயம் 17 November 22 - 28, 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
# MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்
பக்கங்கள் : 16 விலை : 30.00

STUDIO ABISHA

Professional Video & Photo Graphers
SA
NO.259 Central Roat, Trincomalee.
0262226842/0772302658/0776617791

abishadigital@gmail.com

# பல மில்லியன் மோசடி?

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் பல மில்லியன் ரூபாய்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை அடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

2006ம் ஆண்டில் கிழக்கு மாகாணம் இராணுவ நடவடிக்கை மூலம் அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கின் எழுச்சி போன்ற பல 13

## மைத்திரபால சிறீசேன எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர்

## "இனப்பிரச்சனை தொடர்பாக எதுவுமில்லை"



எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக சுகதார அமைச்சரும் இலங்கைச் சுதந்திரக் கட்சியின் செயலாளருமான மைத்திரிபால ஸ்ரீசேன பெயரிடப்பட்டுள்ளார்.

அவ்வாறு தமது பெயரை முன்மொழிந்துள்ள அனைவருக்கும் 13

## அவுஸ்திரேலியாவின் முதலீட்டு முயற்சி



திருகோணமலை மாவட்டத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக அவுஸ்திரேலிய உதவி அமைப்பின் அணியொன்று திருகோணமலைக்கு வருகை தந்துள்ளது.

திருகோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழிற் சங்கத்தின் தலைவர் கலைச்செல்வனுடன் இவ் உதவி அமைப்பின் இலங்கைக்கான திட்ட முகாமையாளர் கற்றினா 13

## 21 மாணவருக்கு இரண்டு பரீட்சை அனுமதி

### பெற்றோர், மாணாக்கர் முறைப்பாடு - கிழக்கு கல்வி அமைச்சு உடனடி நடவடிக்கை



செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலயத்தில் 21 க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு இரண்டு பரீட்சை அனுமதிகள் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டால் விசாரணைகள் ஆரம்பிக்கப்-பட்டுள்ளதுடன் அதிபர் உடனடி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். குறித்த 21 மாணவர்களுக்கும் 13

## -18 நாடுகளில் சீனக் கடற்படை-
## இலங்கையில் திருகோணமலையிலா?



சீனாவைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் சீனா தனது கடற்படைத் தளங்களை அமைக்கவிருப்பதாக "த நமீபியன்" வலையத்தளம் செய்தி வெளியிட்டதைத் தொடர்ந்து இலங்கையிலும் சீனக் கடற்படைத் தளம் அமையவிருக்கின்றது என்பது தெரியவந்துள்ளது. எனினும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஊடக மையத்தின் பணிப்பாளர் பிரிகேடியர் ருவன் வனிகசூரிய- சீன கடற்படை 13

ஹம்பாந்- தோட்டையில் அமைக்கப்படாது என்றும் இச் செய்தி உண்மைக்குப் புறம்பானது என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த 19ம் திகதி இவ்வலைத்தளத்தில் வெளியான செய்தியில் சீன ஊடகவியல் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 18 நாடுகளில் சீனா தனது கடற்படைத் தளங்களை நிறுவவுள்ளதாக 13

கடையுடன் காணி விற்பனைக்கு!!
இல 68 கண்டி வீதியில்
றோயல் கொன்ஸ்ரக்சனுக்கு
அருகாமையில் அமைந்துள்ள கடையுடன் கூடிய
வீடு விற்பனைக்கு உண்டு - 071 8496 977

Sugirtha Stationers

காகிதாதிகள் மொத்த மற்றும்
சில்லறை விற்பனையாளர்கள்
378/380 Court Road, Trincomalee
026 2225699 - 0775151336
அரச அங்கீகாரம் பெற்ற
வினியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 026 2227677

## முகாம் வெள்ளமும் சனாதிபதி வேட்பாளரும்

கடும் மழை பெய்து வருகின்ற இக்கால கட்டத்தில் சில நாட்களுக்கு முன்னர் நிகழ்ந்த அனர்த்தம் எம் கண்களை நிறைத்திருந்தது.

மலைநாட்டில் நிகழ்ந்த இவ்வனர்த்தத்தால் ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்ந்தும் பலர் மரணமடைந்தும் போயிருந்தனர்.

இதனையடுத்து நாட்டின் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் மக்கள் அவர்களுக்காக பொருட்களையும் தம்மால் அயன்ற உதவிகளையும் வழங்க முன்வந்து அனைவருக்கும் அவ்விழப்பு நிகழ்ந்தது போல உணர்ந்து செயற்பட்டார்கள்.

ஒரு ஒத்த செயற்பாடும் இழப்புக்களுக்கெதிராகக் குரல் கொடுக்கும் செயலும் திருகோணமலையிலும் பலரால் முன்னெடுக்கப்பட்டன.

பாராட்டத்தக்க அச் செயற்பாடுகள் முடிவடைந்து விட்ட நிலையில் எமது மாவட்டத்தின் ஒரு அந்தத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கடும் மழையில் தமது வாழ்வை, கடந்த பல வருடங்களாக ஓட்டிவருவதையிட்டு நாம் சிந்திப்பதாக இல்லை.

அனர்த்தம் நிகழும் பொழுதில் மட்டும் ஆதரவு தெரிவித்து விட்டுப் பின்னர் அவர்களை மறந்து விடும் அற்புதமானதோர் மனநிலை எம்மிடம் உண்டு.

அனர்த்தம் நிகழும் பொழுதில் வரும் ஆயரிக்கணக்கான உதவிகளுடன் எமது உதவியும் சேரட்டும் என நினைக்கும் நாம் மழைநாட்களில் அல்லலுறும் முகாம் மக்களின் அல்லலைத் தீர்க்க எமது உதவி மட்டுமே செல்லும் என்பதையிட்டுச் சிந்திப்பதில்லை.

வெள்ளத்தால் மூழ்கும் மக்களுக்கு உதவி செய்யத் திராணியற்ற தலைமைகளைக் கொண்டுள்ள மக்களாகிய நாம் அவர்களை, அவர்களின் சொல்லெனாத்துயரங்களை நினைப்பதைத் தவிர்ப்பதைத்தான் விரும்புகின்றோமா? எமது பரோபகாரம் என்பது உலக மக்கள் எல்லோராலும் அனர்த்தம் என கூறப்படுவதையிட்டு மட்டும் தான் பிரயோகிக்கப்படுமா? அயல்வீட்டிலுள்ளவன் பட்டினியாய் கிடக்கும் போது எங்கோ உள்ளதோர் ஏழைக்குக் கஞ்சி கொடுப்பது பிழையா? சரியா என்பதை நாங்களே தீர்மானித்துக் கொள்வோம்.

அஃதிருக்க, வெள்ளத்தோடு பொது வேட்பாளரின் செய்தி பெருந் தீயாய் பரவிவருகின்றது.

கட்சிகள் இனி பக்கச் சாரும் நிலைப்பாட்டில் தமது தேசிய அரசியல் விருப்புக்களையும், சிறுபான்மை அரசியல் விருப்புக்களையும் நிறைவேற்றத் தக்கவரைத் தேடி அலையத் தொடங்கிவிடும்.

முடிவில் வேட்பாளரின் சொற்கள் நம்பப்பட்டு அவர்களுக்கு வாக்களிக்கும் படி எமது தலைமைகள் கோரிக்கை விடத் தொடங்கும்.

அதன்படி நாமும் வாக்களிக்கப் போகின்றோம். அல்லது வாக்களிக்காது விடப்போகின்றோம்.

மிகமுக்கியமாக வாக்களிப்பு நிகழ்வின் பின்னர் மறந்து விடும் அற்புதமான அதே மனநிலை எம்முன் உருவாகிவிடும்.

முகாம் வெள்ளத்தை மறப்பது போல், அங்கு அல்லலுறும் அயல் வீட்டுக்காரனை மறப்பது போல், வேட்பாளரையும் அவரது சொற்களையும், அவர் சார்ந்து உறுதிமொழி எடுத்துக்கொண்ட எமது தலைமைகளின் வார்த்தைகளையும் நாம் மறந்துவிடுவோம்.

அனர்த்தங்கள் அரசியலில் நிகழ்ந்தாலும், இயற்கையில் நிகழ்ந்தாலும் நாம் உடனடியாக செயற்பட்டு பின் மறந்துவிடும் நிலையிலேயே இருந்தோம்... இருக்கின்றோம்...

எப்படி எமது மக்கள் வாழும் முகாமுக்குள் நாம் சுதந்திரமாகப் போகமுடியாதுள்ளதோ அவ்வாறே நாம் தேர்வு செய்பவர்களிடமும் கேள்வி கேட்க முடியாது போகும்..... இந்நிலையை மாற்ற வேண்டுமாயின் மறக்காதிருப்போமா நாம்?

## கிழக்கு மாகாணசபையால் நடப்பட்ட மரங்களின் கூடுகளை பிரதேசசபை தூக்கியது



சனாதிபதியின் 9 வருட பதவிக்கால நிறைவையொட்டியும், தெயட்ட செவன மர நாட்டு நிகழ்வை முன்னிட்டும் கிழக்கு மாகாண சபையால் கடந்த 19ம் திகதி வவுனியா வீதியில் துவரங்காட்டுச் சந்தியில் இருந்து இரு மருங்கிலும் மரங்கள் நடப்பட்டன.



இந்நிகழ்வில் மாகாண ஆளுனர், முதலமைச்சர், அமைச்சர்கள் உட்பட அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். மரங்கள் பாதுகாப்பாக வளர்வதற்காக ஒவ்வொரு மரத்தையும் சுற்றி நிறுவப்பட்ட கூடுகள் உரிய நிகழ்வு நடந்தேறி அனைவரும் கலைந்து சென்ற பின்னர் பட்டணமும் சூழலும் பிரதேச சபையால் அகற்றப்பட்டுதாக மக்கள் தெரிவித்துள்ளனர் அதையடுத்த நடப்பட் மரங்கள் அன்று மாலையே கவனிப்பாரற்று சில அழிவிற்குள்ளாகியும் உள்ளது.

## றோட்டரி கழக ஆளுனர் திருமலையில்

றோட்டரி கழகத்தின் இலங்கை ஆளுனர் கௌரவ றோட்டரியன் கௌரிராஜன் அவர்கள் இன்று திருகோணமலைக்கு வருகை தந்துள்ளார்.

அவர் பள்ளிக்குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களுக்கென தனித்தனியாக கட்டப்பட்டுள்ள மலசலகூடங்கள் இரண்டைத் திறந்துவைப்பதுடன் இலவச கண் சிகிச்சை நடவடிக்கையையும் முன்னெடுகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலங்கேணி சித்தி வினாயகர் மகா வித்தியாலய இளைஞர்குழு உதவி

ஆலங்கேணி சித்தி வினாயகர் மகா வித்தியாலய இளைஞர்குழு உலருணவுப் பொருட்களை சேகரித்து மூதூர் இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களுக்கு வழங்கியுள்ளனர்.

இடைத்தங்கல் முகாம்களில் உள்ள பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு மூதூர் இந்துக்குருமார் சங்கத்தின் ஊடாக இந்த உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

பால்மா, சவர்க்காரம், பிஸ்கட் போன்ற சுமார் ரூபா 350.00 பெறுமதியான உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி பாடசாலையின் அதிபர் திரு. இராஜசேகரம் அவர்களின் முயற்சியில் இப்பொருட்கள் சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

## 'லங்காபாலம்' கட்டுமானப் பணி ஆரம்பம்

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்குற்பட்ட சீனக்குடா பகுதியில் அமைந்துள்ள லங்கா துறைமுகத்திற்கு அருகாமையிலுள்ள லங்கா பாலத்திற்கான கட்டுமானப்பணிகள் பொருளாதார அபிவிருத்தித் துறை பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே அவர்களால் கடந்த 18.11.2014 காலை 11.00க்கு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கடந்த 1940ம் ஆண்டு காலப்பகுதியில் சீனக்குடா புகையிரத நிலையத்திலிருந்து லங்கா துறைமுகத்திற்கான தேயிலைப்போக்குவரத்துப் புகையிரத பாதையானது இப்பாலத்தினூடாக அமைந்திருந்ததாகவும் அதன்பின்னர் வீதியாக மாற்றப்பட்டு இதனூடாக மக்கள் பயணம் செய்ததாகவும். அதன்பின்னராக ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இப்பாலமானது முற்றாக பாதிக்கப்பட்ட நிலையில் இவ் வீதியூடான போக்குவரத்து இதுவரைகாலமும் தடைப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நிக்கி தொம்சன்)

## கப்பல்துறை அறநெறிப்பாடசாலை நூலகம் அங்குரார்ப்பணம்





கப்பல்துறைக் கிராமத்தில் அமைந்துள்ள முத்துமாரியம்மன் ஆலயத்தில் தற்காலிகமாக சிவநய அறநெறிப்பாடசாலை இயங்கி வருகிறது. நிரந்தரக் கட்டடமின்றி ஆலய மண்டபத்தில் இயங்கி வரும் இப்பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான ஒரு தொகை அறநெறிக் கதைப்புத்தகங்கள் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் பாலேந்திரன் மயூரன் அவர்களின் நிதி உதவி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

இங்கு சுமார் 50 மாணவர்கள் மூன்று தொண்டர் ஆசிரியர்களின் வழிநடத்தலில் கல்விபயின்று வருகிறார்கள். இப்பாடசாலை ஞாயிற்றுக்கிழமைகளில் 9 மணி முதல் 12 மணிவரை நடாத்தப்படுகிறது. பலசிரமங்களுக்கு மத்தியில் மாணவர்களின் ஆர்வமான கலந்துகொள்ளலுடன் இது இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

நூலக கட்டமைப்பு எதுவும் இல்லாத காரணத்தால் அவை அன்றே மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. மீண்டும் அடுத்தமுறை அறநெறி வகுப்புக்கு வரும்போது தாம் வாசித்த புத்தகத்தை ஆசிரியரிடம் கையளித்து புதிய புத்தகம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுக்கு வருகை தந்திருந்த மயூரனின் தந்தை திரு.பாலேந்திரன் அவர்கள் மாணவர்களுக்கு நூல்களை வழங்கினார்.

அத்துடன் திருமதி. சிறீவித்தியா சமயதாஸ், திருமதி. அருணா ஆகியோரால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த மாணவர்களுக்குரிய கற்றல் உபகரணங்களையும், உடைகளையும் அவர் வழங்கிவைத்து நிகழ்வினை நிறைவு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு போராளியின் இறுதிக் கணங்கள்

மூலம் : Ceylon Today
தமிழில் : மாயன்



## றோகண விஜேவீர


லான்ஸ் கோப்பரல் இந்திரானந்த டி சில்வா

**நான் லான்ஸ் கோப்பரல் இந்திரானந்த டி சில்வா பேசுகின்றேன்....** என்பதுடன் தொடங்குகின்றது அந்தப் பேட்டி. றோகண விஜயவீரா என்ற, இரண்டு தடவை ஆட்சிக் கவிழ்ப்பிற்கு முயன்ற, சிங்களப் போராட்டக் குழுவின் தலைவரை இராணுவம் கைது செய்து கொலை செய்த சில மணித்தியாலங்களுக்கு முன்னர் படம் எடுத்த அந்த இராணுவ அதிகாரி தனது உள்ளக் கிடக்கைகளை பேட்டியில் வெளிப்படுத்தியுள்ளார்.

நாறஹேன்பிட்ட இராணுவத்தங்குமிடத்தில் 1989 நவம்பர் 12ம் திகதி இரவு ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தேன். பின்னிரவு 1 மணிக்கு கப்டன் அபயநாயக்க என்னைச் சந்தடியின்றி எழுப்பினார். படப்பிடிப்புக் கருவிகளை எடுத்துக்கொண்டு கட்டளை அதிகாரியின் மகிழுந்து நிற்கும் இடத்திற்குச் செல்லுமாறு பணித்தார். நான் பயந்தேன்... ஏனெனில் நான் ஜேவிபி மீது அனுதாபத்தைக் கொண்டவன். என்னைப் போன்ற அனுதாபம் மிக்க இராணுவ வீரர்கள் பலர் திடீரெனக் காணாமற் போய்விடுவர்

அதுதான் எனக்கும் நடக்கப் போகின்றது என நான் பயந்தேன்... எனினும் கட்டளையை மீறமுடியாது. எனவே எனது படக்கருவித் தொகுதியுடன் பிஸ்டல் ஒன்றையும் இரகசியமாக எடுத்து வைத்தேன். பின்னர் என்னில் சாதாரண சந்தேகமிருந்து விசாரிக்கத் தொடங்கினால் இந்த இராணுவத்துக்குச் சொந்தமில்லாத பிஸ்டல் என்னைக் காட்டிக்கொடுத்துவிடும் என்பதால் அதனை மீண்டும் இரகசிய இடத்தில்வைத்துவிட்டு கட்டளையதிகாரியின் மகிழுந்துக்கு வந்தேன். அங்கே கட்டளை அதிகாரி கேணல் தசநாயக்க அமர்ந்திருந்தார். நான் ஏறியபின்னர் மகிழுந்து கிளம்பியது.

"நீ காதலிக்கிறாயா?" 'இல்லை சேர்'.. 'சரி.. நான் உன்னை விசாரிக்கப்போவதில்லை. ஆனால் இன்று நடைபெறுபவற்றை யாருக்கும் நீ சொல்லக்கூடாது' .. ' ஓம் சேர்'

நாம் திப்பிரிகஸ்யாயவிலுள்ள இராணுவக்கூட்டு நடவடிக்கைப் பிரிவிற்கு வந்தோம். அங்க மாடியில் பல சிரேட்ட அலுவலர்கள் வட்டமேசையில் அமர்ந்திருந்தார்கள். அங்கு பிரதான கதிரையில் இருந்த ஒருவரை மட்டுமே எனக்குத் தெரியாமல் இருந்தது. அந்த மனிதரைத்தான் படமெடுக்க வேண்டும் என்றார்கள். நான் அருகில் இருந்தவரிடம் யாரவர் எனக் கேட்டேன். அக்கணத்தில் வந்த பதில் "அவர்தான் காம்ரேட் றோகன"

எனக்கு றோகனவைச் சின்ன வயதில் சந்தித்த அனுபவமே இருந்தது. ஆனால் அங்கிருந்தவரை றோகன என சந்தேகிக்க என்னால் முடியாதிருந்தது. இது ஏதோவோர் திட்டம் என்றே நினைத்தேன்.

அங்கு படம் எடுப்பதற்கான திரை விரிக்கப்பட்டபோது நான் அவருடன் இரண்டு நிமிடங்கள் மட்டும் உரையாடினேன். "நீங்கள் யார்?" அவரிடம் இருந்து மெல்லிய புன்னகையொன்று வந்தது... "நான்தான் விஜேவீர"..... "எங்கே உங்களைக் கைது செய்தார்கள்...? "என்னை இவர்கள் உலப்பனவில் கைது செய்தார்கள்" அதற்கப்பால் எனக்கு அவரிடம் உரையாடக் கிடைக்கவில்லை. நான் புரிந்துகொண்டேன் அது அவர்தான் என்று... அவரைப் பலகோணங்களிற் படமெடுத்தேன்.அவர் அப்போது எவ்வித உணர்வுகளையும் வெளிப்படுத்தவில்லை. அதன் பின்னர் காணொளிப்படக்காரரிடம் அவரைக் கையளித்தேன்.

அதன் பின்னர் அங்கிருந்த சிரேட்ட இராணுவத்தினரை உறுதிப்படுத்திக்கொண்டேன். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, பிரகேடியர்கள் லக்கி அல்கம, ஜெயசுந்தர கேணல்கள் ஜவன் தசநாயக்க, பலகல்ல, லெப்.கேணல் ஜானக பெரேரா, கப்டன் காமினி, முதலிவ், வீரசிங்க, அபேநாயக்க, தோராதெனிய, பிரபல்யமான உடுகம்பொலவின் சகோதரர் பத்மஸ்ரீ ஆகியோரே அவர்கள்.

வீஜேவீரவின் காணொளிப் பேச்சை அனைவரும் அவதானித்துக் கொண்டிருந்தனர். விஜேவீர தனது அமைப்பின் அழிவையிட்டு அதிர்ச்சியடைந்திருந்தார். அனைத்துமே திருத்த முடியாத அளவிற்கு வந்துவிட்டதாக அவர் தெரிவித்தார். தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தியவாறு அந்தக் கணத்தை துணிவுடன் எதிர்கொண்டார். ஜேவிபியை எவ்வாறு சனநாயக வழியில் இருந்து அழிவுப்பாதைக்குத் தள்ளினார்கள் என்பதை அவர் விளக்கினார்.


லெப்.கேணல் முத்தலிவ்

"ஜேவிபியின் குறிக்கோள் ஆயதப் போராட்டம் அல்ல. 1982ம் ஆண்டில் சனநாயக வழியில் நாம் தேர்தல்களை எதிர்கொள்ளத் தயாரானோம். எம்மை கறுப்பு ஜூலை நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தி நயவஞ்சகமாகத் தடைசெய்தார்கள். இந்தத் நீதியற்ற தடையை அகற்ற நாம் ஒவ்வொருவரும் முயன்றோம். அப்போது யாருமே எம் சொல்லைச் செவிமடுக்கவிலலை. அக்காலத்தில் பெருமளவில் எம் நண்பர்கள் கொல்லப்பட்டார்கள். அத்துடன் எமது தலைவர்களைக் கொல்லும் சதித்திட்டம் உருவானதையும் நாம் அறிந்துகொண்டோம். அரசியலில் இருந்து விலகவேண்டும் அல்லது அழிவை எதிர்கொள்ள வேண்டும் என்ற நிலையை அடைந்தோம். அந்தக் கணத்தில் நாம் அழிவை எதிர்த்துப் போராட உறுதிபூண்டோம். இந்த வழியை நாமாகத் தேர்ந்தெடுக்கவில்லை. அதற்குள் தள்ளப்பட்டோம். சனநாயக வழியொன்று திறக்குமாக இருந்தால் அக்கணத்திலேயே ஆயதப் போராட்டத்தைக் கைவிடவே நாம் தயாராயிருந்தோம்" என அவரது பேச்சுத் தொடர்ந்தது. அதன் முடிவில் அவரை மீண்டும் வட்ட மேசைக்கு அழைத்தார்கள். அதன்போது என்னிடமிருந்து புகைப்படச் சுருளும், காணொளி பெட்டியையும் முத்தலிவ் பெற்றுக்கொண்டார்.




வட்டமேசையில் அவரை விசாரித்தார்கள். அப்போது அவர் "தெற்கில் நாட்டுப்பற்றாளர்களான எம்மைக் கொல்லும் பிரேமதாசாவின் அரசு வடக்கில் நாட்டைப் பிரிக்கப் போராடும் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களையும் சீமெந்தையும் பயத்தையும் வழங்குவது ஏன்? அந்த ஆயுதங்கள் எமக்கு எதிராகத் திரும்பும். ஆலவலர்களே நாட்டுக்கெதிராக நடக்கும் இந்த அவலத்தையிட்டு அமைதியாக இருக்கின்றீர்களே! விழித்தெழுங்கள்... எமது நாட்டை மேலும் இருளாக்கும் பாதைக்குள் இழுத்துச் செல்லாதீர்கள் என்றார் அவர்.

அவர் கொரில்லாப் போராட்ட வீரருக்குரிய பயிற்சியை எடுத்தாரா? எனக் கேட்கப்பட்ட போது இல்லை எனப் பதிலளித்த அவர் தான் மக்களுடனேயே வசித்ததாகத் தெரிவித்தார். அத்துடன் விஜயகுமாரணதுங்கவைத் தமது அமைப்பு கொல்லவில்லை எனத் தெரிவித்ததுடன் விஜயகுமாரணத்துங்கவின் அரசியல் பற்றித் தாம் கசப்படைந்திருந்ததாகத் தெரிவித்தார்.

அவ்விசாரணையில் அவரை யாரும் அச்சுறுத்தும் தொனியில் கேள்விகள் கேட்கவில்லை. சுமார் 20 நிமிடங்களின் பின்னர் ஜெனரல் சிசில் தனது அறைக்குச் சென்று சில அதிகாரிகளின் பெயரைச் சொல்லி அழைத்தார். கேணல் ஜவன், மேஜர் தோராதெனிய, சிரேட்ட காவல் அத்தியட்சகர் றொணி குணசிங்க உட்படச் சிலர் எழுந்து உள்ளே சென்றார்கள். அச்சந்தர்ப்பத்தில் நான் கீழ் தளத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு தோழர் எச்.பி.ஹேரத் குற்றுயிராய்க்கிடந்தார். அவரை நிமிர்தியிருத்தியிருத்திச் சில படங்கள் எடுத்தேன்.

அதன் பின்னர் விஜேவீரவைக் கீழே கூட்டிச்செல்லுமாறு பணிக்கப்பட்டது. நான் ஏதோ நடக்கப் போகின்றது என்பதை அறிந்தேன். முத்தலிவ் என்னிடம் சொன்னார் "இன்றுடன் பிரச்சனைகள் யாவும் முடிந்துவிடும்" என்றார். நான் ஏன் எனக் கேட்ட போது "விஜேவீரவின் வேலை முடியப்போகின்றது" என்றார். அப்போது அவரின் உள்ளங்கைகளை றொணி ஆராய்ந்தார். றோகன ஆயதப் பயிற்சியைப் பெற்றுள்ளாரா? என்பதை அறியவே அவ்வாறு றொணி ஆராய்ந்தார். அப்போது அவர் றொணியிடம் கேட்டார் "சாவுக்கான குறிகள் ஏதும் தெரிகின்றதா?" என்று

விஜேவீரவின் கண்களைக் கட்டினார்கள். அவர் தன்னை எங்கே கொண்டு போகப் போகின்றீகள் என வினவினார்கள். அதற்கு மௌனமே பதிலாக இருந்தது.

அவரைக் கொண்டு செல்ல இரண்டு பஜிரோ ஜீப்கள் தயாராகின. தேர்வு செய்யப்பட்ட சிலர், உடுகம்பொல, தோராதெனிய, முத்தலிவ், றொணி போன்றோர் அவ்வாகனங்களில் பயணித்தார்கள்.

நான் எனது கட்டளை அதிகாரியிடம் கேட்டேன் நாங்கள் போகத் தேவையில்லையா என்று?. அவர் மனமுடைந்த நிலையில் இருந்தது போல் இருந்தது. "இல்லை... நாம் முகாமற்குச் செல்வோம் என்றார்" நாமிருவரும் படிகளால் கீழே இறங்கும்போது ஜெனரலைச் சந்தித்தோம். ஜெனரல் எம்மைக் கண்டவுடன் ஆங்கிலத்தில் கட்டளை அதிகாரியைப் பேசினார். "நான் உனக்கொரு கட்டளையிட்டுள்ளேனே.. போ அதை நிறைவேற்றாவிட்டால் உன்னையும் ஒரு நாயைப் போல சுட்டுக் கொல்வேன்" என்றார்.

அவர் குழம்பிய மனநிலையில் மகிழுந்தில் ஏறினார். நாம் பயணிக்கும் போது றோகணவை எங்கே கொண்டு செல்கின்றார்கள் என்று கேட்டார்.... நான் எனக்குத் தெரியாது என்றேன். கட்டளை அதிகாரி அதனை அறிந்து வரச்சொல்லி என்னை அனுப்பினார். நான் ஓட்டமும் நடையுமாக முகாமிற்குள் வந்தபோது ஜெனரல் தனது காரில் ஏறவதைக் கண்டேன். என்னை அங்கே கண்டால் ஜெனலர் மீண்டும் எரிச்சல் அடைவார் எனத் தெரிந்தது. நான் மீண்டும் எமது காருக்கு ஓடினேன். ஜெனரல் வருவதைக் கட்டளை அதிகாரியிடம் சொன்னேன். அவர் எமது காரை மறைவான இடத்தில் நிறுத்தி வைத்தார். ஜெனரலின் கார் சென்ற பின்னர் நான் சென்று அந்தத் தகவலை அறிந்துகொண்டேன். நாம் நேரடியாக மயானத்திற்குச் சென்றோம்.

**அவரது கொலை தொடர்பான நியாயமான தீர்வை வரலாறு எழுதும் என நான் நம்புகின்றேன்.**

அங்கே கோல்வ்மைதான முகாமில் வைத்து மார்பில் சுடப்பட்ட விஜேவீரவின் கண்கள் கட்டப்பட்ட உடல் சீமெந்துத் தளமொன்றில் கிடத்தப்பட்டிருந்தது. அவரது கைகள் பிணிக்கப்படவில்லை.

எரிக்கும் எந்திரத்தின் சாவிகளைத் தர மறுத்த பொறுப்பானவரைத் துப்பாக்கி முனையில் வெருட்டி தோராதெனிய சாவிகளைப் பெற்றுக் கொண்டார்.

விஜேவீரவைத் தூக்கி எரிதட்டுக்கு இருவர் எறிந்தார்கள். அவரது உடல் சுவரில் முட்டிக் கீழே விழுந்தது..... அப்போது அவர் கதறினார்... அனைவரும் அதிர்ந்தார்கள்... அவர் சாகவில்லை எனத் தெரிந்தது. அப்போது "நீங்கள் சரியாக உங்களின் வேலையைச் செய்யவில்லை" என்று யாரோ சத்தமெழுப்பினார்கள். அந்தக் குரல் முத்தலிவ் உடையது என்றே நினைக்கின்றேன்.

றோகணவை மின்னடுப்பினுள்ளே திணித்தார்கள். மின்னடுப்பின் ஆழிகளை முடுக்கினார்கள்.. உள்ளே அவர் துடிப்பது தெரிந்தது.....

அவர் கோல்வ் மைதான முகாமில் துன்புறுத்தப்பட்டதாக அறிந்தேன்... அவரைச் சுட்டது இராணுவ மேஜர் ஒருவரும் காவல்துறை அத்தியட்சகர் ஒருவரும் என்று அறிந்து கொண்டேன்....

**அவரது கொலை தொடர்பான நியாயமான தீர்வை வரலாறு எழுதும் என நான் நம்புகின்றேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல்
# தமிழ் கட்சிகளின் முன்னால் உள்ள தெரிவுகள்

- - நிலாந்தன் - -

அரசியல் ஆய்வு

தென்னிலங்கையில் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி விறுவிறுப்பாகக் காய்கள் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், தமிழ்ப் பகுதிகளில் இது குறித்து எத்தகைய பரபரப்பையும் காண முடியவில்லை. தமிழ் மக்களிற் பெரும்பாலானவர்கள் இது குறித்து பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. இது தங்களுடைய வீட்டுத் தேர்தல் அல்ல. பக்கத்து வீட்டுத் தேர்தல்தான் என்பது போன்ற ஒரு மனோ நிலையே அதிகம் தென்படுகின்றது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின் தமிழ்க் கட்சிகள் எப்படிச் செயற்படப்போகின்றன என்பதைப் பொறுத்து தமிழ் மக்கள் அருட்டப்படக்கூடும். இணக்க அரசியலைச் செய்யும் கட்சிகளைப் பொறுத்த வரை இத்தேர்தல் தொடர்பில் ஒரே தெரிவுதான் உண்டு. அதாவது அரசாங்கத்தைப் பாதுகாப்பது. ஆனால், ஏனைய கட்சிகளின் முன்னால் ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுகள் உண்டு. இத்தெரிவுகள் அனைத்தும் பிராந்திய மற்றும் உலகளாவிய பேரரசுகளின் நலன்களோடு பின்னிப் பிணைந்தவைதான். எனினும், சக்திமிக்க வெளித்தரப்புகளின் நிகழ்ச்சி நிரல்களுக்குள் தமிழ் மக்களின் நிகழ்ச்சி நிரலைக் கொண்டு போய்ப் பொருத்துவது எப்படி என்பதே இப்பொழுது தமிழ்க்கட்சிகளின் முன்னாலுள்ள சவாலாகும்,

அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் ஆட்சி மாற்றத்தையே விரும்புகின்றன. இது மிக வெளிப்படையான ஒரு போக்கு. மேற்கு நாடுகளின் தூதுவர்கள் இது தொடர்பாக கூட்டமைப்பினருடன் உரையாடியிருப்பதாகவும் உத்தியோகப் பற்ற தகவல்கள் உண்டு. ஆனால், இதில் கூட்டமைப்புக்குள்ள பெரிய பிரச்சினை என்னவென்றால் அவர்கள் யாரை ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும் அது அரசாங்கத்துக்கு சாதகமாக அமையக்கூடிய வாய்ப்புகளே அதிகம் தென்படுகின்றன என்பதுதான்.

கடைசியாக நடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இதுதான் நடந்தது. கூட்டமைப்பு சரத் பொன்சேகாவை ஆதரிக்கப்போய் அது அரசாங்கத்தை நோக்கி சிங்கள இனவாத வாக்குகளைத் தள்ளி விடுவதில் முடிந்தது. அதாவது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யாரை ஆதரிக்கின்றார்கள் என்பது பொறுத்து ஜனாதிபதித் தேர்தல் களம் மேலும் மேலும் இன ரீதியாக பிளவுபடும்.


எதிர்க்கட்சிகள் இதைத் தவிர்ப்பதற்காகவே இனப்பிரச்சினை தொடர்பில் பம்மிக் கொண்டிருக்கின்றன. அதாவது சிங்கள இனவாதத்திற்கு தலைமை தாங்காவிட்டால் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்ற ஒரு நிலை.

எனவே, கூட்டமைப்பு அரசாங்கத்தை ஆதரித்தாலும் அரசாங்கம் வெல்லக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கும். எதிர்க்கட்சிகளை ஆதரித்தாலும் அது அரசாங்கத்திற்கே சாதகமாக அமையக்கூடும். ஆயின் தமது நிகழ்ச்சி நிரலைப் பலவீனப்படுத்தும் ஒரு முடிவை எடுக்குமாறு மேற்கு நாடுகள் கூட்டமைப்பிடம் கேட்குமா?.

இலங்கைத் தீவின் கடந்த ஐந்தாண்டு கால நிலைமை அப்படித்தானுள்ளது. அதாவது அரசாங்கத்தை எதிர்க்கும் எந்தவொரு நடவடிக்கையும் அரசாங்கத்தைப் பலப்படுத்துவதாகவே அமைந்து வந்துள்ளது. ஏனெனில், இலங்கைத்தீவின் வெற்றிவாதத்தின் தன்மை அத்தகையது. இலங்கைத் தீவைப் பொறுத்த வரை வெற்றிவாதம் எனப்படுவது இனவாதம்தான். எனவே, எந்தளவுக்கு இனவாதம் தூண்டப்படுகின்றதோ அந்தளவுக்கு வெற்றிவாதம் வெற்றிபெறும்.

இப்படியாகத் தமது நிகழ்ச்சி நிரலைப் பின்னுக்கிழுக்கும் ஒரு தெரிவை மேற்கு நாடுகள் எடுக்கத் துணியுமா? அப்படி ஒரு முடிவை எடுக்காவிட்டால் கூட்டமைப்பு வேறெந்த முடிவை எடுக்கலாம்?

நிச்சயமாக அவர்களால் அரசாங்கத்தை ஆதரிக்க முடியாது. அப்படி ஆதரித்தால் அடுத்த வருடம் ஜெனிவாவுக்குப் போக முடியாது. மட்டுமல்ல பொதுத் தேர்தலில் தமது சொந்த மக்களை நோக்கி வரவும் முடியாது.




ஆயின் முன்றாவது தெரிவு எது? வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது விடுவதா? அல்லது இது தொடர்பாக கடந்த வாரத்திற்கு முதல் வாரம் நானெழுதிய கட்டுரைக்கு இணையத்தத்தில் எழுதப்பட்ட ஒரு பின்னூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டதுபோல தமிழ் மக்கள் வாக்களிக்கச் சென்று அங்கு வாக்குச் சீட்டுகளை சேதமாக்கி அதை ஓர் எதிர்ப்பு நடவடிக்கையாக முன்னெடுக்க வேண்டுமா?

ஆனால், இத்தகைய தெரிவுகளை அதாவது தேர்தலைப் புறக்கணிப்பது அல்லது வாக்களிக்காது விடுவது போன்ற தெரிவுகளை மேற்கு நாடுகள் பொதுவாக ஆதரிப்பதில்லை. சில நெருக்கடியான நிர்ணயகரமான தருணங்களில் வாக்களிக்காமல் விடுவதும் ஒரு ஜனநாயக உரிமைதான் என்பதை மேற்கத்தய நாடுகள் ஏற்றக்கொள்வதில்லை.

இந்தியாவில் நோட்டா (NOTA) எனப்படும் ஒரு தெரிவு கடந்த ஆண்டு தேர்தலில் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதன்படி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் யாரையும் ஏற்றுக்கொள்ளாத வாக்காளர்கள் நோட்டா என்ற தெரிவை எடுக்கலாம். கடைசியாக நிகழ்ந்த இந்தியப் பொதுத் தேர்தலில் ஏறக்குறைய 60 இலட்சம் வாக்காளர்கள் இவ்வாறு நோட்டா தெரிவுக்கு வாக்களித்ததை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இது மொத்த வாக்களிப்பில் 1.1 விகிதமாகும். ஆனால். நோட்டா தெரிவு என்பது வாக்களிப்பைப் புறக்கணிப்பதல்ல. வேட்பாளர்களைப் புறக்கணிப்பதே. வாக்களிப்பதன் மூலம் வேட்பாளர்களை நிராகரிக்கும் ஒரு தெரிவு இது.

வாக்களிப்பது எப்படி ஒரு ஜனநாயக உரிமையோ அப்படியே வாக்களிக்காமல் விடுவதும் ஒரு ஜனநாயக உரிமைதான் என்ற வாதத்தை மேற்கு நாடுகள் ஒருவித ஒவ்வாமையோடுதான் பார்க்கின்றன. வாக்களியாமை என்பது ஜனநாயக முறைமையின் ஆன்மாவைப் பலவீனப்படுத்திவிடும் என்பது அவர்களுடைய வாதமாகக் காணப்படுகின்றது.

சிறிய மக்கள் கூட்டங்களின் அச்சங்களைக் கவனத்திற்கொள்வதா அல்லது ஒட்டுமொத்த ஜனநாயக அமைப்பைப் பாதுகாப்பதா என்ற விவாதம் எழும் போதெல்லாம் மேற்கத்திய ஜனநாயக பாரம்பரியமானது சிறிய மக்கள் கூட்டத்தின் அச்சங்களைப் புறக்கணித்த சந்தர்ப்பங்கள் அதிகமுண்டு.

அதேசமயம், ஐ.நா. மன்றத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும்போது முக்கிய நாடுகளே வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத சந்தர்ப்பங்களையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

மிகவும் குறிப்பாக, அண்மை ஆண்டுகளில் ஐ.நா.வில் நிகழும் வாக்கெடுப்புக்களின்போது இப்படியாக வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமை என்பது ஒரு புதிய பலமான போக்காக உருவாகி வருவது ஏற்கனவே அவதானிக்கப்பட்டுள்ளது. ஒரு துருவ உலக ஒழுங்கில் ஏற்பட்ட விலகல்களைப் பிரதிபலிக்குமொரு போக்காகவும் இது பார்க்கப்படுகின்றன. சிரியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு எதிரான ஐ.நா. தீர்மானங்களின் போது இவ்வாறு பல நாடுகள் வாக்களிப்பிலிருந்து விலகியிருந்தமையை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

எனவே, ஓர் உலகப் பொதுமன்றிலேயே சக்திமிக்க நாடுகள் தமது ராஜிய நலன்களை முன்னிறுத்தி வாக்கெடுப்பிலிருந்து விலகி நிற்கலாம் என்றால், சிறிய பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டங்கள் உள்நாட்டுத் தேர்தல் களிலும் ஏன் அப்படிப்பட்ட முடிவுகளை எடுக்கக்கூடாது?

இவையெல்லாம், தமிழ்த் தலைவர்கள் மேற்கத்தைய ராஜதந்திரிகளிடம் கேட்கவேண்டிய கேள்விகள். தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவது என்பதை ஒரு புனிதச் சடங்காகப் போற்றும் எவரும் இலங்கைத் தீவில் கடந்த சுமார் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அனைத்து அநீதிகளும் இதே தேர்தல் முறைமைக்கூடாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்க ளாலேயே இழைக்கப்பட்டன என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எனினும் இத்தகைய எல்லா விவாதங்களுக்கும் அப்பால் தேர்தல் முறைமையைப் பலப்படுத்த வேண்டும் என்பதே மேற்கு நாடுகளின் முடிவாயிருக்கும். தமிழ்க் கட்சிகளிடமும் அதுவே அறுவுறுத்தப்படும்.

மேலும் வெற்றிவாதத்தைத் தோற்கடிக்கக் கிடைக்குமுன் எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்த வேண்டும் என்றும் மேற்கு நாடுகள் சிந்திக்கின்றன. இது ஒரு சூதாடியின் மனோநிலையைப் போன்றது. வெற்றி கிடைக்குமோ இல்லையோ விளையாடிப் பார்க்கலாம் என்ற ஓர் மனோநிலை. அண்மை ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் அரசாங்கத்தின் வாக்கு வங்கி வீழ்ச்சியுற்று வருவதாகக் கணிப்புகள் கூறுகின்றன. எனவே,



எதிர்க்கட்சிகளைப் பலப்படுத்தி அரசாங்கத்தை வீழ்த்தக் கிடைக்கும் எந்தவொரு வாய்ப்பையும் தவறவிட மேற்கு நாடுகள் தயாரில்லை.



ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி கிடைக்காவிட்டாலும் கூட, அத்தேர்தலை நோக்கி ஒன்று திரட்டப்பட்டு பலப்படுத்தப்பட்ட எதிர்க்கட்சிகளை சில சமயம் பொதுத் தேர்தல் ஒன்று நடக்குமாயிருந்தால் அதில் வெற்றிகரமாகக் களமிறங்கலாம் என்றொரு நம்பிக்கையும் மேற்கு நாடுகளிடம் உண்டு. குறைந்த பட்சம் நாடாளு மன்றத்திலாவது எதிர்க்கட்சிகளைப் பலப்படுத்துவதன் மூலம் முன்பு சந்திரிகா - ரணில் காலத்தில் காணப்பட்டதுபோல ஒருவித இரட்டை ஆட்சி முறையையாவது உருவாக்கலாமா என்ற ஓர் எதிர்பார்ப்பும் அவர்களிடம் இருக்கக்கூடும். இவை யாவும் ஊகங்களே. எதுவாயினும், இலங்கைத் தீவின் வெற்றிவாதத்தின் பண்பை, அதாவது இனவாதத்தின் பண்பை மேற்கு நாடுகள் சரியாக எடைபோட்டிருக்கின்றனவா இல்லையா என்பதை ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளிக்கொண்டு வந்துவிடும்.

அதேசமயம், இந்தியாவும் ஏறக்குறைய இப்படித்தான் சிந்திப்பதாகத் தெரிகிறது. அதாவது, ஆட்சி மாற்றம். மோடியின் அரசாங்கம் அது திட்டமிட்டிருக்கும் பொருளாதார வளர்ச்சியை எட்டுவதாயிருந்தால் அதற்கு பிராந்தியத்தில் பதற்றமற்ற ஓர் அரசியல் சூழல் அவசியம். எனவே, பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகப்படுத்தாத ஓர் அரசாங்கமே இந்தியாவின் தெரிவாயிருக்கும்.

சீன நிர்மூழ்கிகளைத் தனது கடல் எல்லைக்குள் கொண்டுவரும் ஓர் அரசாங்கத்தை விடவும், மேற்கிற்கு அதிகம் விசுவாசமான எதிர்க்கட்சிகளின் கூட்டு ஒப்பீடளவில் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையைப் பேண உதவும் என்று இந்தியா சிந்திக்க முடியும்.

பதற்றமில்லாத ஓர் பிராந்திய அரசியலே இப்போது மோடி அரசாங்கத்தின் முதன்மைத் தெரிவாயுள்ளது. அந்த அடிப்படையில்தான் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முடிவுகளும் எடுக்கப்படும். இது தொடர்பில் இந்தியா ஏற்கனவே கூட்டமைப்புத் தலைவர்களுடன் உரையாடியிருப்பதாகவும் நம்பப்படுகின்றது. அதாவது ஆட்சி மாற்றத்தை ஆதரிக்கும்படி.

ஆனால், அதை இந்தியா வெளிப்படையாகச் செய்யுமா? எதிர்க்கட்சிகளின் வெற்றி வாய்ப்புக் குறித்த சந்தேகங்கள் இருக்கும் வரை இலங்கை அரசாங்கத்தை வெளிப்படையாக முரண் நிலைக்குத் தள்ள புதுடில்லி முயற்சிக்காது.

இது தான் இப்போதுள்ள நிலைமை. இதற்கேற்பவே தெரிவுகளும் அமையும். இதுதவிர வேறு ஒரு தெரிவைக் குறித்தும் தமிழர்களில் ஒரு பகுதியினர் சிந்திப்பதாக அறிய முடிகிறது. அதாவது ஜனாதிபதித் தேர்தலைத் தமிழர்கள் புறக்கணிப்பதற்குப் பதிலாக அதை ஒரு பொதுசன வாக்கெடுப்பாக பயன்படுத்தலாமா? என்ற தெரிவே அது.

ஜனாதிபதித் தேர்தல் எனப்படுவது சிங்கள மக்கள் தங்களுடைய தலைவரை தெரிவு செய்யும் ஒரு தேர்தலே என்று கருதும் மேற்படி தரப்பானது, இதில் தமிழ்க் கட்சிகள் தங்களுடைய பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி தமிழ் மக்களின் ஒட்டுமொத்தக் கோரிக்கைகளுக்கான உத்தியோகப்பற்றற்ற ஒரு ஒப்பம் கோரலாக அத்தேர்தலைப் பயன்படுத்தலாமா? என்றும் சிந்திப்பதாக அறிய முடிகிறது.

இரண்டு பிரதான வேட்பாளர்களும் போதியளவு பெரும்பான்மையை பெறத்தவறும் போது இரண்டாவது சுற்றுக்கணக்கெடுப்பில் தமிழ் மக்களுடைய வாக்குகளே தீர்மானிக்கும் வாக்குகளாக அமையக் கூடும் என்று ஓர் எதிர்பார்ப்பும் உண்டு.

இது விசயத்தில் தமிழ்க் கட்சிகள் எத்தகைய முடிவுகளை எடுக்கும்? தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பெரும்பாலும் தேர்தலைப் புறக்கணிக்கக்கூடும் என்றே தெரிகிறது. அவர்கள் அப்படி ஒரு முடிவெடுத்தால் அதன் பின் தேர்தலை வேறுவிதமாகக் கையாள்வது என்ற தெரிவுக்கு இடமில்லை. அதேசமயம் கூட்டமைப்பு எத்தயைதொரு முடிவை எடுக்கும்? சக்திமிக்க நாடுகளின் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படியும் ஒரு முடிவையா? அல்லது வெளித்தரப்புகளின் நிகழ்ச்சி நிரல்களுக்குள் தமிழ் மக்களின் நிகழ்ச்சி நிரலைக் கொண்டு போய் எப்படி பொருத்துவது என்ற ஒரு முடிவையா?

நன்றி குளோபல் தமிழ்ச் செய்தி (www.globaltamilnews.net)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஆம்பளைகளே இப்படித்தான்!!

...நாட்டு நடப்பு...



அவன்திக்காவின் ஆரம்ப கல்வி நடவடிக்கைகள் மிகவும் சிறப்பாக இருந்தது. மொனராகலை அவளின் சொந்த ஊர். அப்பகுதியில் பிரபல்ய பாடசாலையொன்றில் அவள் கல்வி கற்று வந்தாள். ஐந்தாம் ஆண்டு புலமை பரிசு பரீட்சையில் மொனராகலை மாவட்டத்திலே அதி உயர்ந்த புள்ளியை பெற்ற அவளால் க.பொ.த (சாதாரண) பரீட்சையில் சித்தி பெற முடியாமல் போனமை பாடசாலை வட்டாரத்திலும், ஊரிலும், பெரும் வியப்பை அளித்திருந்தது.

குறித்த பரீட்சையில் அவன்திக்கா சகல பாடங்களிலும் நல்ல புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றாலும் கணிதப்பாடத்தில் அவளால் சித்தி பெற முடியாமல் போனமை அவளின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்கு பெரிதும் பாதிப்பை தோற்றுவித்தது.

கணிதப்பாடத்தில் சாதாரண சித்தி கூட இல்லாததினால் க.பொ.த (உயர்தரம்) வகுப்பில் அவளால் உட்கார முடியவில்லை. இருப்பினும் அதிபர் அவளுக்கு கால அவகாசம் கொடுத்து உயர்தர வகுப்பிற்கு பிரவேசிக்க வாய்ப்பளித்திருந்தார். கணித பாடத்தில் எப்படியாவது சாதாரண சித்தி பெற்றால் கலை, வர்த்தக பிரிவுகளில் படிக்கலாம். மேலும் திறமை சித்தி பெற்றால் மாத்திரமே விஞ்ஞானம், கணிதம் போன்ற பிரிவுகளுக்கு செல்லலாம்.

அவள் கலைப்பிரிவில் இருந்து கொண்டே க.பொ.த (சாதாரணம்) பரீட்சைக்கு கணித பாடத்திற்காக மீண்டும் தோற்றினாள். அவள் எப்படியும் சித்தி பெறுவாள் என்று சகலரும் நம்பி இருந்தனர். ஆனால் இரண்டாம் தடவையும் கணித பாடத்தில் அவளால் சித்தி பெறமுடியவில்லை. மேலும் அவள் கல்விக்காக காலத்தை வீணாக்க விரும்பவில்லை.

அவளது கல்வி தொடர்பில் கடவுள் அவளுக்கு என்று எழுதியது அவ்வளவுதான். அதற்கு மேல் அவள் முயற்சிக்கவே விரும்பவில்லை. அவள் தனது அடுத்த நடவடிக்கைக்காக தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டாள்.

பெற்றோருக்கு அவள் ஒரே ஒரு பிள்ளை. அக்குடும்பம் தங்களது விவசாயத்தை நம்பியே வாழ்ந்தது. அவன்திக்காவின் தகப்பனார் பாரம்பரிய விவசாயக் குடும்பத்தை சார்ந்தவர். தாயார் மட்பாண்டங்கள் செய்வதில் கைதேர்ந்தவர். அத்தொழில்களுக்கு முழுக்குப் போட்டு ஓர் உத்தியோகத்தை அவள் புரிய வேண்டும் என்பதற்காகவே பெற்றோர் அவன்திக்காவை பாடசாலைக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

ஆனால் அவர்களின் நோக்கம் தோல்வியை தழுவவே அவன்திக்கா பாடசாலை கல்விக்கு முழுத்தரிப்பை வைத்துவிட்டு தலை நகருக்குச் சென்றாள். அங்கு அவளுக்கு ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வேலை கிடைத்தது. மகள் தலைநகரில் தொழில் புரிவதை பெற்றோர் பெரிதும் உயர்வாக கருதினர்.

தலைநகரான கொழும்பை பொறுத்தவரையில் கிராமப் புரங்களில் இருந்தும், பின்தங்கிய மாவட்டங்களில் இருந்தும் தொழில் வாய்ப்பை தேடிச் சென்றவர்களே அதிகம். அவ்விதம் அங்கு சென்று தொழில் புரிவதை கௌரவமாக கருதினர். பலர் அதனால் கிராமத்து தேனீர் கடையில் பீங்கான் கோப்பைகளை கழுவுவது தரக் குறைவானது என்றும், ஆனால் கொழும்பில் அதைவிட கேவலமான தொழிலை புரிந்தாலும் அது தரக்குறைவு இல்லை என்றும் கருதுவதாக இருந்து வருகின்றது.

அத்துடன் சொந்த ஊரில் பலர் பலவிதமாக கதைப்பார்கள் கொழும்பில் சொந்தக்காரர்களா இருக்கிறார்கள் விமர்சிப்பதற்கு? அதனால் தான் என்னவோ குறைந்த ஊதியத்தைக் கூட பொருட்படுத்தாது தரம் குறைந்த தொழில் என்றும் பாராமல் முண்டியடித்துக் கொண்டு கொழும்புக்கு செல்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகின்றது.

அவன்திக்காவை பொறுத்த வரையில் சுயமாகவே எதையாவது சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்திலே கொழும்பு சென்றாள். அங்கு கிராமத்தவர்கள் ஏமாறுவது சுலபம். அவ்வாறே அவர்களை ஏடாற்றுவதும் சுலபம். கொழும்பில் அன்றிலிருந்து இன்று வரை ஏமாறியவர்களின் எண்ணிக்கை எண்ணிலடங்காதவை ஆகம். பலர் ஒரு தடவை அல்ல பல தடவைகள் ஏமாறிய சம்பவங்களை நாம் நாளாந்தம் ஊடகங்கள் மூலம் அறியாமலா என்ன?

ஏமாறுபவர்கள் இந்த உலகில் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருந்து கொண்டே இருப்பார்கள். காலங்கள் கடந்து செல்லச் செல்ல அவன்திக்காவின் வாழ்விலும் பல மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன.

அவன்திக்கா மாதத்தில் ஒரு தடவை தான் மொனராகலைக்கு போவாள். அதுவும் லீவு கிடைத்தால் மாத்திரமே. அந்த ஆடைத் தொழிற்சாலை ஓர் இந்திய பிரஜைக்கு உரித்தானது. உலகத்திலுள்ள பிரபல தொழிலதிபர்களில் அவரும் ஒருவர். ஆளம் கட்சியின் அமைச்சரொருவரும் அத் தொழிற்சாலையின் இரகசிய பங்குதாரராக இருந்து வருவதால் ஊழியர்களின் ஊதிய விடயத்தில் அங்கு எவ்வித சிக்கல்களும் ஏற்படுவது இல்லை.

அந்த ஆடைத் தொழிற்சாலையின் நிர்வாகம் அங்குள்ள ஊழியர்களுக்கு போதிய சலுகைகளை வழங்கி வந்ததால் வேறு தொழிலகங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஊழியர்களுக்கு இருக்கவில்லை.

ஆகாஷ் இலங்கை துறைமுக அதிகார சபை மனிதவளப் பிரிவின் ஓர் உத்தியோகத்தன். அவன்திக்கா பணிபுரியும் ஆடைத்தொழிலகத்தின் பல வாகனங்கள் ஏற்றுமதி இறக்குமதிக்காக சென்று வருவதுண்டு. மேலும் ஆகாஷ் அந்த ஆடைத்தொழிலகத்திற்கு உத்தியோக ரீதியாக சென்று வந்த போது அவன்திக்காவை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. குறகிய காலத்திற்குள் மிக நெருக்கமான நட்பு அவர்களிடையில் காதலாக மாறியது. தனது காதல் விவகாரத்தை எந்தவித ஒழிவும், மறைவும் இன்றி அவன்திக்கா தனது தாயாரிடம் சொல்லி வைத்தாள். அந்த விடயம் எப்படியோ தகப்பனாரின் காதுக்கும் செல்லத் தவறவில்லை.

ஆகாஷைப் பற்றியும் அவனது முழு விபரத்தையும் அவன்திக்கா அவ்வப்போது பெற்றோருக்கு தெரிவிக்கவும் மறக்கவில்லை. அவளின் அந்த தொடர்பை பெற்றோர் கூட மிகவும் விரும்பி இருந்தனர்.

பெற்றோருக்கு கல்வி அறிவு இல்லாவிட்டாலும் கல்வி கற்ற தங்கள் மகளுக்கு எதிராக எதையும் செய்ய அவர்கள் முன்வரவில்லை. அவள் தனக்கு விரும்பிய ஒரு வாழ்க்கை துணையை தேடிக் கொள்வதில் அவர்கள் எந்தவித ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை. ஒரு நாள் ஆகாஷை மொனராகலைக்கு கூட்டிச் செல்ல தீர்மானித்திருந்தாள் அவன்திக்கா. அது பற்றி தனது தாயாருக்கு தெரியப்படுத்தி இருந்தாள்.

ஆகாஷ் அவளுடன் மொனராகலைக்குச் சென்று அவளின் பெற்றோரை சந்திக்க விருப்பத்தை தெரிவித்ததை அடுத்து இருவரும் மொனராகலைக்கு பேரூந்தில் சென்றுகொண்டிருந்தனர். பயணத்தின் இடையில் 'அவன்திக்கா, நாங்கள் இன்னொரு நாள் உங்கள் ஊருக்குப் போவம். இண்டைக்கு எனது நண்பன் ஒருவன் இந்த பகுதியில் தான் இருக்கிறான் அங்கே போவமா?' என்று கேட்டான்.

'உங்களுக்கென்ன பைத்தியமா? நான் உங்களை கூட்டிக் கொண்டு வருவதாக வீட்டில் சொல்லிவிட்டேன். அப்பாவும், அம்மாவும் காத்துக் கொண்டிருப்பார்கள்' என்றாள் அவன்திக்கா. ஆனால் ஆகாஷின் மனம் என்ற திரையரங்கில் 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' எனும் நீல வர்ணப்படம் ஓடிக் கொண்டேயிருந்தது. அவன் எவ்வளவோ பசப்பு வார்த்தைகளை கூறியும் அவன்திக்கா அசைந்த பாடில்லை.

தேனீர் குடிப்பதற்காக அவர்கள் பயணித்துக் கொண்டிருந்த பேரூந்து ஹொட்டல் ஒன்றுக்கு முன் நிறுத்தப்பட்டது. ஆகாஷ் அவளை 'தேனீர் குடித்துவிட்டு வருவோம்' என்று அழைத்தான். அவள் பேரூந்தை விட்டு இறங்காது 'நான் இருக்கிறேன். நீங்கள் போய் குடித்துவிட்டு வாருங்கள்' என்றாள். அவன் மட்டும் தனியே கடைக்குள் நென்றான்.

தேனீர் குடிக்கப் போன அனைத்து பிரயாணிகளும் மீண்டும் வந்து பேரூந்தில் ஏறிக் கொண்டாலும் ஆகாஷ் மட்டும் திரும்பி வரவே இல்லை. அவன்திக்கா உண்மையில் பயந்து போய் 'வாகனம் புறப்படப் போகுது கெதியாக வாங்க' என அலைபேசியில் அவனுடன் தொடர்பு கொண்ட போது, 'அது இருக்கட்டும் உனது பேக்குக்குள் ஒரு கடிதம் வைத்திருக்கிறேன் அதை எடுத்து வாசி' என பதிலளித்தான்.

அவசர அவசரமாக அவள், அவன் கூறிய பிரகாரம் அக்கடிதத்தை எடுத்து வாசித்த போது அவளின் தலை சுழர ஆரம்பித்தது. அச்செய்தியை அவள் எப்படி தாங்கிக் கொள்வது?

மேலும் அக்கடிதத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது. 'நீ எனக்கு எந்த விதத்திலும் பொருத்தமற்றவள். எனது பொழுது போக்கிற்காகவே உன்னோடு இவ்வளவு காலமும் பழகினேன். எனக்கு முறைப்பெண் ஒருத்தி ஹட்டனில் டாக்டராக இருக்கிறாள். அவளைத்தான் அடுத்தவாரம் திருமணம் செய்யப் போகிறேன். நடந்ததையெல்லாம் ஒரு கனவாக நினைத்து மறந்துவிட்டு உனக்கு பொருத்தமான ஒருவனை திருமணம் செய்துகொள்'.

பேரூந்து பி.ப9.00 மணி போல் அவன்திக்காவின் வீட்டுக்கு முன்னுள்ள தரிப்பில் நின்றது. தாயார் ஓடோடி வந்து அவன்திக்காவை கட்டிப்பிடித்து முத்தமிட்டு விட்டு 'எங்கே அந்தப் பையன் வரவில்லையா?' என்று கேட்டுக்கொண்டு அங்கு இங்கு பார்த்தார். 'அவருக்கு அவசரமான வேலை என்று இடையில் இறங்கி விட்டார், அடுத்த வாரம் வருவாராம்' என்றாள் அவன்திக்கா.

அங்கு ஏதொ பிரச்சினை ஒன்று இருப்பதை தாயார் உணர்ந்து கொண்டு மேலும் அவளுடன் பேச்சுக் கொடுக்காது தவிர்த்துக் கொண்டார். அன்று அவளுக்கு தூக்கமே வரவில்லை. பொழுது விடிந்ததும், அவள் குளித்து விட்டு 'அம்மா நான் வயலுக்கு போய் அப்பாவை பார்த்துவிட்டு வாறன்' என என்றுமில்லாதவாறு வயலுக்கு புறப்பட்டாள். வழமையாக தகப்பன் இரவு நேரங்களில் காவலுக்காக வயலிலே தங்கி விடுவார். கொட்டிலுக்குள் படுத்துக் கொண்டிருந்த அவர் எழுந்து அவன்திக்கா வயலுக்குள் வருவதை கண்டு ஓடிப்போய் அவளை கட்டிப்பிடித்து மாறி, மாறி அவள் கன்னத்தில் முத்தம் கொடுத்தார். மகளை வயலிலுள்ள கொட்டிலில் இருக்கச் சொல்லிவிட்டு மகளுக்கு சாப்பிட ஏதம் வேண்டுவதற்காக அருகிலுள்ள கடைக்குச் சென்றிருந்தார்.

தகப்பன் திரும்பி வந்து பார்த்த பொழுது அவன்திக்கா நிலத்தில் விழுந்து வாயால் நுரை கக்கியவாறு இறந்து கிடந்தார். அவளது இடது கையில் களைக்கொல்லி இரசாயன திரவ வெற்று போத்தல், அவளின் தற்கொலைக்கு தடையப் பொருளாக காணக்கிடைத்தது. அது மாத்திரமல்ல பெற்றோருக்கு எழுதப்பட்ட கடிதமும் அங்கு இருந்தது.

'நான் இழக்கக் கூடாததை ஆகாஷினால் இழந்துவிட்டேன். மேலும் இந்த உலகில் நான் வாழ விரும்பவில்லை. என்னை மன்னியுங்கள்' என அவளால் எழுதப்பட்ட கடிதம் அவளின் தற்கொலைக்கு யார் காரணம் என்பதையும் ஊர்ஜிதப்படுத்தியிருந்தது.

**- பாலையூற்றான் -**




## காந்த சிறுவன்

ரஷ்யாவை சேர்ந்த 12 சிறுவன் ஒருவனுக்கு சமீபத்தில் பயங்கரமான எலக்ட்ரிக் ஷாக் அடித்தது. அந்த விபத்தில் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த அந்த சிறுவன் மருத்துவர்களின் தீவிர முயற்சியால் குணமாகி வந்தார். ஆனால் அதற்கு பின்னர் அவர் மீது உலோகப்பொருட்கள் அனைத்து வந்து ஒட்டிக்கொள்கிறது. நாணயம், முதலிய பல பொருட்கள் அவருடைய உடலில் ஒட்டிக்கொள்வதை அறிந்து மீண்டும் மருத்துவ சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.



## உலக அழகி சுட்டுக் கொலை

தன்னுடைய காதலி சோபியா மற்றொரு வாலிபருடன் நடனமாடிதை கண்டு கடும் கோபம் அடைந்த ரூய்ஸ் சோபியாவை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளார். இதை கண்டு பயந்துபோன மிஸ் ஹோண்டுராஸ் மரியா ஜோஸ் அங்கிருந்து தப்பி செல்ல முயன்றபோது அவரையும் துப்பாக்கி சுட்டு கொலை செய்துள்ளார். மரியா ஜோஸ் லண்டனில் உள்ள உலக அழகி போட்டியில் கலந்து கொள்ள திட்டமிட்டிருந்த நிலையிலேயே இவ்வாறு நடந்துள்ளது.

## மனிதக்கழிவில் ஓடும் பேரூந்து



இங்கிலாந்தில் சமீபத்தில் புதியதாக பயோ பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த பேருந்து ஓடுவதற்கு டீசல் தேவையில்லை. மனிதக்கழிவுகள் மற்றும் கெட்டுப்போன உணவுப்பொருட்கள் ஆகியவற்றில் இருந்து தயாரிக்கப்படும் biomethane என்ற வாயுவில் இந்த பேருந்து இயங்குவதாக கூறப்படுகிறது. ஐந்து மனிதர்கள் தங்கள் வாழ்நாளில் வெளியேற்றும் கழிவுகளில் இருந்து ஒரு டாங்க் வாயு தயாரித்து அதில் சுமார் 190 கிமீ வரை பேருந்தை இயக்கலாம் என்றும் வடிவமைத்தவர்கள் கூறியுள்ளனர்.

## கரு குழந்தைக்கு அறுவை சிகிச்சை



பிரான்ஸின் பாரிஸ் நகரில் உள்ள நெக்கர் மருத்துவமனையில், கருவில் உள்ள 5 மாத குழந்தை ஒன்றிற்கு 2 மணி நேரம் அறுவை சிகிச்சை செய்து ஸ்பினா பி∴பிடியா (spina bifida) என்ற பிறப்பு குறைபாடு நோயை மருத்துவர்கள் குணப்படுத்தியுள்ளனர். குழந்தையின் மூளையில் இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும், சிகிச்சை செய்த பத்து நாட்களில் குழந்தைக்கு இருந்த மூளை நோய் குணமடைந்ததாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சூடான நீரூற்று

அமெரிக்காவில் உள்ள ஓல்ட் ∴பெய்த்∴புல் நீர் சூடேற்றியில் இருந்து, குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு முறை சூடான நீர் நீரூற்று போல மேல் நோக்கி உயரமாக வெளியே வரும் அதிசயம் நடக்கிறது. அமெரிக்காவில் மார்ச் 1, 1872-ல் தொடங்கப்பட்ட யெலோஸ்டோன் தேசியப் பூங்கா தான் முதன்முதலாக அங்குருவாக்கப்பட்ட தேசியப் பூங்கா ஆகும்.

## விபரீத குறுஞ்செய்தி



பிரித்தானியாவில் 6 வயது சிறுவன் ஒருவன் இணையதளத்தில் வீடியோ கேம்ஸை விளையாடி கொண்டிருந்தான். அப்போது திடீரென மர்ம நபர் ஒருவரின் மூலம் சிறுவனுக்கு பாலியல் கருத்துக்கள் நிறைந்த ஓடியோக்கள் குறுஞ்செய்திகளாக வந்துள்ளது. இதை பார்த்து அதிர்ச்சியடைந்த சிறுவனின் தந்தை உடனடியாக பொலிசில் புகார் கொடுத்ததுடன், அச்சம்பவம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது குறித்து விவரித்துள்ளார்.

## பள்ளி சிறுவர்கள் - கர்ப்பம்

தென் ஆபிரிக்காவில் உள்ள வெனிசுலா நாட்டில் தற்போது சிறுமிகள் கருவுற்று தாய்மையை அடைவது என்பது சாதாரண ஒரு விடயமாக மாறியுள்ளது. இங்கு சிறுமிகள் கர்ப்பமடைவது. பிரசவத்தின்போது இறப்பது குறித்து சமீபத்தில் ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது. இ,ங்கு குழந்தை பெற்றுக் கொள்ளும் 1000 பெண்களில் 101 பேர் 15 முதல் 19 வயது வரை உள்ளவர்கள் என்றும் தெரியவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிச்சம் நாளைக்கு

ஹரிஹர சர்மா வழக்கத்தைவிட அதிகம் குழம்பிப் போயிருந்தார். வீட்டில் யாரும் இல்லாத தனிமை. கூரையை வெறித்தவாறு சாய்வு நாற்காலியில் கிடப்பதில் அது கட்டவிழ்ந்து அலைகிறது.

விளக்குப் போடாமல் அறையில் இருட்டு. சுவரில் பழகிப்போன அந்தக் குஷரூப் போட்டோ. பழைய அலுவலகத்திலிருந்து மாற்றலாகி வந்தபோது எடுக்கப்பட்டது. நடு மையமாக அவர் நிற்கிறார். ஆறடிக்கு மேல் உயரம். அதை அடர்த்திப்படுத்தும் பருமன். பஞ்சகச்ச வேஷ்டிக்கு மேல் முழுக் கை சட்டையை மூடிக் கொண்டு கோட்டு, நெற்றியின் சந்தனக் கீற்றுகூட பளிச்செனத் தெரிகிறது. ராதாகிருஷ்ணன் டர்பன். பண்பாட்டுக்குப் புராதனம் உண்டு, அதற்கு அழகும் உண்டு. புராதனமாகவே போய்விடுவதும் உண்டு.

ஆபீசில் அவருக்குச் செல்லப் பெயர் ஹெட் மாஸ்டர். ஒவ்வொருவரும் மிக மரியாதையுடன் உச்சரிக்கும் பெயர். அவரது ஒழுக்கம் சார்ந்த கண்ணியமான தோற்றம், பெருந்தன்மையான- அதே சமயம்- பணிவான பழக்கம், பணிகளில் பாரபட்சமற்ற கண்டிப்பு, நேர்மை, அயரா உழைப்பு... எல்லாவற்றுக்குமான இடுகுறிப் பெயர் அது.

மணி என்ன இருக்கும்? கோவில்ல ஏதோ விசேஷம் காமாட்சி வர நேரமாகும்.

மனசுக்கு மடைமாற்ற ஒரு மாற்று வேண்டும்போல இருந்தது. மெல்ல எழுந்து சுவரோர டீபாயைத் துழாவி ரேடியோவை ஆன் செய்தார். ரொம்பப் பழைய மாடல். கல்யாணமான புதிதில் மாமனார் காமுவுக்கு சீராகத் தந்த மர்பி ரேடியோ. கொஞ்ச நேரம் வழக்கமான கரமுரா, முள்ளை அப்படியும் இப்படியும் நகர்த்தினால் பல பாஷைகளில் இடி இடித்து ஏதோ ஒலிகள் கேட்கும். வேற்றுக் கிரக வாசிகளின் முயற்சி என்னவோ தமிழுக்கு வர இன்னும் முள்ளை நிறுத்தித் தேட வேண்டும். ஒரு கருப்பு வெள்ளை போர்ட்டபிள் டி.வி.கூட என்னால் வாங்க முடியாதது காமுவுக்கும் வருத்தம் தான்.

கடபுடவென இடிச்சத்தம் தொடர்ந்து ரேடியோ கொஞ்ச நேரம் செத்துப் போய் மறுபடி உயிர் பெற்றது.

சர்மாவுக்கு எரிச்சலாக இருந்தது. ரேடியோவை நிறுத்தினார். இந்த மாயமான் இன்றும் எப்படி தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கிறது. யுகம் யுகமாக சீதையையும் ராமனையுமே பார்த்தும் எப்படி இந்த மக்கள் அதன் பின் மயங்கிச் சுற்றுகிறார்கள். அதன் மாயத்தன்மை புரியும்போது எல்லாமே முடிந்து போய்விடுவதாலா? வெளியே ஆளரவம். காமாட்சியும் மற்றவர்களும் திரும்பியாயிற்று. தன் மனபாரத்தை மறைத்துக் கொண்டு எழுந்த சர்மா ஒரு சுமூக சூழ்நிலைக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறார். "கோயில்ல ரொம்பக் கூட்டம் போல இருக்கு?"

"சாப்பிட்டேளா? கோதாவரி சம்புடத்துல உறைகுத்தி வச்சிருந்ததைத்தானே போட்டுண்டேள்?" "பசிக்கல காமு. சாப்பாடு வேணாம்" "இதென்ன மூணுநாளா ராத்திரி விரதம்... ஒரு வாய் தயிர் சாதமாவது?" "வேணாம் விடு. வயிறு டம்னு இருக்கு"

இருட்டு. பத்துமணிக்கு மேலே இருக்கும். எல்லோரும் படுத்தாயிற்று.

தொடரும் ...

# தனிக்குடித்தனம்

- கீதா -

"அப்பா, இந்தப் பணத்தை என்ன செய்யப் போறீங்க" என்றான் அவருடைய மூத்த மகன் ரகு.

ராமநாதன் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அவருக்கு அலுவலகத்திலிருந்து வரவேண்டிய பணம் எல்லாம் கைக்கு வந்து சேர்ந்தது.

"இன்னும் அதுபத்தி யோசிக்கலை. கொஞ்சம் கடன் இருக்கு. முதல்ல அதைக் கொடுக்கணும். ஏன் எதுக்கு கேக்கற" என்றார். "இப்ப நான் வீடு கட்டிட்டிருக்கேன், உங்களுக்கும் தெரியும். போட்ட எஸ்டிமேட்டை விட அதிகமாகிடும் போலிருக்கு. ஆபிஸ்ல போட்ட லோன் பத்தாது. அதனால..."

"அதனால.."

"உங்ககிட்ட இருக்கிற பணத்தைக் கொடுத்து உதவி செஞ்சீங்கன்னா நல்லாருக்கும். நீங்களும் ரிடையர் ஆகிட்டீங்க. அங்கே இங்கேன்னு அலையாம எங்க கூடவே தங்கிடுங்க. உங்களுக்குன்னு தனியா ஒரு ரூம் போட்டுக் குடுத்துடுறேன்..." என்று ரகு சொல்ல, ராமநாதன் யோசித்தார்.

"நீ சொல்றது வாஸ்தவம்தான். ரெண்டு பிள்ளைங்க இருக்கீங்க. உங்கிட்ட கொஞ்ச நாளும் சின்னவன் சேகர்கிட்ட கொஞ்ச நாளும் இருந்து அப்படியே என் ரிடையர்ட் லைஃபை தள்ளிடலாம். ஆனால் பணம் எல்லாத்தையும் உனக்குக் கொடுத்திட்டா தம்பி கேப்பானே..." என்றார்.

"சேச்சே மாட்டான்பா. அவன்கிட்ட பேசிட்டேன். இப்போ எனக்கு பணம் வேணாம். இன்னும் ரெண்டு வருஷம் கழிச்சிதான் நான் வீடு கட்டப் போறேன். அந்தச் சமயம் கொடுத்து உதவினா போதும்னுட்டான்."

"அப்படின்னா சரி... உன்கிட்டயே கொடுத்துடறேன், நல்லபடியா வீட்டை கட்டி முடி..."

கோயிலுக்குப் போயிருந்த அவருடைய மனைவி கல்யாணி வந்தாள். பெரிய மகன் கேட்டதைச் சொன்னார். கல்யாணியும் அதிகம் யோசிக்கவில்லை. "அதனால என்ன பணத்தைக் கொடுத்திடுங்க. நம்ம கடமையை முடிச்சிட்டோம். ரெண்டு பேருக்கும் கல்யாணம் முடிச்சிட்டோம். ரெண்டு பேரும் நல்லவிதமா செட்டிலாயிட்டாங்க. நமக்கு ஏதாவது ஒண்ணுன்னா பிள்ளைங்க பார்த்துக்கப் போறாங்க" என்றாள்.

பெரிய மகனும் மருமகளும் பூரித்துப் போனார்கள். பணம் கேட்டதும் எந்தத் தடையும் சொல்லாது இருவருமே சந்தோஷமாக கொடுக்கிறார்களே என்று. இந்த மாதிரி மாமனார்-மாமியார் கிடைப்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்ற சந்தோஷம் மருமகளுக்கு.

அப்படி இப்படி என்று ஒரு வருட காலம் ஓடிவிட்டது. ரகுராமன் வீடு கட்டி முடித்துவிட்டான். தம்பிக்கு கொடுக்க வேண்டிய பங்கு பணத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்துவிட்டான். அம்மாவும் அப்பாவும் மூத்தவன் ரகுராமன் வீட்டிலேயே தங்கியிருந்தார்கள், இருக்கிறார்கள்.

ஒருநாள்-

ரகுராமனிடம் அவன் மனைவி கேட்டாள். "என்னங்க... உங்க அம்மாவும் அப்பாவும் ஏன் நம்ம வீட்டிலேயே இருக்காங்க"

"என்ன கமலா இப்படி கேக்கற பிள்ளை வீட்ல இல்லாம பெத்தவங்க வேற எங்க போவாங்க நாம வீடு கட்ட பணம் குடுத்து உதவி பண்ணியிருக்காங்க. நாமதான நம்ம வீட்லேயே ஒரு ரூம் போட்டுக் குடுத்தோம். இப்ப போய் அவங்க ஏன் நம்ம வீட்ல இருக்கணும்னு கேக்கற" என்றான் சற்று கோபமாக.

"ரிடையர் ஆனதும் கெடைச்ச பணத்தை நமக்கு மட்டுமா கொடுத்தாங்க அதுல பாதியை உங்க தம்பிக்குக் கொடுத்துட்டீங்களே... எல்லா பணத்தையும் நாம மட்டும் அனுபவிக்கலையே... அப்பிடின்னா, பெத்தவங்களை வச்சி காப்பாத்துற பொறுப்பு உங்க ரெண்டு பேருக்கும் இருக்கில்ல"

"என்ன கமலா, இதுக்கெல்லலம் போய் கணக்கு பாக்கறே..."

"அதுக்காக சொல்லல...."

"நீ எதுக்காகவும் சொல்ல வேணாம். ஓய்வு காலத்தை அவங்க ஒரே இடத்துல இருந்து நிம்மதியா வாழட்டும். இங்க கொஞ்ச நாளும் தம்பிகிட்ட கொஞ்ச நாளும் அலைய விட வேணாம்.." முடிவாகச் சொன்னான் ரகு.

இதோ பாருங்க, உங்கப்பாவுக்கு ஒரு மாதிரியாகவும் உங்க அம்மாவுக்கு ஒரு மாதிரியாகவும் விதம்விதமா சமைச்சிப் போட என்னால முடியாது. உங்க தம்பியும் தம்பி பெண்டாட்டியும் மட்டும் ஜாலியா லைஃபை என்ஜாய் பண்ணுவாங்க. இங்க நான் மட்டும் காலத்துக்கும் இவங்களுக்கு வடிச்சி கொட்டிக்கிட்டு இருக்கணுமாக்கும்.." என்று முகத்தை வெடுக்கென்று திருப்பி தோளில் இடித்து தன் வெறுப்பைக் காட்டினாள்.

ரகு முறைத்ததை லட்சியம் செய்யாமல் அவள் தொடர்ந்தாள்.

"இல்லேன்னா ஒண்ணு செய்யுங்க. ரெண்டு பேர்ல ஒருத்தர் இங்க இருக்கட்டும். ஒருத்தர் தம்பி வீட்டுக்குப் போகட்டும்..." என்று முடிவாக சொல்லிவிட்டுப் போனாள் கமலா.

தன் தர்மசங்கடமான நிலைமையை எண்ணி இரவு [illegible] சரியான உறக்கமில்லை.

மறுநாள் காலை அலுவலகம் புறப்படுவதற்கு முன், அப்பா முன் போய் நின்றான் ரகு. அப்பா பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். "அப்பா" என்று கூப்பிட்டவன் மேலும் பேச வார்த்தையைத் தேடினான். தொண்டை வரை வந்த வார்த்தைகள் வெளிவரத் தயங்கின.

"என்ன ரகு.." பேப்பரிலிருந்து பார்வையை எடுக்காமல் கேட்டார். மேலும் அவன் ஏதும் பேசாமல் தயங்குவதைப் பார்த்து, தானே பேசினார்.

"நீ ஏன் இப்படி தயங்குறேன்னு தெரியும். நேத்து நீயும் உன் மனைவியும் பேசிக்கிட்டிருந்ததைக் கேட்டேன். உங்களுக்கு பாரமா இருக்க விரும்பலை..."

"அப்பா... இதுல எனக்கு விருப்பமில்லை. அவதான்... நீங்க ஒண்ணும் இதை மனசில வச்சிக்காதீங்கப்பா..." என்ற மகனை கையால் செய்கை காட்டி தடுத்தார்.

"யாரையும் நான் தப்பா நினைக்கல. உன் மனைவி சொல்றதிலேயும் காரணம் இருக்கு. என்கிட்ட இருந்த பணத்தை உனக்கு மட்டுமா கொடுத்தேன் தம்பிக்கும் கொடுத்திருக்கில்லே. அப்படினா நாங்க அங்கேயும் இங்கேயும் இருக்கிறதுதான் சரி. அதைத்தான் எங்க மருமகளும் சொல்லியிருக்கு. இதிலென்ன தப்பிருக்கு"

"இல்லேப்பா.. இது எனக்கு சரியாப் படலே.."

"இங்க பாருப்பா ரகு, நான் சொல்றத தெளிவா புரிஞ்சிக்க. எப்ப இப்படியொரு எண்ணம் வந்ததோ, சின்ன விரிசல் விழுந்ததோ, அதுக்கப்புறம் இங்கே பிடிவாதமா இருக்கிறது சரியில்லே. அதே சமயம், கமலா சொல்ற மாதிரி இங்கே கொஞ்ச நாளும் அங்கே கொஞ்ச நாளும் இருக்கவும் பிடிக்கலை. இங்க ஒருத்தரும் அங்க ஒருத்தரும் இருக்கவும் விருப்பமில்லை. கடைசி காலத்துல நாங்க ஒருத்தருக்கொருத்தர் துணையா ஆதரவா இருந்துட்டுப் போறோம். எங்களைப் பிரிச்சிடாதீங்க. அதனால நானும் அம்மாவும் தனியா போறோம்.."

"என்னப்பா சொல்றீங்க.." அதிர்ச்சியாய்க் கேட்டான்.

"ஆமாம்பா ரகு, புதுசா கல்யாணம் ஆனவங்க தான் தனிக்குடித்தனம் போகணும்னு சட்டமோ சம்பிரதாயமோ இல்லை. வயசான காலத்திலேயும் போகலாம். நீ ஒண்ணும்



வருத்தப்படாத. ஆபிஸுக்குப் போயிட்டு வா. அப்புறமா பேசிக்கலாம்..."

ரகுராமன் புறப்பட்டான். மனைவி கல்யாணியிடம் நடந்த விபரம் சொன்னார் ராமநாதன். "சரிங்க... நீங்க என்ன முடிவெடுத்தாலும் அது சரியாத்தான் இருக்கும். வர்ற பென்ஷன்லே நாம தாராளமா குடும்பம் நடத்தலாம்ங்க.." என்றாள்.

அந்த வாரக் கடைசியில் அவர்கள் தனிக்குடித்தனம் சென்றார்கள்.

# வாழ்வியல் -28

## சாமர்த்தியமும் ஏமாற்றமும்

(வி.என்.சந்திரகாந்தி)



ஆங்கிலத்தில் STRATEGY என்று கூறுவார்கள். அது யுத்த சாமர்த்தியத்தை குறிக்கும் ஒரு சொல் ஆகும். மகாபாரதத்தில் குரு சேஷத்திர யுத்தத்தில் கௌரவர்கள் பக்கத்தில் 11 அக்குரோணி சேனைகள் கலந்து கொண்டன. ஆனால் பாண்டவர்கள் சார்பில் 7 அக்குரோணி சேனைகள் மட்டுமே பங்கு பற்றின. இருப்பினும் பாண்டவர்கள் வெற்றியை சுவீகரித்து விட்டனர். அதற்கு காரணம் அவர்களது சாமர்த்தியமே! தமது வெற்றிக்காக அவர்களால் வகுக்கப்பட்ட திட்டங்கள் 'வியூகம்' என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்றது.

யுத்தத்தில் மட்டுமல்ல, இன்று அனைத்து துறைகளிலும் STRATEGY பயன்படுத்தப்படுகின்றது. ஒரு திட்டத்தை வெற்றிகரமாக பயன்படுத்த வேண்டுமானால் அத் துறை சார்ந்த சாமர்த்தியத்தை நாம் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். STRATEGY என்பது யுக்தி, சாணக்கியம், ராஜதந்திரம், வியூகம் என்று பொருள் தருவதாகும்.

யுத்தம், அரசியல், தொழில், விளையாட்டு, சினிமா, வாழ்க்கை, என்று அனைத்து துறைகளிலும் நாம் சாமர்த்தியத்தை பயன்படுத்தினாலன்றி வெற்றி கிட்டாது. சாமர்த்தியம் என்பது சிந்தனை ஆற்றலால் வருவது. எமது கல்வி, அனுபவம், பரிட்சயம் என்பவற்றின் மீது அது கட்டி எழுப்பப்படுகின்றது. ஒரு திட்டத்தை செயல்படுத்த முயலும் போது பல தடைகள், எதிர்ப்புக்கள், சிக்கல்கள், விபத்துக்கள் ஏற்படும். அவற்றையெல்லாம் சாமர்த்தியமாக முறியடித்து வெற்றியை நோக்கி முன்னேற வேண்டும். உண்மையில் சாமர்த்தியம் என்பது நேர்மை வழியில் கடைப்பிடிக்கப்பட வேண்டும். தந்திரம், ஏமாற்று ஆகியன முற்றாகத் தவிர்க்கப்படவேண்டும். குறைந்த பலத்துடன் கூடிய பலத்தையுடைய எமது எதிராளியை நேர்மையான வழியில் வெற்றி கொள்ளவே சாமர்த்தியம் பயன்படுத்தப்படவேண்டும். இந்த விதி முறையை தவறவிடக்கூடாது.

ஒரு வேந்தனுக்கு படையும், குடியும், பொருளும், நாடும் அரணும், நட்பும் வெற்றிக்கு ஏதுவாகும் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். அவரின் இயல்பு, அஞ்சாமை, அறிவு, ஈகை, ஊக்கம், ஆகிய நான்குமாகும். தூங்காமை, கல்வி, துணிவுடமை ஆகியன அவனது சாமர்த்தியத்திற்கு வலுச்சேர்க்கும் ஆள்பவன் அறத்தை கடைப்பிடிப்பவனாக இருக்க வேண்டும்.

எமது நாட்டில் எல்லாமே தலைகீழாக நடக்கின்றது. ஆளுபவர்கள் சாமர்த்தியத்தைப் பற்றி எங்கு சிந்திக்கிறார்கள். கூடிய பலத்துடன் இருந்து கொண்டு ஒரு இனத்தையே வஞ்சிப்பதில் என்ன சாமர்த்தியம் இருக்கிறது? தமது பலம் மட்டும் போதாது என்ற குறைக்கு இன்னும் இன்னும் நாடுகளை தமது பக்க துணைக்கு அழைத்துக்கொண்டு போராளி, பெண்கள், சிறுவர், கல்விமான், ஏழை என்ற எந்தவித பேதமும் இன்றியல்லவா உக்கிர தாண்டவம் புரிந்து விட்டார்கள். இன்னமும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு சிறுபான்மை இனத்தின் பிரச்சனைகளை விளங்கிக்கொண்டு பெரும்பான்மை இனத்தின் அனுசரணையுடன் அவற்றை தீர்க்க முடிந்தால்தான் அது சாமர்த்தியம்.

அப்படி எங்கே நடக்கின்றது? கண்கட்டு வித்தை போல இருப்பவற்றை இல்லையென்றும், இல்லாதவற்றை இருக்கின்றதென்றும் காட்டுவதால் ஒரு தீர்வை எப்படி எட்ட முடியும்? ஒரு பகுதியினருக்கு இதோ தீர்வை தந்துவிடுகிறோம் என்பது. மறுபகுதியினரை தீர்வை எதிர்க்கும்படி தூண்டுவது. இதுவா அரசியல் சாணக்கியம்?

ஏதொ தமிழர்களாகிய நாமும் ஆற்றுக்குள்ளால் நெருப்பைக் கொண்டு போவது போல எமது சாமர்த்தியத்தால் தப்பிப்பிழைக்கத்தானே வேண்டும்! அதற்காக த்தானே வட மாகாணசபை தேர்தலில் நாம் ஒட்டு மொத்த வாக்குகளையும் பிரதான தமிழ் கட்சிக்கு வழங்கியிருந்தோம். இந்தியாவின் தமிழ் நாட்டின் மக்களது அன்பையும் பேராதரவையும் அமோகமாக பெறும் வகையில் காய்களை நகர்த்துகிறோம். எமது புலம் பெயர்ந்தவர்களின் அரசியல் சார்ந்த செயற்பாடுகளை அக்கறையுடன் அவதானிக்கிறோம்.

அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகள் எமது மக்களின் விடுதலைக்காக ஓரளவேனும் செயல்படுகின்றனவென்றால் பாதிப்புக்குள்ளான எமது மக்கள் பல எதிர்புக்களையும் மிரட்டல்களையும் மீறி சாட்சியமளிக்க முன்வருவதேயல்லவா? ஆயுத போராட்டம் இனிமேலும் சாத்தியப்படாது என்பதை புரிந்து கொண்டு அரசியல் போராட்டத்தின் தலைமைக்கு அஹிம்சை வாதிகளை தெரிவு செய்துள்ளோம்.

இவையெல்லாம் தான் தற்போதைக்கு எம்மால் கடைப்பிடிக்கக்கூடிய சாமர்த்தியம் அல்லது ராஜதந்திரம். இன்னும் சொல்லப்போனால் எமது மாணவர்கள் மருத்துவம், பொறியியல் துறைகளில் மட்டுமல்லாமல் சட்டக்கல்வியை பிரதானமாகக் கற்க வேண்டும். அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றவர்கள் எதிரிகளுக்கு எதிராக சிம்மக் குரல் எழுப்பினார்கள். சாமர்த்தியத்திற்கு அவசியமான பிரதான தகமை பேச்சாற்றலாகும். ஒருவனிடம் பேச்சுவன்மை இருந்தால் அவனைச்சுற்றி மக்கள் திரள்வர். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பாரத பிரதமர் மோடி ஆகியோர் தமது இலட்சியத்தை எய்துவதற்கு ஏதுவாக அவர்களது பேச்சுவன்மை இருந்துள்ளது.

எமது இனத்தின் எதிர்காலம் எமது புதிய தோன்றல்களின் கையில்தான் இருக்கின்றது. வியூகம் அமைத்து ஒரு இலட்சியத்தில் வெற்றியடைவதற்கு நேர்மை மிக முக்கியம்.

எனக்கு தெரிந்த ஒரு அரச உயர் அதிகாரி இருக்கிறார். சிறுபான்மை இன உயர் அரசியல் தலைவர்களுக்கே சவால் விடும் தனது நேர்மையற்ற சாமர்த்தியத்தின் மூலம் ஒரு இனத்துக்கே குழிபறித்துக்கொண்டிருக்கிறார். அண்மையில் பெரும் நிதி மோசடி ஒன்றில் அவரது பெயரும் இணையத்தில் வெளியானமை பெரும் அதிர்ச்சி அலையையே ஏற்படுத்தியது.

நேர்மை இல்லாத சாமர்த்தியம் எப்படி போய் முடியும் என்று பாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## மனிதம்

பல நாட்களாய்க்
காண்கின்றேன் நான்
அவனை..
திருமலையின் தெருவழியில்

அன்றோர் நாள்
நிறுத்தாமற் சென்ற
பேருந்தின்
நிறுத்தமொன்றில்
குதித்திறங்கிய போது

விழியிரண்டில்
பொருத்தியிருந்தான்
தேடலை - இரு
விரலிடுக்கில் பொருத்திக்
கொண்ட
சிகரட்டைப் போல்

மறு நாளின்
மாலைப்பொழுதில்
கடலலைகள் கால் தொட
கனவுகளை
வாங்கிக்கொண்டு..

மறுநாளும்..
மறுநாளும்..
திருமலையின் தெருவழியில்
நானும்.. அவனும்

எனினும்
அன்று கண்ட அவனை
நான் என்றுமே
காணவில்லை

விழியிரண்டும் தொலைத்தது
தேடலை
இரு விரலிடுக்கில் புகைந்தது
துண்டு பீடி

தமிழன் தானே
சோகத்தை விழுங்கவோ
துப்பவோ துணிவின்றி

மென்று கொண்டே – அவன்

சேத்திருத்தலின் விளைவாய்
கண்களின் இருப்பிடம்
குழியாய்..

அழுக்கடைந்து
ஆறிடமின்றிக்
களைப்படைந்து
கடல் காற்றினை அருந்தி
மெலிவடைந்து
உடைந்து..
உடைந்து..
அதோ.. அதோ..
அவனேதான்

துறைமுக வாசலின்
போதி மரத்தின் கீழ்
கப்பலுக்காய்க்
காத்திருக்கின்றான்
அவன்

காற்றழைத்த காகிதமாய்
கூட்டியொதுக்கிய
குப்பையாய்..

— மாயன் —
மலைமுரசு ஆசிரியர்

## நோக்கில்லா திருப்தி

மலர்கள் மலர்கின்றன
பூப்பினில் மிளிர்கின்றன

மிளிர்வில் ஆறியமர
ரீங்காரச் சுகத்தினில்

நாளுக்காய் ஏங்கும்
உலகும் உருளுகின்றது

வாழ்வும் தேய்வும்
இரவு பகலாகின்றன
மானுட விதிகளை
மாற்றுகின்றன நிரந்தரமற்று

சுழியில் அகப்பட்டு
இல்லா இருப்புகளுக்கு
அடிமையாய் போதையுமாய்
கரடு முரடான வழியில்

வண்டிலும் இழுக்கப்படுகின்றது
நோக்கில்லா திருப்திக்காய்

- நீமலை சஜ்னா -

## சிறு வாழ்வே!

வாழ்வில் பல பள்ளம்
வந்தே விழுந்தெழுந்து
தாழ்வுற்று நின்றே நந்
தமிழரால் நடைபோட்டு ...

ஏறி இறங்கி,
இருந்தே இளைப்பாறி,
ஆறியபின் மீண்டும்
அசைந்தே விரைந்தோடி....

பொல்லாப்பிணி - மருந்து -
போய்வந்து - போய்வந்து,
நல்லதெலாம் தீதாய் -
நாடும் நலங்கெட்டு ...

போர் என்றும், சாவென்றும்,
பொல்லார் வரத்தென்றும் ...
ஆர்வம் போய் - மீளாத
அடிமைச் சிறு வாழ்வே!

## வாசிப்பே நம் உயிர்நாடி

– ர.ராஜினி –
தரம் 12, சேனையூர்

பூவைப்போல மென்மையான
புதமை மிகு மாணவர்களே
அறிவு மிகு ஆற்றல் மிகு
அன்புமிகு மாணவர்களே
வாசிப்பே உங்கள் உயிர்மூச்சி

பட்டாம் பூச்சிகளாய் திரியும்
இந்த காலத்தில் எத்தனை
கனவுகள் அத்தனைக்கும்
வாசிப்பே உங்கள் உயிர்மூச்சி

பள்ளியில் படிக்கும் பிள்ளை
படிப்பினில் கருத்தூன்றி
படிப்பதற்கு
வாசிப்பே அதற்கு உயிர்மூச்சி

கல்வி எனும் மகுடத்தில்
கண்ணும் கருத்துமாய்
வாழ்ந்து காட்ட
வாசிப்பே நமது உயிர்மூச்சி

மென்மையான பூவில் வரும்
வெண்மையான நீர்த்துளி போல்
உங்கள் வாசிப்பே
நன்கு செழிக்கட்டும்

கற்றிடு உயர்ந்த கல்வி
கசடறக் கற்றுத் தேறு
உற்ற நற்புத்தி கேட்டு
உத்தமனாக வாழ
வாசிப்பே நமது உயிர்மூச்சி

நம் அறிவையும் நம்
ஆற்றலையும் வளர்ப்பது
வாசிப்பே எமது
உயிர்நாடி

## விட்டில்

பாவப்பட்ட இரவொன்றில்
ஒரு விளக்கு மட்டுமே
விழித்திருக்கிறது..அத்தனை
பாவங்களுக்கும் சாட்சியாக....
நான் விட்டு போன
இடைவெளி ஒன்றை
நிரப்புதலுக்கு நீ விரும்புகிறாய்...
சந்தர்ப்பங்களின் சதியில்
சமாதியாய் போனவன்
நான்...எனது இறுதி குழிக்கு
கொஞ்சம் தாகம்...உன்னிடம்
மிச்சம் இருக்கும் கொஞ்ச
கருணையோ அல்லது
நேற்றைய நாளின் சில
துளி பாலோ போதும் எனக்கு...
ஆனாலும் நொந்து கிடக்கும்
அந்த குழியில் நெருப்பை
கொட்டுமாறு சொல்கிறது
உனது கோட்டான் சாத்திரம்..
பழி கொள்ளும் உன்மத்தத்தின்
வாசலில் நீ நிற்கிறாய்...திருகாணியை
திருகி இன்னொரு பூட்டை
உடைக்கிறாய்....பெரிதாய் தெரிகிறது
பாவத்தின் தீ...
நெருப்பை கடன் வாங்கி
என்னை பொசுக்கும் உனது
ஞான விளையாட்டு முடிவுக்கு
வருகிறது நீ விட்டிலாய் விழ்ந்து
போகையிலே...
இன்னும் பலமாய் சிரித்து
கொள்கிறது கோட்டான்...

தேத்தாமைத்தான்

## கல்லறை



கல்லினால் கல் அறை
கருவினால் கரு அறை
கல்லறையில் துயிலும்
கருவறை தந்த நண்பனே!
கரு வானம் சிவந்தது அன்று
கதிரவனைக் காண வில்லை
காலையில் கண்டோம் - கயவனை
இதயம் துடித்தன
கண்கள் கலங்கின கயவனைக் கண்டு
கதிரோனும் வர மறுத்தான்
கண்களால் அக்காட்சிதனை
காண முடியாதென்று
மீண்டும் விழிகள் கலங்கின
புதைகுழியில் விதையாய் வீழ்ந்து
கல்லறையில் கருவாய் வாழும்
- உனக்காக

ச.நிலானி, தரம் 08,
சேனையூர் மத்திய கல்லூரி

# வள்ளுவம் காட்டும் வாழ்வியல் நெறி



கள்ளுண்டுகளித்தலையும், கள்ளுண்ணல் பெருமித வாழ்வாக இருந்த மரபுகளையும் பின்பற்றக் கூடிய ஒழுக்கமாய்க் காட்டும் வழக்கினை மாற்றி அதனைச் சமுதாயத் தீமையாக உரைத்தவர் வள்ளுவர். "உண்ணற்க கள்ளை" என்றும் அது "ஈன்றாள் முகத்தேயும் இன்னாதது" எனவும் "நஞ்சுண்பார் கள் உண்பவர்" என்றெல்லாம் மது அருந்துதலின் தீமையை உணர்த்தித் தனிமனித வாழ்வு சிறக்கும் நெறியைக் காட்டியுள்ளார் வள்ளுவர் எனலாம்.

புலால் உண்பது மனித நெறி அல்ல என்பது வள்ளுவரின் கருத்தாக உள்ளது. இன்றைய மனிதர்களின் உணவு முறையில் சைவ உணவே சிறந்தது என்பதை அறிவியல் ஆய்வுகள் மூலம் மேலைநாட்டு உணவியல் வல்லுனர்கள் தெளிவு படுத்தியுள்ளனர். தெய்வப் புலவர் வள்ளுவர் "புலால் மறுத்தல்" என்னும் அதிகாரத்துள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதனை விளக்கமுறச் செய்துள்ளார்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்

என்னும் குறட்பா மனிதன் உயர்வதற்கான வழியைக் காட்டுகிறது. இன்றைய தமிழக அரசு உயிர்க்கொலை, உயிர்ப் பலி கூடாது எனச் சட்டம் கொண்டு வந்துள்ள நிகழ்காலச் சூழலில் வள்ளுவரின் வாழ்வியல் நெறி வெற்றி பெற்றுள்ளதாகவே கருதலாம். அன்பு, பண்பு, நட்பு போன்ற வாழ்வியல் இலக்குகளை எளிய முறையில் மனித மனம் ஏற்கும் வகையில் உரைத்துத் தனி மனித வாழ்க்கையை வள்ளுவர் பண்படுத்தியுள்ளார்.

### அறநெறிப்பட்ட வாழ்க்கை

மனித வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிடாமல் விரிந்து பரந்து முக்கியத்துவம் மிக்கதாக அமைய வேண்டும். மனித மனங்களை விரிவுபடுத்தி அறவழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்காகவும் உள்ளது.

மனமாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடையது. அதுவே அறங்களில் முழுமை. மனித வாழ்க்கை நெறி என்கிறார்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

என்னும் குறட்பா இதனை உணர்த்துகிறது. அறம் என்பது பற்றிய இலக்கிய மரபுசார் கருத்தாக்கத்தை வள்ளுவர் மாற்றியமைக்கிறார். அறமெனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாத இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டது இல் என்னும் காப்பியக் கருத்தினை மறு ஆய்வு செய்து அறத்திற்குப் புதிய விளக்கங்களைத் தந்தவர் வள்ளுவர். மனத்தூய்மை, ஈகை, காதல் என்னும் தூயநெறிகளை வாழ்வியல் அறமாகக் கொள்ள வேண்டியதின் தேவையை உணர்த்தியுள்ளார்.

### வாய்மை

திருக்குறள் அன்பு, பண்பு, இன்சொல், நன்றியறிதல் என மனித மாண்புகளை விளக்குகிறது. இவற்றைப் பின்பற்றுவோர் பேற்றினையும் ஒதுக்கியவர் அடையும் இழிவினையும் திறம்படக் காட்டுகிறது. "வாய்மை" என்பதே தலையாய அறம் என்கிறது வள்ளுவம். பொய்மை கோலோச்சும் இக்கால மனித சமுதாயத்திற்கு வள்ளுவர் கருத்துக்கள் மலர்ச்சியை உண்டாக்கும் மருந்தாகக் கொள்ளலாம். அறங்களில் எல்லாம் வாய்மையே சிறப்புடையது என்பதை

பொய்யாமை பொய்யாமை ஆற்றின்
அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று

என்னும் குறட்பாவால் அறிய முடிகிறது.

### மும்மை அறம்

மனிதர்களின் வாழ்க்கை நெறியை உயர்த்தும் கோட்பாடாக வள்ளுவம் மூன்று அறங்களைப் பின்பற்றுமாறு வலியுறுத்துகிறது.

1. ஆன்மீகம் 2. ஈதல் அறம் 3. காதல் அறம்

கடவுளை "அறிவு, ஆற்றல், அப்பாற்பட்ட நிலை" என்றும் கருதுகோள் நிலையில் வைத்து மனித ஒருமைக்கும் சமுதாய அமைதிக்கும் வள்ளுவர் குறள் வழிக் குரல் கொடுத்துள்ளார்.

தொடரும்.....

முனைவர் நா. தனராசன்
முதுநிலை விரிவுரையாளர் தமிழ்த்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரிஷாவுக்கு நிச்சயம் முடிந்தது

நடிகை திரிஷாவுக்கும், சினிமா தயாரிப்பாளர் வருண்மணியனுக்கும் இரு தினங்களுக்கு முன்பு சென்னையில் திருமண நிச்சயதார்த்தம் நடந்ததாக பரபரப்பு தகவல் வெளியானது. ஆனால், தனக்கு நிச்சயதார்த்தம் நடக்கவில்லை என்று டுவிட்டரில் திரி'ா தெரிவித்து உள்ளார். திரி'ா இவ்வாறு கூறிய உடனேயே லட்சுமிராய் தனது டுவிட்டரில் "நடந்ததை ஏன் மறைக்கிறார்கள். உண்மையை ஒப்புக் கொள்ளும் தைரியம் வேண்டும்" என்று குறிப்பிட்டு உள்ளார். திரி'ாவுக்கும், லட்சுமி ராய்க்கும் நீண்ட நாட்களாக மோதல் உள்ளது. "மங்காத்தா" படத்தில் இருவரும் இணைந்து நடித்தனர். அப்போது இருந்து இந்த சண்டை தொடர்கிறது.

## 90இன் கவர்ச்சிக் கன்னி துன்பத்தில்



90களில் கவர்ச்சி நடிகையாக் கொடி கட்டிப் பறந்தவர் டிஸ்கோ சாந்தி. மறைந்த நடிகர் சி.எல். ஆனந்தனின் மகளான இவர் தமிழ் தவிர தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னட மொழி படங்களிலும் நடித்துள்ளார். 100க்கும் மேற்பட்ட படங்களில் பாடல்களுக்கும் நடனமாடியிருக்கிறார். டிஸ்கோ சாந்தி கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காக சிங்கப்பூர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார். கணவர் இறந்த பிறகு டிஸ்கோ சாந்தியின் உடல்நிலையும் மோசமடைந்ததாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் டிஸ்கோ சாந்தியின் உடல்நிலை மிகவும் மோசமடைந்ததை தொடர்ந்து அவர் சிகிச்சைக்காக சிங்கப்பூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



## மீண்டும் ஜோ

மலையாளத்தில் மஞ்சு வாரியார் நடிப்பில் வெளிவந்து வெற்றி பெற்ற 'ஹவ் ஓல்டு ஆர் யூ' படம் தமிழில் ரீமேக் செய்யப்படுகிறது. தமிழில், மஞ்சுவாரியார் நடித்த கதாபாத்திரத்தில் ஜோதிகா நடிக்கிறார். நீண்ட இடைவெளிக்கு பிறகு மீண்டும் சினிமாவில் நடிக்க வந்திருக்கும் ஜோதிகாவுக்கு ஜோடியாக ரகுமான் நடிக்கிறார். மலையாள படத்தை இயக்கிய ரோஷன் ஆண்ட்ரூவ்ஸ் தமிழ் ரீமேக்கையும் இயக்குகிறார். இப்படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு டெல்லியில் தொடங்கியுள்ளது.



## ஏன்டா பேசாம இருங்களேன்!?

விஷால் கடந்த சில வருடங்களாகவே சரத்குமார் மற்றும் ராதாரவியை மறைமுகமாக தாக்கி வருகிறார். தற்போது நேரடியாகவே தாக்கி பேசும் அளவிற்கு அவருக்கு தைரியம் வந்துள்ளது. இதேபோல் விஷால் தொடர்ந்து நடிகர் சங்கத்தை பற்றி அவதூராக பேசி வந்தால் அவரை நடிகர் சங்கத்திலிருந்து நீக்குவோம்' என்று சரத்குமார் அதிரடியாக கூறியுள்ளார்.

## அவ்வளவு பிஸியா??



ஏ.ஆர்.ரஹ்மான், திரையுலகமே கூடியிருந்த லிங்கா படத்தின் ஆடியோ விழாவுக்கு கூட வராமைக்கான காரணம் பிரமாண்ட இயக்குனர் ஷங்கர் "ஐ" படத்தின் பின்னணி இசையை முடிக்க ரஹ்மானுக்கு குறிப்பிட்ட நாள் வரை கெடு கொடுத்து அந்த தினத்திற்குள் அவர் முடித்து கொடுத்த பின்னர்தான் படத்தின் ரிலீஸ் தேதியை அறிவிக்க வேண்டும் என்று கூறியுள்ளதாக தெரிகிறது.



## பாவம் கணவர்

பிரபல பாலிவுட் நடிகை தியா மிர்சா கடந்த மாதம் தனது நீண்டநாள் காதலனை திருமணம் செய்தார். திருமணம் முடிந்த கையோடு ஹனிமூனுக்கு செல்ல திட்டமிட்டிருந்த அவர் தொடர்ந்து படப்பிடிப்பு இருந்ததால் ஹனிமூனை ஒத்திபோட்டுக்கொண்டே வந்தார். தற்போது புதிதாக இரண்டு படங்களில் நடிக்க கமிட் ஆகியுள்ளதால ஒரேயடியாக ஹனிமூனை கேன்சல் செய்துவிட்டார். இதுகுறித்து அவர் இப்போதைக்கு ஹனிமூனை நினைத்து பார்க்கக்கூட தனக்கு நேரமில்லை என்றார்.

## புகழைக் கெடுக்கும் சதி




"முல்லைவனம் 999" என்ற தனது கதையைத் திருடி "லிங்கா" திரைப்படத்தை தயாரித் துள்ளதாக மதுரையைச் சேர்ந்த தொலைக்காட்சித் தொடர் இயக்குநர் ரவிரத்தினம் தாக்கல் செய்த மனுவை நீதிபதி எம்.வேணுகோபால் விசாரித்து வருகிறார். இதற்கு பதில் மனு தாக்கல் செய்த ரஜினி, "லிங்கா" திரைப்படத்துக்கு கதையைத் திருடியதாகக் கூறி எனது பெயர், புகழுக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சி நடக்கிறது என குறிப்பிட்டுள்ளார்.

## விஜய் கோட்டைக்குள் தனுஷ்



தனுஷ் தமிழ் நாட்டில் மட்டும் இல்லை வட இந்தியாவிலும் வெற்றி கொடி கட்டியவர். தற்போது விஜய்யின் கோட்டை என்று கருதப்படும் கேரளாவிலும் தனுஷ் கால் பதித்து விட்டார். அத்துடன், இவர் நடிப்பில் விரைவில் வெளிவரவிருக்கும் "அனேகன்" படத்திற்கு கேரளாவில் விஜய் படத்திற்கு கிடைக்கும் தியேட்டர் போல 100-க்கு மேல் திரையரங்குகள் கிடைத்துள்ளன.




# சினிமுரசு

இயக்குனர் அர்ஜுனின்

## ஜெய்ஹிந்த் 2

### திரை விமர்சனம்



**அர்ஜுன், சுர்வீன் சாவ்லா நடிக்கும்**

நேர்மையான போலீஸ்காரராக இருக்கும் நாயகன் தினேஸின் அப்பா ராஜேஷ் தனது மகனை எப்படியாவது காவல்துறையில் பெரிய பதவியில் சேர்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். இந்நிலையில் தினேஷுக்கும் அதே காலனியில் வசிக்கும் அசிஸ்டென்ட் கமிஷனரின் மகனான நிதின் சத்யாவுக்கும் சண்டை வருகிறது. இந்த சண்டையில் தினேஷ், நிதின் சத்யாவை பயங்கரமாக அடித்துவிடுகிறார். இதனால் கடும் ஆத்திரமடைந்த அசிஸ்டெண்ட் கமிஷனர் இதற்கு பழிவாங்குவதற்காக ராஜேஷை தீர்த்துக்கட்ட முடிவு செய்கிறார். அவருக்கு உதவிகள் செய்து வரும் ரவுடி ராஜேந்திரன் மற்றும் அவனது கூட்டாளிகளின் உதவியோடு ராஜேஷை கொல்ல முடிவு செய்கிறார் அசிஸ்டென்ட் க மி ஷ னர்.

போலீஸ் வேலையில் சேர்ந்த தினேஷுக்கு அதன்பிறகுதான் அந்த வேலையில் உள்ள வேதனை தெரிய வருகிறது. தனது அப்பாவின் மீதும் மரியாதை வருகிறது. ஆனால் போலீஸ் வேலை என்ற பெயரில் எடுபிடி வேலை செய்வது தினேஷுக்கு பிடிக்கவில்லை. இதனால் வேலையை ராஜினாமா செய்ய முடிவு செய்யும் நேரத்தில் தனது தந்தையின் சாவுக்கு காரணமான ராஜேந்திரன் கோஷ்டியை பார்க்கின்றார் தினேஷ். அதன்பின்னர் தனது தந்தையை கொன்றவர்களை தினேஷ் எப்படி பழிவாங்குகிறார் என்பதுதான் கதை.



தினேஷுக்கு நல்ல வெயிட்டான கேரக்டர். நாயகியாக ஐஸ்வர்யா ராஜேஷ். தினேஷின் நண்பனாக வரும் கான்ஸ்டபிள் பாலா காமெடியில் கலக்கியிருக்கிறார். வில்லன் வேடத்தில் நடித்திருக்கும் நான் கடவுள் ராஜேந்திரனி வில்லத்தனமான மற்றும் காமெடி நடிப்பு மிக அருமை. நாயகன் வில்லனை பழிவாங்கும் முறை தமிழ்ப்படங்களில் இதுவரை பார்க்காதது.

மொத்தத்தில் 'திருடன் போலீஸ்' காமெடி கொண்டாட்டம்.



## சினிமா கிசு கிசு

- ஆர்யா நடிக்கும் யட்சகன் படத்தின் அஜித்தின் உண்மையான ரசிகர்கள் நடிக்கின்றனர். இப்படத்தில் ஆர்யா தலயின் மிகப் பெரிய கட்டவுட்டுக்கு பாலாபிஷேகம் செய்கின்றாராம்.
- நடிகர் சங்கத்தை விட்டு நீக்கினால் எனக்கு கவலையில்லை என்று தெரிவித்துள்ளார் நடிகர் விஷால்.
- கோவாவில் நடைபெறும் 45-வது சர்வதேச திரைப்பட விழாவில் கலந்துகொள்ள வந்த சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அளித்த பேட்டியில் அரசியலில் ஒரு போதும் ஈடுபடமாட்டேன் என்று திட்டவட்டமாக கூறினார்.
- கத்தி படம் வெளியான முதல் 12 நாட்களிலேயே ரூ 100 கோடி வசூலித்து சாதனை புரிந்தது. இதை படத்தின் இயக்குனர் முருகதாஸ் தெரிவித்திருந்தார். சமீபத்தில் மேலும் தற்போது 120 கோடியை தாண்டியதாகவும் கூறப்படுகிறது.
- சாகசம் படத்தை இசையமைக்கும் தமனுக்கு பிறந்தநாள் பரிசாக டெயோட்டோ ஃபார்ச்சூனர் கார் ஒன்றை பிரசாந்த் வழங்கினார். இதன் மதிப்பு கிட்டத்தட்ட ரூ. 30 லட்சம் இருக்குமாம்.
- கமலஹாசனின் சினிமா வாழ்க்கை புத்தகமாகிறது. பிரசாத் பிலிம் அகாடமி முதல்வர் ஹரிகரன் இந்த புத்தகத்தை எழுதுகிறார். கமல் சினிமாவில் அறிமுகமானதில் இருந்து இன்று வரை நடித்த படங்கள் பற்றிய விவரங்கள் இந்த புத்தகத்தில் இடம் பெறுகிறது.
- நயன்தாரா தனது பிறந்த நாளை மாலைதீவில் 18.11.2014 அன்று கொண்டாடினார். இதற்காகவே இரண்டு தினங்களுக்கு முன்பு குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய தோழிகளுடன் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
- திருட்டு வி.சி.டி.க்கு எதிராக நடிகர்-நடிகைகள் பங்குபெறும் ஊர்வலம் டிசம்பர் 2-ம் திகதி சென்னையில் நடக்கவிருக்கிறது. தமிழ் திரைப்பட கூட்டமைப்பு கூட்டம் சென்னை கோயம்பேட்டில் உள்ள நட்சத்திர ஓட்டலில் நடந்தது.
- இந்த வருடம் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகி வெற்றியும் பெற்ற வீரம் படத்தின் அஜித்தின் கெட்டப்பில் தான் விஜய்சேதுபதியின் வன்மம் படமும் உருவாகியுள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

## Mobile IPHONE

அப்பிள் நிறுவனம் அண்மையில் iPhone 6 மற்றும் iPhone 6 Plus ஆகிய ஸ்மார்ட் கைப்பேசிகளை அறிமுகம் செய்திருந்தது. இவை அறிமுகம் செய்யப்பட்டு குறுகிய காலத்திலேயே அடுத்ததாக அறிமுகம் செய்யவுள்ள iPhone 7 தொடர்பான தகவல்களும் கசிய ஆரம்பித்துள்ளன. அப்பிள் நிறுவனம் இப்புதிய கைப்பேசியில் அதன் கமெராவில் மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் DSLR எனும் தொழில்நுட்பத்தினைக் கொண்ட அதி துல்லியம் வாய்ந்த கமெரா உள்ளடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## யாட்டா ஃபோன் 2



இரண்டு திரைகளைக் கொண்ட YotaPhone 2 இனை வடிவமைப்பது தொடர்பான அறிவித்தல் எதிர்வரும் டிசம்பர் 3ம் திகதி லண்டனில் வெளியிடப்படவுள்ளது. முன்னர் வெளியாகிய YotaPhone ஆனது 5 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய AMOLED திரையினையும், Quad Core 2.3GHz Qualcomm Snapdragon 800 Processor இனையும் கொண்டதாகக் காணப்பட்டது.


## Information Technology

### புதிய வருகை




சமூக வலைத்தளங்களின் வரிசையில் அசைக்கமுடியாத அரசனாக முதலிடத்தில் திகழும் Facebook ஆனது, தற்போது Facebook Groups எனும் புதிய அப்பிளிக்கேஷனை அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் குழுக்களுக்கிடையில் தகவல்களை பரிமாற்றிக்கொள்ளல், குடும்பத்துடன் எப்போதும் டச்சில் இருத்தல், புரொஜெக்ட் ஒன்றில் இணைந்து செயற்படுதல், மற்றும் நண்பர்களுக்கு ஆதரவு வழங்குதல் போன்ற விடயங்களைச் செய்ய முடியும்.

### கட்டுப்படுத்த பொத்தான்கள்




கைப்பேசி தொழில்நுட்பத்தில் புரட்சியை ஏற்படுத்திய ஸ்மார்ட் கைப்பேசிகளை நேரடியாக டச் செய்யாமல் கட்டுப்படுத்துவதற்கு வயர்லெஸ் பொத்தான்கள் உருவாக்கப்பட்டுள்ளன. Flic எனும் இப்பொத்தானை பயன்படுத்தி கைப்பேசியில் சில தொழிற்பாடுகளை கட்டுப்படுத்த முடிவதுடன், அப்பிளிக்கே'ன்களையும் இயக்கக்கூடியதாக இருக்கும். iOS, Android சாதனங்களில் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

### கணனியின் வைரஸை நீக்க

கணனியில் இருக்கும் வைரஸ் மிகவும் ஆபத்தானது. ஒரு முறை கணனிக்கு வந்து விட்டால் கணனி மட்டுமல்லாது வைத்திருக்கும் தகவல்களையும் போகும் போது சேர்த்து கொண்டு போய்விடும். அதனால் வைரஸை தடுப்பது மிகவும் அவசியமான ஒன்று.

**ஆன்டிவைரஸ்**

நாளுக்கு நாள் அதிகரிக்கும் புதிய வைரஸ்களை முடக்கும் அளவுக்கு உங்க ஆன்டிவைரஸ் செயல்பட வேண்டும். அதனால் முடிந்தவரை தரமான ஆன்டிவைரஸை பயன்படுத்துங்கள்.


**அப்டேட்**

அப்டேட் செய்வதின் மூலம் வைரஸ் நுழைவதை தடுக்க முடியும். அதனால் சீரான இடைவெளியில் வைரஸ் டேட்டாஸை அப்டேட் செய்யுங்கள்.

**பூட் செட்டிங்ஸ்**

கணனியின் சி-மோஸ் செட்டிங்ஸில் முதலில் சி டிரைவ் பூட் செய்யாமல் ஏ டிரைவை பூட் செய்யும் படி மாற்றியமைக்க வேண்டும்.

**பேக்கப்**




வைரஸினால் ஃபைல்களை இழந்து விடாமல் இருக்க முடிந்தவரை அவ்வப்போது உங்க கணனியை பேக்கப் செய்யுங்கள்.

## Other Talk band B1

உடல் ஆரோக்கியத்தை பேணுவதற்காக பல்வேறு நிறுவனங்கள் கையில் அணியக்டிய ஸ்மார்ட் பேண்ட்டினை அறிமுகம் செய்துள்ளன. இவற்றின் தொடர்ச்சியாக Huawei நிறுவனமும் TalkBand B1 எனும் புதிய ஸ்மார்ட் பேண்டினை அறிமுகம் செய்துள்ளது. 6 நாட்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தக்கூடிய 90mAh மின்கலத்தினையும் உள்ளடக்கியுள்ளது. Bluetooth 3.0 தொழில்நுட்பம் காணப்படும் இச்சாதனத்தினை Android 4.0, iOS 5.0 அல்லது அதற்கு பிந்திய இயங்குதளங்களைக் கொண்ட மொபைல் சாதனங்களுடன் இணைத்து பயன்படுத்த முடியும்.


## இணைய வயர்லெஸ்



இணைய வலையமைப்பில் தற்போது வயர்லெஸ் தொழில்நுட்பம் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு Whisker எனும் வயர்லெஸ் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சாதமானது 4 மைல்கள் தொலைவிற்கு சமிக்ஞையை வழங்கக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளதுடன், சுமார் 5 வருடங்களுக்கு செயல்படக்கூடிய இரண்டு AAA மின்கலங்களையும் உள்ளடக்கியுள்ளது. இச்சாதனைத்தைப் பயன்படுத்தி தொலைவிலிருந்து வீடுகள், ரோபோக்கள், கார்கள், செல்லப் பிராணிகள் என்பவற்றினை கண்காணிக்க முடியும்.

## முப்பரிமாண பட உருவாக்கம்




Quick Response எனப்படும் QR Code தொழில்நுட்பமானது மொபைல் சாதன பாவனையில் புதிய புரட்சியினை ஏற்படுத்தியுள்ளமை அறிந்ததே.

இத்தொழில்நுட்பமானது இதுவரை காலமும் இரு பரிமாண QR Code படங்களை உருவாக்குவதன் மூலமே செயற்பட்டு வந்தது. இந்நிலையில் தற்போது இதன் தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட்டு ஸ்கான் செய்யப்படும் QR Code படங்களை முப்பரிமாண படங்களாக என்கிரிப்ட் செய்யக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

## ஒரு மனிதன்... ஒரு வாழ்வு... அவன் மனசாட்சி... சாதாரணமானவனின் மனது

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**

முன்பின் அறியாத ஒருதொலைபேசி இலக்கத்தில் இருந்து நோர்வேஜிய மொழியிலான ஒரு குறுஞ்செய்தி இப்படிக்கூறியது “சஞ்சயன்! உன்னை அந்தப் பெண்ணுக்கு மிகவும் பிடித்திருக்கிறது”

எனது நிறத்தையுடடைய ஒரு பெருங்கவி கூறியது போன்று “கழுத்துக்கும் தொண்டைக்கும் இடையே உருவம் இல்லாதொரு உருண்டை உருளத்தொடங்கியது” குறுஞ்செய்தியின் இறுதில் இருந்த கண்சிமிட்டும் சித்திரம் என் நெஞ்சுக்குள் சிமிட்டத்தொடங்கியது.

யாராக இருக்கும்? என்று மண்டையைப் பிய்த்துக்கொண்டு தேடினேன். பதில் கிடைத்தாயில்லை. அவள் யார்? எப்படி இருப்பாள்? கறுப்பா வெள்ளையா மஞ்சளா? எந்த இனத்தவள்? அ.முத்துலிங்கம் அய்யாவின் கதைகளில் வரும் குறிப்பிட்ட “அந்தப் பகுதி” மட்டும் பெருத்த ஆபிரிக்க அழகியா? இல்லை பரசீகத்துப் பைங்கிளியா? இல்லை பளிங்குபோன்ற வெள்ளைத் தேவதையா? அல்லது அற்புத அழகிகளைக்கொண்ட இனத்தவளான ஒரு தமிழிச்சியா?

தனியே வாழும் ஒருவனுக்கு, அதுவும் 47 வயது இளைஞனுக்கு இப்படி ஒரு குறுஞ்செய்தி வந்தால் அவன் நிலை எப்படி இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். ஐந்து முறை அதிஸ்டலாபச்சீட்டு விழுந்தவனை விட மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தேன் நான்.

கற்பனை எகிறிப்பாய்ந்தது.

என் சாப்பாட்டை ஊறுகாய்தான் சுவையாக்குகிறது என்பதை அறிந்த சமயற்கலை வல்லுனன் நான்.

வரப்போவது ஒரு அழகிய தமிழ் ராட்சசியாக இருந்தால், புட்டும் கருவாட்டுப்பிரட்டலும், இடியப்பமும் சொதியும், சோறும், பற்பல கறிகள், வறுவல்கள், பொரியல்கள், ரசம், பாயசம் .. நினைக்கவே வயிறு நிறைந்தது போன்றிருந்தது.

நமக்குத்தானே சாப்பாட்டில் இதுதான் வேண்டும் என்ற நியதியில்லையே.

எதையும் கொட்டிக்கொள்ளும் பன்றி நான். எனவே பின் பக்கம் பெருத்த ஆபிரிக்க அழகி கிடைத்தாலும் அவளுக்காக அவளின் சாப்பாட்டையும், அவளையும் ரசிக்கமாட்டேனா, என்ன?. அந்தளவுக்கு நான் ஒன்றும் மட்டமான ரசிகன் அல்லவே.

ஒருவேளை வருபவள் தென்கிழக்காசிய நாட்டைச் சேர்ந்த, சாண்டில்யனின் “கடற்புறா” கதாநாயகி, மஞ்சலளகியைப் போன்றவளாக இருந்தால், தவளை பாம்பு கரப்பொத்தான் போன்றவற்றையும் ஒரு கைபார்க்கலாம், என்று கற்பனையோடிக்கொண்டிருந்தது.

அவள் யார் என்பதை அறியவேண்டும் என்ற வேகத்தில் கணிணியை எடுத்து மடியில் வைத்துக்கொண்டேன். (கண்மணியை எடுத்து மடியில் வைத்துக்கொண்டேன் என்று நீங்கள் வாசித்தால் அதற்கு நான் பொறுப்பல்ல)

நோர்வேயில் தொலைபேசி எண் இருப்பின் இணையத்தின் மூலமாக பெயர், விலாசம் போன்றவற்றைத் தெரிந்துகொள்ளலாம். எனவே அவளை அங்கு தேடுவோம் என்று நினைத்தபடியே, அவளின் தொலைபேசி இலக்கத்தை எழுதி “தேடு” என்று தட்டிவிட்டேன்.

கணிணி அவளைத் தேடுவதற்கு பாவித்த கணப்பொழுதினுள் அவள் பெரும் பணம்படைத்தவளாக இருப்பாளோ? அப்போ நாம் கரையேறிவிடலாம் என்றெல்லாம் கற்பனைக்குதிரை கடிவாளத்தை அறுத்தெறிந்தபடியே காற்றில் கடுகிக்கொண்டிருந்தது.

கணிணி, அந்தப் பெயரில் உள்ளவர், தனது பெயர் விலாசத்தை வெளியிடவிரும்பவில்லை என்று குண்டைத்தூக்கிப்போட்டது. யானை மிதித்த தக்காளி போன்றாயிற்று மனம்.

இலக்கம் இருக்கிறதே, நேரடியாகவே பேசலாமே என்று ஆறுதல் சொல்லிற்று தோல்வியை ஏற்கவிரும்பாத மனம்.

எப்படி ஆரம்பிப்பது? என்ன சொல்வது? என்றெல்லாம் சிந்தித்தேன்.

“ஹீம் ... நான் சஞ்சயன் பேசுகிறேன். நீங்கள் யார் பேசுவது?” என்று எனது அழகிய குரலால் இரண்டு தடவைகள் பயிற்சி செய்து பார்த்துக்கொண்டேன். குரலில் சற்று அன்பு, ஆண்மை கலந்து பேசிப்பார்த்தேன். திருப்தியாய் இருக்கவில்லை. மீண்டும் மீண்டும் வார்த்தைகளையும், குரலின் அளவு, ஆண்மையின் அளவுகளை மாற்றிப்பார்த்து இறுதியில் இப்படித்தான் பேசுவது என்று முடிவுசெய்துகொண்டேன்.

தொலைபேசி எடுக்குமுன் குளியலறைக்குள் சென்று கண்ணாடியின்முன் நின்று பேசிப்பார்த்தேன். எனது அழகிய வண்டி வெளியே தெரிந்தது. அதை எக்கிப்பிடித்தபடியே மீண்டும் சொல்லிப்பார்த்தேன். குரலும், நானும் அழகாய் தெரிந்தது போலிருந்தது எனக்கு.

கதிரையில் அமர்ந்துகொண்டேன். தொலைபேசியை எடுத்தேன். குறுஞ்செய்தியை மீண்டும் மீண்டும் இரண்டுதடவைகள் வாசித்தேன். “உன்னை அந்தப் பெண்ணுக்கு மிகவும் பிடித்திருக்கிறது” என்ற வார்த்தைகள் அன்றொரு நாள் எஸ்.ராமகிருஸ்ணனின் “காற்றில் யாரோ நடக்கிறார்கள்” வாசித்தபோது காற்றில் எப்படி நடப்பது என்று தோன்றிய சந்தேகத்தை தீர்த்துவைத்தது.

அந்த இலக்கத்துடன் தொடர்பு கொண்டேன்.

மணி அடித்தது, மணி அடித்தது, மணி அடித்துக்கொண்டே இருந்தது.

எவரும் எடுக்கவில்லை. மனம் பொறுமையற்று அலைந்தது. மீண்டும் அழுத்தினேன் அந்த இலக்கத்தை.

மணி அடித்தது, மணி அடித்தது, தொடந்து அடித்துக்கொண்டே இருந்தது. வெறுப்பில் தொலைபேசியை துண்டிக்க நினைத்துபோது மறுகரையில் பெண்ணின் குரல் கேட்டது.

நீங்கள் யார் பேசுவது என்றேன். பெயரைச் சொன்னாள் அப் பெண். சரி என்னை யாருக்கோ பிடித்திருப்பதாய் சொன்னீர்களே அது யார்? என்றேன் ஆண்மையும், அதிகாரமும் அன்பும் கலந்து.

க்ளுக் க்ளுக் என்று சிரிக்கும் சத்தம் கேட்டது மறுபக்கத்தில் இருந்து. “ஓ அதுவா. என் வீட்டில் உன்னைச் சந்தித்த எனது நண்பிதான் அது” என்றது தொ(ல்)லைபேசி.

இவ்விடத்தில் சிறியதொரு கடயளாடியஉ ம

இன்று காலை நிம்மதியாய் தூங்கிக்கொண்டிருந்தேன். அப்போது தொலைபேசி சிணுங்கியது. எடுத்தேன்.

நீதானா கணிணி திருத்துவது என்று ஒரு பெண்குரல் கேட்டது. ஆம் என்று கூறியபோது, மதியம் வீட்டுக்கு வா. கணிணி திருத்தவேண்டும் என்று கட்டளையிட்டார் அப் பெண். விலாசத்தை வாங்கிக்கொண்டேன்.

நான் அவர் வீடு சென்ற போது அவரும் அவரின் அழகிய நண்பியும் அங்கிருந்தார்கள். அவர்களுடன் பேசியபடியே கணிணியை திருத்தினேன். கேக், தேனீர், பழங்கள் என்று அந்தப் பெண்ணிண் நண்பி என்னை பலமாய் கவனித்தார். அவரது ஐபோன் பிரச்சனையையும் அவரருகில் உட்கார்ந்திருந்து தீர்த்துவைத்தேன்.

எங்கள் பேச்சு வாழ்க்கை பற்றித் திரும்பியது. அவர் தனியே வாழ்கிறேன் என்றார். நானும் அப்படியே என்றேன். அவருக்கு வாசிப்பில் நாட்டுமுண்டு எனக்கும் அப்படியே. நாம் எங்களை மறந்து உரையாடுவதைக் கண்ட நண்பி எங்களை தனியேவிட்டுவிட்டு தனது நாயுடன் வெளியே சென்றார். நாம் உரையாடிக்கொண்டிருந்தோம். எனக்கு மீண்டும் ஒருமுறை தேனீர் ஊற்றித்தந்தார் அவர்.

கணிணி திருத்தி முடித்தேன். நாயுடன் சென்ற நண்பி வீடு திரும்பியபின் நான் வீடுசெல்லப் புறப்பட்டேன். இருவரும் வாசல்வரை வந்து வந்து வழியனுப்பினார்கள். நண்பியோ எனது ஆஸ்தான கணிணி திருத்துபவன் நீதான் என்பது போல் கன்னத்தில் முத்தமிட்டு வழியனுப்பினார்.

வீட்டுக்கு வெளியே நின்றபடியே கைகாட்டி விடைபெற்றேன்.

வீட்டுக்குள் இருந்து 70 வயதான அவ்விருவரும் கைகாட்டிய படியே, பொக்கைவாயால் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

நான் பனிகொட்டிய நிலத்தில் வழுக்கிவிழாமல் நடப்பதற்கு முயன்றபடியே நடக்கத்தொடங்கினேன்.

**மனசாட்சி புன்னகைத்தது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய செய்திச் சுருக்கம்

- **பொது வேட்பாளர் யார்?.**

ஜனாதிபதி தேர்தலில் எதிரணி சார்பாக போட்டியிட உள்ள பொதுவேட்பாளர் தொடர்பான விபரங்கள் 21.11.2014 மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ள எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் பின்னர் அறிவிக்கப்படும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் வீரகேசரி இணையத்தளத்துக்குத் தெரிவித்தார்.

- **இம்முறை தமிழ் மக்களின் வாக்குகளும் கிடைக்கும்**

கடந்த முறை அதிகளவான தமிழ் வாக்குகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பெற முடியாது போனாலும், இம்முறை தமிழ் வாக்குகளை அதிகம் பெறுவார் என அவர் இதன்போது குறிப்பிட்டார். குறிப்பாக பதுளை மாவட்டத்திலுள்ள அனைத்து தோட்டத் தொழிலாளர்களும் கொழும்பிலுள்ள தமிழர்களும் ஜனாதிபதிக்கு வாக்களிக்கத் தயாராக உள்ளதாக பிரதி அமைச்சர் பிரபா கணேசன் கூறினார்.

- **நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு சென்றவரே தலைவர்**

யுத்தத்தின் பின்னர் நாட்டை முன்னோக்கி நகர்த்தி அபிவிருத்திப் பாதையில் கொண்டு சென்றவரே எதிர் காலத்திலும் நாட்டின் தலைவராக இருக்க வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.



- **எதிரணியின் பொது வேட்பாளர்.**

கஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளராக, அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேன களமிறக்கப் படவுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

- **விகாராதிபதியை வெளிறே கோரிக்கை**

ஜாதிக ஹெல உறுமயவின் இணைத் தலைவரும் கோட்டே சதஹம் செவன விகாராதிபதியுமான அத்துரலிய ரத்ன தேரரை குறித்த விகாரையிலிருந்து வெளியேற்றுமாறு கோரி அரசாங்க ஆதரவாளர்கள் கோட்டே நகரசபை தலைவருக்கு கடிதமொன்றை கையளித்துள்ளனர்.

- **சட்டவிரோத மின்னினால் பலி**

வவுனியா - தவசிக்குளம் பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். சட்டவிரோதமாக பெறப்பட்ட மின் இணைப்பு காரணமாகவே இவருக்கு மின்சாரம் தாக்கியுள்ளதாக தெரியவந்துள்ளது. தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த 56 வயதான ஒருவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

- **சந்திரிக்கா - மைத்திரிபால சந்திப்பு**

எதிரணி பொது வேட்பாளராக போட்டியிடப்போவதாக சர்ச்சைக்குரிய வகையில் கூறப்பட்டுவருகின்ற சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை நேற்று மாலை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **ரணில் இறங்கவில்லை**

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளராக எவர் வேண்டுமானாலும் களம் இறங்கலாம் ஆனால் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க களம் இறங்கப் போவது இல்லையென ஐக்கிய தேசிய கட்சி தெரிவிவத்துள்ளது.

- **சவுதிக்கு வேலைக்காக சென்ற பெண் உயிரிழந்துள்ளார்.**

வேலைவாய்ப்புக்காக சவுதி சென்று, காயங்களுடன் நாடு திரும்பிய, ஹட்டன் – வெலிங்டன் டிவிசன் யூனிபீல்ட் தோட்டதைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான கமலேஸ்வரி (வயது 46) உயிரிழந்துள்ளார்.

ஒரு வருடமாக கண்டி, பேராதெனிய போன்ற வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றதோடு கடந்த வாரம் வெலிங்டன் தோட்டத்தில் இருக்கும் தனது வீட்டிற்கு அழைத்து வரப்பட்டார்.

கடந்த 18.11.2014 அன்று தனக்கு முடியாத நிலையில் வெளியில் எழுந்து சென்ற போது தவறி விழுந்ததோடு தனது குடும்பத்தாரால் டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்துள்ளார்.

- **அசிட் வீச்சுக்கு இலக்காகி தம்பதிகள் காயம்**

மதவாச்சி - உணகஸ்வெவ பிரதேசத்தில் தம்பதியர் அசீட் வீச்சுக்கு இலக்காகியுள்ளனர். 20.11.2014 அன்று இரவு 09.00 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் மதவாச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

- **மேலும் ஆட்சேர்ப்பு**

எதிர்காலத்தில் 120,000 இளைஞர் யுவதிகள் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன குறிப்பிடுகிறார்.

- **மரணதண்டனை விதிக்கப்படுபவர்களை விடுவிக்கக் கோரி போராட்டம்.**

இந்திய மீனவர்களை விடுதலை செய்தது போல தமது உறவினர்களையும் விடுதலை செய்யவேண்டும் என கோரி மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் யாழில் 20.11.2014 அன்று போராட்டம் நடாத்தினர்.

- **பேச்சும் முடிவும் ....**

ஜாதிக ஹெல உறுமயவின் பொது செயலாளரும் தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுகள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் பிரதி பொதுச்செயலாளரும் மேல் மாகாண சபை அமைச்சர் உதய கம்மன்பிலவும் தங்களது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

- **பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட யோகட்டில் பங்கசு**



சுகாதார பணிமனைக்கு கிடைத்த தகவலுக்கு அமைய பாடசாலைக்கு விரைந்த போது மாணவர்களுக்கு வழங்கப்பட்ட யோகட்களில் பங்கசு தொற்றியுள்ளமை கண்டறியப்பட்டதாக புளியாவத்தை பிராந்திய பொது சுகாதார பரிசோதகர் தர்மலிங்கம் வரதராஜன் தெரிவிக்கன்றார். இதன் காரணமாக மாணவர்களுக்கு யோகட் வழங்கப்படுவது 21.11.2014 தற்காலிகமாக தடை செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட யோகட்களில் பங்கசு தொற்றியமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனவும் புளியாவத்தை பிராந்திய பொது சுகாதார பரிசோதகர் கூறினார்.

- **குடிசன கணக்கெடுப்பு இறுதிக் கட்டத்தில்**

2012 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொடர்பான கணக்கெடுப்பின் இறுதி முடிவுகள் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக குடிசன மற்றும் வீட்டு வசதிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டின் சகல தரப்புகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 500 பேர் பங்குபற்றவுள்ள கருத்தரங்கின்போது கணக்கெடுப்பின் இறுதி முடிவை வெளியிடவுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டி.சி.டி. குணவர்தன குறிப்பிடுகின்றார்.

- **பொன்சேகாவுக்கு குடியுரிமை வழங்கப்படலாம்**

நேற்றிரவு அலரி மாளிகையில் இடம்பெற்ற நீண்டதொரு கலந்துரையாடலின் போது சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்கும் உரிமையுடன் குடியுரிமை மீண்டும் வழங்கப்படும் பட்சத்தில் எதிர்க்கட்சிகளை பிளவுபடுத்த ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

- **இனி சந்திரிக்காவின் பங்கு**

சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திலும், அதை தொடர்ந்த இடைக்கால ஆட்சியமைப்பிலும், எதிர்கால அரசமைப்பிலும் முக்கிய பாத்திரம் வகிப்பார் என்ற உறுதியை அவரிடம் இருந்து நேரடியாக பெற்றுக்கொண்டதாக மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

- **மாவீரர் தினத்தை ஒட்டி பல்கலைக்கழகம் விடுமுறை**

மாவீரர் வாரம் நெருங்கும் நிலையில் யாழ். பல்கலைக்கழகத்தின் பீடங்கள் அனைத்தும் விடுமுறைகளை அறிவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. விஞ்ஞான பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம் என்பன ஏற்கனவே பரீட்சை மற்றும் தொழிற்றுறை பயிற்சி, சுற்றுலா விடுமுறைகளை அறிவித்துள்ள நிலையில் கலைப்பீடமும் எதிர்வரும் 24 ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து நான்கு நாட்களை விடுமுறையாக அறிவிக்கவுள்ளதாக தெரியவருகின்றது.

- **பாடசாலை தலைமைகளின் கவனக்குறைப்பு**

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் இதுவரை தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளாமைக்கு ஒரு சில பாடசாலைத் தலைமைகளின் கவனக்குறைவே காரணமென ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நிகழ்வுகள்

## வித்தகர் விருது

2014ஆம்ஆண்டிற்கான கிழக்கு மாகாண இலக்கிய பெருவிழா 14.11.2014 அன்று அம்பாறை D.S.சேனநாயக்கா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதன் போது திருகோணமலையின் மூத்த எழுத்தாளர் திருமலை சுந்தாவுக்கு வித்தகர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. வித்தக விருதுடன் மூத்த எழுத்தாளர் கலாச்சார உத்தியோகத்தருடன் நிற்பதை படத்தில் காணலாம்.




- மூதூர் நிருபர் -

## வாழ்வாதார உதவி

- மூதூர் நிருபர் -

குச்சவெளி பிரதேச செயலகத்தின் 24 கிரமசேவகர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட 279 பயனாளிகளுக்கு 50இலட்சம் பெறுமதியான வாழ்வாதார உபகரனங்களை பொருளாதார பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே திங்கட்கிழமை விவேகானந்தா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கி வைத்தார். 48 பயனாளிகளுக்கான சுயதொழில் முயற்சி உபகரனங்கள் அமைச்சரின் கரங்களினால் வழங்கி வைக்கப்பட்டன. பயனாளிகள் தாம் விரும்பிய தையல், இயந்திரம், தண்ணீர் இறைக்கும் இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி, ஆடு, மாடு, கோழி கள் போன்ற வாழ்வின் எழுச்சிக்கான வாழ்வாதார உபகரணங்களைப் பெற்றுக் கொண்டனர்.





## தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

- க.வரதகுமார் -

பத்து வருட பூர்த்தியை கொண்டாடும் வகையில் தேசிய ஆவணவாக்கல் சபையினால் நடாத்தப்பட்ட பொது நூலகங்களுக் கிடையிலான போட்டியில் உப்புவெளி பொதுநூலகம் மூன்று மட்டங்களில் முதலாம் இடத்தினையும் அதற்கான வெற்றிக் கிண்ணங்களையும் அண்மையில் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் கீழ் இயங்கும் உப்புவெளி, சாம்பல்தீவு, வெள்ளமணல், குடாக்கரை ஆகிய பொதுநூலகங்களால் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்ட பல்வேறு போட்டி களில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவமானது 2014.11.13 அன்று காலை 9.30 மணிக்கு பிரதேச சபையின் கேட்போர் கூடத்தல் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. இதன்போது சபையின் கௌரவ தலைவர் திரு.இ.விஜேந்திரன் அவர்கள் நிகழ்விற்கு தலைமை தாங்க செயலாளர் திருமதி.மாலினி - அசோக்குமார் வரவேற்புரையை நிகழ்த்தினார். நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.எஸ்.சுதாகரன் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் கௌரவ விருந்தினராக சர்வோதய மாவட்ட இணைப்பாளர் திரு.ஜீவராஜ் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 07

01. ஒரு பண்ணையிலுள்ள ஆடுகளையும், வான் கோழிகளையும் கணக்கிட்ட போது 100 தலைகள் இருந்தன. அவற்றின் கால்களை கணக்கிட்ட போது 260 இருந்தது. பண்ணையிலுள்ள ஆடுகள் மற்றும் வான்கோழிகள் எத்தனை?
   1. 30, 70　2. 70, 30　3. 50, 20

02. ஒரு வருடத்தின் நாட்காட்டியின் படி செப்டம்பர் மாதம் 01ம் திகதி புதன்கிழமை எனில், அக்டோபர் முதலாம் திகதி என்ன கிழமை?
   1. வியாழன்　2. வெள்ளி　3. சனி

03. நான்கு மனிதர்கள் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் நடந்து 32கி.மீ சென்றனர். ஒரு மணித்தியாலத்தில் ஒருவன் நடந்த தூரம் எவ்வளவு?
   1. 2கி.மீ　2. 8கி.மீ　3. 10கி.மீ

04. ஒரு லொறியினுள் 6840கி.கி நிறையுள்ள பொருட்களை வைக்கலாம். தற்போது லொறியினுள் 3965கி.கி நிறையுடைய பொருள் உள்ளது. லொறியினுள் இன்னும் வைக்கக் கூடிய பொருளின் நிறையைகட காண்க.
   1. 10805கி.கி　2. 2515கி.கி　3. 2875கி.கி

05. ஒரு குளிர்பான போத்தல் 1லீ 250மி.லீ கொள்ளும். இவ்வாறான 6 போத்தல்கள் கொள்ளும் நீரின் கனவளவு?
   1. 7500மி.லீ　2. 7.5மி.லீ　3. 7லீ 050மி.லீ

06. முட்டைகளை அடை காத்து குஞ்சு பொரிக்காத பிராணி எது?
   1. காகம்　2. பருந்து　3. முதலை

07. இலைகுலைகளை உக்கல் அடையச் செய்து மண்ணின் வளத்தை அதிகரிக்கும் பிராணி எது?
   1. கறையான்　2. மண்புழு　3. காளான்

08. இலங்கையில் அதிக காலம் ஆட்சி செய்த அந்நியன் யார்?　1. போர்த்துக்கேயர்　2. ஒல்லாந்தர்
   3. ஆங்கிலேயர்

09. எமது நாட்டின் பண்டைய காலம் பற்றிய தகவல்களை அறிய உதவுவது எது?
   1. திரிபீடகம்
   2. உபநிடதம்
   3. ஆரியவம்சம்

10. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் சர்வதேச இலட்சினை யாது?
   1. SLS　2. SOS
   3. ISO　4. ISI

11. துருப்பிடித்த ஆணி காலில் குத்துவதால் ஏற்படக் கூடிய அபாயகரமான நோய் எது?
   1. குக்கல்　2. ஏற்புவலி
   3. காக்காவலி　4. மாரடைப்பு

12. மிகவும் வறியவர் என்பதனை விளக்கும் இன்னுமொரு இணைமொழி எது?
   1. அருமை பெருமை　2. இன்ப துன்பம்
   3. ஏழை எளியவர்　4. அணை துணை

13. தன்னிடமுள்ள பணத்தை கண்மூடித்தனமாக வீணாக செலவழிப்பவன்?
   1. உலோபி　2. சுயநலவாதி
   3. ஊதாரி　4. நாத்திகன்

14. பௌர்ணமி தினத்திலே சந்திரன் பிரகாசமாக ஒளிர்வான். இதில் சந்திரன் என்பதன் ஒத்த சொல்?
   1. பகலவன்　2. திங்கள்　3. ஞாயிறு

15. கருத்துப் பழையுள்ள கூற்றினை இனங்காண்க.
1. வாழை ஒரு செடியாகும். வாழை எமது நாட்டில் வளர்கிறது.
2. அரிசி ஒரு வகைத் தானியம். நெல்லைக் குற்றினால் அரிசி கிடைக்கும்.
3. புடோலங்காய் ஒரு வகைக் காய்கறி. புடோலங்காய் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படுகின்றது.
   1. 1　2. 2　3. 3

**சென்ற வார விடைகள்**

01. 3
02. 2
03. 1
04. 2
05. 2
06. 3
07. 3
08. 1
09. 3
10. 2
11. 3
12. 4
13. 4
14. 1
15. 1

# குறுக்கெழுத்து புதிர் 036

முடிவுத் திகதி : 28.11.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | ■ | 1 | | | | 14 | | ன் |
| 2 | 15 | | ■ | ■ | ■ | 3 | த | |
| 4 | வ | | ப | | | | | ■ |
| ட் | 5 | | 18 | ன் | | ■ | 6 | |
| 7 | | | ப் | ■ | ■ | 8 | | |
| | | ■ | | ■ | 16 | | | 17 |
| 9 | | | | ■ | | | ம் | 19 |
| | 10 | | ம் | ■ | | ணி | ■ | |
| 11 | | | வ | | 12 | | | |

## இடமிருந்து வலமாக

1. எதையும் செய்து முடிப்பவன்
2. மாலை நேரம் -குழம்பியுள்ளது
3. கொலை
4.. தழை, குழை உண்பது
5. சுயம்பு
6. தண்ணீர் தேங்கி நிற்பது
7. தோற்கருவியொன்றின் ஆங்கிலச் சொல்
8. இது தப்பினால் சோறு குழைந்துவிடும்
9. கிருஸ்ண பறவை
10. எதையும் கடத்தாத பொருள்
11. பெரியவனுக்கு எதிர்ச்சொல்
12. விசம் நிறைந்த பாம்பு

## மேலிருந்து கீழாக

6. அதிகமாக உண்டால் வரும் மயக்கம் - குழம்பியுள்ளது
8. யன்னலின் தமிழ்ச் சொல்
9. மக்கள் சேர்ந்து ஆதரவளித்து உருவாக்குவது
13. கண்டங்களில் ஒன்று
14. குதிரை வண்டில்
15. யேசு, புத்தன் போன்றோரைச் சொல்லும் பொதுச் சொல்
16. கண்ணகி எறிந்தது
17. தான்தோன்றீஸ்வரரின் 10ம் நாள் திருவிழா செய்யும் மக்களின் கோத்திரம்
18. மா, தென்னை பண்ணை
19. நாடு இதில் மூழ்குவதாலும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படுகிறது.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## புதிர் 035 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சீ | ர் | 2 வ | ரி | சை | 3 டி | கா | 19 ங் | 20 அ |
| ரு | ■ | ள் | 4 மு | ழு | 21 ம | தி | ப | மி |
| டை | 5 க | ள | ஞ் | 22 சி | ய | ம் | 6 கா | ர் |
| 7 ப | ட | ம் | ■ | ந் | க் | ■ | 23 ளி | த |
| 8 க | லை | ஞ | 9 ர் | த | க | ■ | மா | ம் |
| ல | ■ | ■ | 10 பா | னை | ம் | ச | ச | ■ |
| 11 வ | ள் | ள | ல் | ■ | ■ | 12 ம | 25 கா | ம் |
| 13 ன் | 24 க | னி | ■ | 14 கு | றி | ஞ் | 15 சி | ப |
| பு | 16 ண் | ர | 17 ப | றை | ■ | 18 சி | ட் | டி |

## பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

*திருமதி. ச. சரோஜினி,*
*இல07, லோவர் வீதி, திருகோணமலை.*

*செல்வி. கே. சர்மினா*
*176, லோவர் வீதி, உவர்மலை, திருகோணமலை.*

# சிறுவர் முரசு



## சிந்திக்க .. ..

இழந்த இடத்தை
பிடித்துக் கொள்ளலாம். . .
இழந்த காலத்தை
ஒருபோதும் பிடிக்க முடியாது. . . !!!

## வேட்டை நாய் — குட்டிக்கதை



வேட்டைக்காரன் ஒருவன் இரண்டு நாய்கள் வைத்திருந்தான். அவற்றில் ஒரு நாய் அவனுடன் வேட்டைக்குச் சென்றுவரும். மற்றொரு நாய் அவனது வீட்டைக் காவல் காத்துக் கொண்டிருக்கும். ஒரு நாயின் கடமை வேட்டையாடுதல் இன்னொரு நாயின் கடமை வீட்டைக் காவல் காத்தல்.

வேட்டைக்காரன் வேட்டைக்குச் சென்று திரும்பியதும், வேட்டையில் கிடைத்தவற்றில் வீட்டு நாய்க்கே அதிகமாகக் கொடுப்பது வழக்கம். வேட்டை நாய் நீண்ட நாள்வரை அதைப் பொருட்படுத்தாமல் இருந்தது.

ஒருநாள் வேட்டையாடிவிட்டுத் திரும்பி வந்ததும், வேட்டைக்காரன் வழக்கம்போல் செய்தான். அதைக் கண்ட வேட்டை நாய்க்கு அப்போதுதான் வருத்தம் ஏற்பட்டது.

வருத்தம் கொண்ட வேட்டைநாய், வீட்டு நாயைப் பார்த்து, ""வேட்டையாடுவது எவ்வளவு கடினமான வேலை தெரியுமா? நீ அந்தத் துன்பத்தில் பங்கு கொள்ளவில்லை. ஆனால், நான் வேட்டையில் சம்பாதித்தவற்றில் மட்டும் பெரும் பகுதியைப் பங்காகப் பெற்றுக் கொள்கிறாய். இது முறையா? இது நியாயமா? உனக்கே இது நல்லதாகத் தெரிகிறதா?"" என்று வருத்தத்துடன் கேட்டது.

அதைக் கேட்ட வீட்டு நாய் மெல்லச் சிரித்துக் கொண்டே, ""நண்பனே! அது என்னுடைய குற்றம் இல்லை. நீ என்மீது வருத்தப்படுவதில் பயனில்லை. இந்தக் குற்றம் நம் எஜமானனுடையது. அவர் எனக்கு வேட்டையாடச் சொல்லித்தரவில்லை. வேட்டையாடுவதில் என்னைப் பழக்கவில்லை. மற்றவர் சம்பாதித்த பொருளில் பங்கு பெறத்தான் சொல்லிக் கொடுத்துப் பழக்கியிருக்கிறார்!"" என்று பதில் கூறியது.

அதைக் கேட்டதும், வேட்டை நாயினால் அதற்கு மேல் ஒன்றும் பேச முடியவில்லை. இந்த அநியாயக்கார உலகத்தில் நியாயத்தை எதிர்பார்ப்பது தவறு என்பதை உணர்ந்து மௌனமாக இருந்தது.

**- அநியாயகார உலகில் நியாயம் கிட்டாது -**

## பொய்யில்லை உண்மை



சுலையூரான்

தாய் தந்தை சொல்லை
தட்டாத பிள்ளை
தேயாத நிலவாக வாழும்
பொய்யில்லை இது மெய்!

கல்வியில் நாட்டம்
கொள்ளாத பிள்ளை
வல்லவனாய் வாழ்வதில்லை
வரலாறு சொல்கின்ற உண்மை!

ஆசிரியர் சொல்வதை
அலட்சிளம் செய்யும் பிள்ளை
அறிவுள்ளவனாய் ஆவதில்லை
அனுபவத்தில் காணுமுண்மை!

இளமையில் நற் பண்பை
தொடராத பிள்ளை
எதிர்கால நல்வாழ்வை இழக்கும்
இவ்வாழ்வில் காணுமுண்மை!

உண்மையை பேசாது பொய்பேசும் பிள்ளை
உத்தமனாய் வாழ்வதில்லை
அன்பான அணைப்பை அறியாத பிள்ளை
அமைதியை இழந்திடுமுண்மை.

*செல்வி. ரா. பிரகதி*
*தரம் 03,*
*புனித மரியாள் கல்லூரி.*





*செல்வி. ஏ. பாத்திமா நஜா*
*தரம் 07, இக்பால் நகர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. தரவுத் தொகுதி ஒன்றில் உண்மை இடை உத்தேச இடையில் இருந்து (-7.5) எனனும் பெறுமானத்தால் விலகி இருந்தது. உத்தேச இடை 77.5 எனின், உண்மை இடை எது?

02. ஒரு தொடர்மாடி வீட்டில் ஒவ்வொரு தட்டிலும் 4 வீடுகள் வீதம் 5 தட்டுக்கள் உள்ளன. அத் தொடர் மாடியில் நீள, அகல, உயரங்கள் முறையே 8மீ, 6மீ, 5மீ அளவுகள் கொண்ட ஒரு கனவுரு வடிவ நீர்த் தொட்டி உள்ளது.

1. தொட்டியின் கொள்ளளவை கனமீற்றரில் தருக.
2. ஒவ்வொரு நாளும் இத்தொட்டி நிறைய நீர் நிரப்பப்படுகின்றது. ஒரு நாளைக்கு ஒரு வீட்டிற்கு 1500லீ நீர் சராசரியாக தேவைப்படுகின்றது எனின், 1 நாளைக்குத் தேவையான முழு நீரின் அளவை லீற்றரில் தருக.

03. ஜெனி ரூ95000 ஐ எளிய வட்டிப்படி 15வீதம் ஆண்டு வட்டி வழங்கும் வங்கியொன்றில் சேமிப்பில் இடுகிறார்.

1. 2 வருடத்தின் பின்னர் ஜெனியின் கணக்கில் வட்டியாக சேர்ந்திருக்கும் பணத் தொகை யாது?
2. அவர் 6 மாதத்திற்கு ஒரு முறை வட்டியை அவர் கணக்கிலிருந்து எடுப்பார் எனின், எவ்வளவு தொகையை எடுத்திருப்பார்?
3. ஜெனி இதே வீதத்தில் 2 ஆண்டுக்கு கூட்டு வட்டியில் வைப்புச் செய்தால் எவ்வளவு பணம் கூடுதலாக சேர்க்கலாம்?
4. ரூP ஐ 15வீத எளிய வட்டி படி 2 வருடம் சேமிப்பில் இட்டால் கிடைக்கும் மொத்தத் தொகை 13P/10 எனக் காட்டுக.
5. மேலே உள்ள சமன்பாட்டில் பிரதியிடுவதன் மூலம் ரூ65000 ஐ வைப்பிலிட்டால் கிடைக்கும் தொகையைக் காண்க.

04. 35செ.மீ நீளமும் 14செ.மீ அகலமும் கொண்ட செவ்வக வடிவ காட்போட் மட்டையாகும். இதன் மத்தியில் இரு நீளப்பக்கங்களையும் தொடக் கூடியவாறு மிகப் பெரிய வட்டம் வரையப்பட்டு, வட்டத்தில் 60 பாகை தவிர்ந்த எஞ்சிய பகுதி வெட்டி அகற்றப்பட்டுள்ளது.

1. வெட்டி அகற்றுவதற்கு முன் காட்போட் அட்டையின் பரப்பளவைக் காண்க.
2. அதில் வரையப்பட்ட வட்டத்தின் ஆரை எவ்வளவு?
3. அகற்றப்பட்ட பகுதியில் கூம்பு ஒன்று செய்யப்பட்டது. எனின், கூம்பின் வட்டவடிவான அடியின் சுற்றளவு யாது?

05. கோடாத நாணயம் ஒன்றும் நான்முகித் தாயக்கட்டை ஒன்றும் ஒருமித்து எறியப்படுகின்றது.

1. மாதிரிவெளியில் உள்ள மூலகங்களின் எண்ணிக்கை யாது?
2. மாதிரி வெளியை தெக்காட்டின் தளத்தில் குறித்துக் காட்டுக.
3. நாணயத்தில் தலையும் தாயக்கட்டையில் ஒற்றை எண்ணும் கிடைப்பதற்கான நிகழ்ச்சி Aயும் நாணயத்தில் பூவும் தாயக்கட்டையில் இரட்டை எண்ணும் கிடைப்பதற்கான நிகழ்ச்சி Bயும் ஆயின், அவ்விரு நிகழ்ச்சிகளும் தம்முள் புறநீங்கும் நிகழ்ச்சிகள் எனக் காட்டுக.
4. நாணயத்தில் தலை கிடைப்பதற்கான நிகழ்ச்சி P யும் தாயக்கட்டையில் ஒற்றை எண் கிடைப்பதற்கான நிகழ்ச்சி Q எனின், அவ்விரு நிகழ்ச்சிகளும் சாரா நிகழ்ச்சிகள் எனக்காட்டுக.

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**

## பாடம் : விஞ்ஞானம்

01. வளி என்பது ஒட்சிசன், நைதரன், காபனீரொட்சைட்டு போன்ற பல வாயுக்களின் கலவையாகும். அது கலவையாகக் கருதப்படுவதற்கு பின்வரும் எந்த அவதானிப்புக்கள் காரணமாகும்?

அ. வளி நிரம்பிய பலூன் வளிமண்டலத்தில் மிதத்தல்

ஆ. நீரற்ற செப்பு சல்பேரற்று தூள் வளிக்குத் திறந்து வைக்கப்படும் போது நீல நிறமாதல்

இ. சிறிதளவு சுண்ணாம்பு நீர் வளிக்கு திறந்து வைக்கப்படும் போது பால் நிறமாதல்

1. அ, ஆ 2. ஆ, இ 3. அ, இ 4. அ, ஆ, இ

02. ஒரு கடத்தியை காந்தப்புலத்தினுள்ளே அசையச் செய்யும் போது தூண்டலோட்டத்தின் திசை பற்றிப் பிளமிங்கின் வலக்கை விதி விபரிக்கிறது. இதற்கேற்ப அசைவு, புலம், தூண்டலோட்டம் முறையே

1. பெருவிரல், சுட்டுவிரல், நடுவிரல்
2. பெருவிரல், நடுவிரல், சுட்டுவிரல்
3. சுட்டுவரல், நடுவிரல், பெருவிரல்
4. நடுவிரல், சுட்டுவரல், பெருவிரல்

03. பின்வருவனவற்றுள் எது ஒரு சுழற்றொகுதி அன்று

1. தேனீச்சமுதாயம் 2. அழுகும் பிணம்
3. பசுசாணக் குவியல் 4. மாமரம்

04. நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களுள் சிலிக்கன், பொசுபரசு, குளோரின் ஆகியவை அடக்கப்பட்டுள்ள பொருட்கள் முறையே குறிப்பது.

1. கணிப்பான், தீக்குச்சி, பற்பசை 2. விமானம், மின்குமிழ், கண்ணாடி
3. கடிகாரம், தீக்குச்சி, உலர்கலம் 4. பசளை, தீக்குச்சி, பற்பசை

05. ஒரு வித்திலைத் தாவரங்களுக்கு விசேடமான இயல்பு பின்வருவனவற்றுள் யாது?

1. மூல வேர் இருத்தல் 2. நார் வேர்த் தொகதி இருத்தல்
3. தண்டு பிரிந்திருத்தல் 4. இலைகள் சிரிலைகளாக பிரிந்திருத்தல்

06. பல்வேறு மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படும் அ, ஆ, இ, ஈ எனும் நான்கு கைத்தொழில்கள் கீழே காணப்படுகின்றன.

அ. வளமாக்கி உற்பத்தி ஆ. கண்ணாடி உற்பத்தி
இ. சீமெந்து உற்பத்தி ஈ. இரும்பு உற்பத்தி

இவற்றிடையே சுண்ணாம்புக்கல் மூலப்பொருளாக பயன்படுத்தப்படும் கைத்தொழில்கள் யாவை?

1. அ, ஆ, இ மாத்திரம் 2. ஆ, இ, ஈ மாத்திரம்
3. அ, இ, ஈ மாத்திரம் 4. அ, ஆ, ஈ மாத்திரம்

07. மூலகங்கள் தொடர்பான நான்கு கூற்றுக்கள் கீழே காணப்படுகின்றன. இவற்றுள் உண்மையான கூற்றுக்கள் யாவை?

அ. மூலகங்கள் வெப்பமாக்கப்படும் போது எளிய பொருட்களாக பிரிகின்றது.

ஆ. தூய பொருளின் உருகுநிலை எப்போதும் உறுதியான பெறுமானத்தை கொண்டிருக்கிறது.

இ. நியூத்திரன்களின் திணிவு புரோத்தன்களின் திணிவுக்குச் சமம்

ஈ. யாதாயினும் ஓர் அணுவில் உள்ள கருவில் இருக்கும் நியூத்திரன்களின் எண்ணிக்கை அம்மூலகத்தின் அணு எனப்படும்.

1. அ, ஆ 2. ஆ, இ 3. இ, ஈ 4. அ, ஈ

## பாடம் : வரலாறு

1. இலங்கையை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்த இறுதி ஆட்சியாளன்

1. 6ம் பராக்கிரமபாகு 2. 1ம் பராக்கிரமபாகு
3. 1ம் விமலதர்மசூரியன் 4. 1ம் விஜயபாகு

2. அலெக்சாண்டரின் பிரதிபிம்பம் என கூறிய கல்ஜி வம்ச ஆட்சியாளன்

1. ஜலாலுத்தீன் 2. பிரோஷ் கல்ஜி
3. அலாவுதீன்கல்ஜி 4. முபாரக்ஷா

3. இலங்கையின் கலைச்செல்வாக்கை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்ட விகாரை

1. போரோபுதூர் 2. அங்கோர்வாட் 3. பலென்கே 4. பர்மியசம்பி

4. கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே சிலுவைப்போர் ஏற்பட காரணமான நகரம்

1. அலெக்சாந்திரியா 2. ஜெருசலம்
3. கொன்ஸ்தாந்துநோபிள் 4. ஜெனேவா

5. நாடுகாண் பயணத்திற்கு கீழைத்தேசத்துக்கு வருகை தந்த முதல் ஐரோப்பியர்

1. ஸ்பானியர் 2. பிரித்தானியர் 3. ஒல்லாந்தர் 4. பிரான்ஸியர்

6.
1. ஈர்ப்பு விசை A– ஜொகான்னஸ் கூட்டன் பேர்க்
2. குருதிச் சுற்றோட்டம் B– மைக்கல் சர்வேட்ஸ்
3. தொலைகாட்டி C– கலிலியோ கலிலி
4. அச்சு இயந்திரம் D– ஐசாக் நியூட்டன்

1.ABCD 2.BCDA
3.DBCA 4.DACB

7. ஐரோப்பாவில் தோன்றிய முதல் தேசிய அரசு

1. ஸ்பானியா 2. போர்த்துக்கல் 3. இத்தாலி 4. ஜேர்மனி

8. புரட்டஸ்தாந்து மதத்தின் மத்திய நிலையம்

1. ஜெனீவா 2. புளோரன்ஸ் 3. பாரீஸ் 4. லிஸ்பன்

9.
1. ரொபட் புல்டன் A. மோட்டர் வாகனம்
2. டெம்லர் B. புகைப்படகு
3. சாமுவேல் மோஸ் C. தந்திசேவை
4. றைட் சகோதரர்கள D ஆகாய விமானம

1.ABCD 2.CABE 3.BACD 4.ACDE

10. ஜேர்மனி இணைவுக்கு காரணமாக இருந்த சான்சலர்

1. மெட்டனிக் 2. பீஸ்மார்க் 3. கரிபால்டி 4. கவுண்கவூர்

11. சீனாவில் தேசிய வாதக் கொள்கையை முன்னெடுத்த தலைவர்

1. சன்-யாத்-சென் 2. மாவோ சேதுங்
3. சூ - என் - லாய் 4. யூவான்-ஷி-காய்

12. மேஜிஜியின் காலத்தில் யப்பானில் இடம்பெற்ற நிகழ்வு அல்லாதது

1. மிட்சுய் சீமேந்து நிறுவனம் அமைத்தமை
2. மானிய முறையை அடிப்பமையாகக் கொண்ட பொருளாதாரம்
3. [illegible] தோற்றம் பெறல்
4. [illegible] இருசபை பாராளுமன்ற தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர் : அகிலன்**

## Grammar

Ex 01: A friend has just come back from holiday. You ask him about it.

1. (Where/ go) ....................................
2. (go/ alone) ....................................
3. (food/ good) ....................................
4. (how long/ stay there) ....................................
5. (stay/ at a hotel) ....................................
6. (how/ travel) ....................................
7. (the weather/ fine) ....................................
8. (what/ do in the evenings) ....................................
9. (meet anybody interesting) ....................................

Ex 02 : *Are the underlined parts of these sentences* ***right*** *or* ***wrong***

1. Do you know about Sue? She's given up her job.
   Right
2. The chinese have invented printing.
   ..............................
3. How many plays has Shakespeare written?
   ..............................
4. Have you read any of Shakespeare's plays
   ..............................
5. Aristotle has been a Greek philosopher.
   ..............................
6. My grandparents have got married in London.
   ..............................
7. Where have you been born?
   ..............................

## பல மில்லியன்...

அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக கிழக்கு மாகாணத்தில் வீதி அபிவிருத்தியானது பெரும் பரப்பில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இவ்வபிவிருத்தித் திட்டச் செலவுகளிலேயே பெரும் மோசடி நிகழ்த்தப்பட்டுள்ளதாகவும் அதனை ஆராய 3 குழுக்கள் ஆளுனரால் நியிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## 18 நாடுகளில்...

வெளிப்படுத்தப் பட்டிருந்தது.

வடஇந்தியக் கடல் பிரதேசம், மேற்கிந்தியக் கடல் பிரதேசம் மற்றும் மத்திய தென் இந்தியக் கடல் பிரதேசம் ஆகிய கடற் பாதைகளை இலக்காகக் கொண்டு முறையே வடபகுதியில் மூன்று நாடுகளிலும், மேற்கிந்தியப் பகுதியில் ஆறு நாடுகளிலும் மத்திய தென் பகுதியில் இரண்டு நாடுகளிலும் மேலும் ஏழு நாடுகளில் கடற்தளங்களை அமைக்கவும் திட்டம் இடப்பட்டிருப்பதாக இச் செய்தி தெரிவித்துள்ளது.

சீன கப்பல்களை திருத்துவதற்காகவும், எரிபொருள் உள்ளிட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் இந்த முகாம்கள் அமைக்கப்படுவதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல்மட்ட தீர்மானங்களைப் பற்றித் தற்போதைக்கு எதுவும் கூற முடியாது என நமீபியாவின் இராணுவம் சார்பில் பேசவல்ல கேணல் ஒருவர் தெரிவித்திருந்த போதும் பின்னர் இவ்விடயம் தொடர்பாகத் தற்போதுவரை அலுவலகத் தொடர்பாடல் எவையும் நமீபிய அரசுடன் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இது சீனாவின் திட்டமாக மட்டுமே இருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

வான்படை விமானங்களின் திருத்தம் மற்றும் பராமரிப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் திருகோணமலையில் சீனாவிற்காக ஒதுக்கப் படும் ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்ற செய்தியொன்றை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியச் செய்தியூடகம் ஒன்று அம்பலப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 21 மாணவருக்கு....

அவர்களது விருப்பமின்றிக் க.பொ.த. சாதாரண தரத்திற்கு இப்பாடசாலையின் அதிபர் திரு.க. பேரானந்தம் வெளிவாரியாக விண்ணப்பித்திருந்தார் என மாணவர்களாலும் பெற்றோராலும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.. அவ்விடயம் வெளியானதைத் தொடர்ந்து கடந்த ஒகஸ்ட் மாதம் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய மீண்டும் இம்மாணவர்களுக்கு பாடசாலையூடாக விண்ணப்பித்ததாலேயே தற்போது இவர்களுக்கு இரண்டு பரீட்சை அனுமதிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அத்துடன் பாடசாலையில் கல்வி கற்று வந்த மாணவியொருவரை உரிய காரணமின்றிப் பாடசாலையை விட்டு நீக்கியுள்ளதாகவும் கல்வி அமைச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாட்டை அடுத்து அனைத்து முறைப்பாடுகளுக்கும் உரிய விசாரணைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்காக அதிபருக்கு வலயக் கல்விப் பணிமனைக்கு உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு மாணவருக்கு இரண்டு பரீட்சை அனுமதிகளை எவ்வாறு பரீட்சைத் திணைக்களம் வழங்கியுள்ளது என்பதும் கேள்விக் குறியாகியுள்ளது.

இதேவேளை இவ்வதிபரின் இடமாற்றத்திற்கு எதிராக சிலர் ஆதரவாளர்களைத் திரட்டி ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவிருப்பதாகத் தெரிகின்றது

## அவுஸ்திரேலியா....

ஹரிகன், ஆலொகசர் லிப்பி, பாகித்தானின் திட்ட முகாமையாளர் மொமினா சஹிப் ஆகியோர் சந்திப்பொன்றை மேற்கொண்டி ருந்தனர்.

இச்சந்திப்பின் போது விசேடமாகக் கைத்தொழிற்துறை, பாற்பண்ணை, விவசாய உற்பத்திகள் மற்றும் சேவைத்துறை ஆகியவற்றின் அபிவிருத்தி தொடர்பாகவும் அவற்றில் மேற்கொள்ளக் கூடிய சாத்தியமான முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் நடுத்தர மற்றும் சிறு வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றியும் பேச்சுக்கள் நிகழ்த்தப்பட்டன.

இப் பேச்சுக்களின் போது இலங்கையின் தனியார் துறைக்கு அவுஸ்திரேலிய அரசினால் எவ்வகையில் உதவிகளை மேற்கொள்ள முடியும் எனவும் ஆராயப்பட்டுள்ளது.

## திட்டமிட்ட வகையில்...

இந்து. ஆகவே இந்து சமயத்துக்கும் பௌத்தத்திற்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன என்பதை இங்கு கூறிவைக்க விரும்புகிறேன்.

2012ம் ஆண்டு நாடு முழுவதும் 10,349 விகாரைகள் இருந்தன. அது 2013இல் 10.812ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பானது வடக்கு கிழக்கிலேயே இடம்பெற்றுள்ளது. அந்த வகையில் வடக்கில் கடந்த வருடத்தில் 463 விகாரைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்றார் அவர்.

## இலங்கையின் உள் விவகார....

பிரமுகர்கள், மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்கள்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட மக்களின் தற்போதைய நிலைமை, அபிவிருத்தி நடவடிக்கைகள், இன நல்லுறவு பற்றி அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள அதிகாரிகள் கேட்டறிந்தனர்.

இலங்கையின் அரசியல் விவகாரங்களில் அமெரிக்கா ஒருபோதும் தலையிடாது. அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமான உறவு என்றும் நிலைத்திருக்கும். மக்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகளை அமெரிக்கா தொடர்ந்து வழங்கும் என ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள அதிகாரிகள் கூறியதாக மட்டக்களப்பு பிரஜைகள் சபையின் தலைவர் எஸ்.கமலதாஸ் தெரிவித்தார்.

ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள அதிகாரிகளான பங்களாதே', பூட்டான், நேபாளம் மற்றும் மாலைதீவுக்கான காரியாலயத்தின் பணிப்பாளர் திருமதி கிளின்டன் எஸ்.ராட் பிறவுன் மற்றும் இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவராலயத்தின் அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பான பிரதி தலைவர் சியோபான் ஓட் ஐட்ஜ் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் சார்பில் அதன் தலைவர் எம்.ஐ.எம்.சுபைர், அதன் நல்லிணக்கக்குழு தலைவர் யு.எல்.எம்.என்.முபீன், மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் எஸ்.மாமங்கராசா தலைமையிலான சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகளையும் தனித்தனியே இவர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

## பொது வேட்பாளராக...

நன்றி தெரிவித்துள்ள அவர் தான் சனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டால் அடுத்து வரும் 100 நாட்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை இல்லாதொழிப்பதாக 21ம் திகதி நடைபெற்ற அதிர்ச்சிகரமான ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமித்து ஆட்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகத் தெரிவித்துள்ள அவர் இப்பந்தி அச்சேறும் வரைக்கும் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக எவ்வித கருத்தையும் முன்வைக்காதுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதே வேளை இப் பத்திரிகையாளர் சந்திப்பிற்குச் சற்று முன்னர் நடைபெற்ற சுகாதாரப் பணி வெற்றிடங்களை நிரப்பும் நியமனங்களை வழங்கும் கூட்டத்தில் மைத்திரிபால பின்வருமாறு கருத்தறிவித்திருந்தார். "செல்வத்தை சேகரிப்பதற்கும், மக்களை ஒடுக்குவதற்கும், ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதற்கும் அதிகாரங்கள் பயன்படுத்தப்படக் கூடாது. நாட்டு மக்களுக்காக இன்று போல் எதிர்காலத்திலும் இதனைவிட அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதற்கு நான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்"

## திட்டமிட்ட வகையில்..

எடுக்கப்பட்டு குறித்த யுவதி தொடர்பாகத் தெளிவற்ற முறையில் உரையாடப்பட்டதாக தாய் தெரிவித்துள்ளார்.

இதே போன்றதொரு உரையாடலொன்றை தாயின் இறுதித் தங்கையுடன் நபரொருவர் தொடர்ந்துள்ளார். அத் தொடர்பாடலின் இறுதியில் சில நாட்களுக்குப் பின்னர் குறித்த நபர் மட்டக்களப்பிற்கு வருகை தந்து விடுதியொன்றில் தங்கி நிற்பதாகவும் அங்கு காணாமற்போன யுவதியின் சிறிய தாயை வந்து சந்திக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இத்தகவல் காவல்துறைக்குப் பரிமாற்றப்பட்டதும் சிவில் உடையணிந்த காவல்துறைப் பெண் அதிகாரியொருவரும் குறித்த விடுதிக்குச் சென்றுள்ளார்.

அங்கு மேற்படி இளைஞன் காவல்துறைப் பெண் அதிகாரியால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்று காவல்துறை தெரிவித்துள்ளது. இவரை விசாரணைக்கு உட்படுத்துவதன் ஊடாக காணாமற்போன யுவதி தொடர்பாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனக் காவல்துறை தெரிவித்துள்ளது.

குறித்த இளைஞன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

## இலங்கை வங்கி...

மாணவர்களுக்கு மரங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

கிழக்கு மாகாணம் மரநடுகை நிகழ்வு குச்சவெளி பிரதேசத்திலுள்ள நிலாவெளி இக்பால் நகர் பிரதான வீதியில் நடைபெற்றது.

இலங்கை வங்கி பிராந்திய உதவி பொது முகாமையாளர் கே.பி.ஆநந்தநடேசன், கிழக்கு மாகாண மத்திய வங்கி பிராந்திய முகாமையாளர் எம்.தர்மகீர்த்தி குச்சவெளி பிரதேச செயலாளர் எம்.தயாபரன்,நிலாவெளி வைத்திய அதிகாரி கோகுலன, ,நிலாவெளி காவல்துறை பொறுப்பதிகாரி பண்டார உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

## இடைத்தங்கல் முகாம்...

உறுப்பினர்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் பல கலந்துகொண்ட கூட்டத்தொடரில் எதிர்பாரா அழிவுகள் தொடர்பாக ஆராயப்பட்டதாயினும் முகாம்கள் சம்பந்தமாக பேச எவரும் அங்கு முன்வரவில்லை என மலைமுரசின் கடந்த வாரச் செய்திகள் தெரிவித்திருந்தன.

அவ்வாறு முகாம்கள் சம்பந்தமாகவோ அல்லது ஏனைய தமிழக் கிராமங்கள் சம்பந்தமாகவோ பேசுவதற்கு தமிழத் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்கள் மூவரும் அக்கூட்டத்திற்குச் சமூகம் அளித்திருக்கவில்லை என்றும் தெரிய வந்திருந்தது.

தற்போது தமிழர்கள் அகதிகளாக வாழ்கின்ற அவ்விடைத்தங்கல் முகாம்கள் வெள்ளத்தில் மூழ்கிக் கிடப்பதையிட்டு தமிழ்த்தலைமைகள் அமைதி காப்பதாகவே தெரிகின்றது. அப்பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த மாகாணசபை உறுப்பினர் ஒருவரும் பிரதேச சபை உறுப்பினர்கள் பலரும், அப்பிரதேசத்திற்குப் பொறுப்பாக தமிழக்கட்சிகளால் நியமிக்கப்பட்டுள்ளவர்களும் இருக்கின்றார்கள் ஆயினும் முயற்சிகள் எதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நம்பிக்கை

## நபித்தோழர்கள் நம்பிக்கை கொண்டது போல் நம்பிக்கை கொள்வதே சிறந்த முறையாகும்

கடந்தவார தொடர்ச்சி .. ..

.அந்த யூதர், நபி(ச) அவர்களிடம் சென்று தனக்கும் அந்த முஸ்லிமுக்கும் இடையே நடந்த (சச்சர) வையெல்லாம் தெரிவித்தார். நபி(ச) அவர்கள் அந்த முஸ்லிமை அழைத்து வரச்சொல்லி அது பற்றி அவரிடம் கேட்டார்கள். அவர் விபரத்தைக் கூறினார். (நடந்தவை அனைத்தையும் விசாரித்துத் தெரிந்து கொண்ட பின்) நபி(ச) அவர்கள், மூஸாவை விட என்னைச் சிறப்பாக்கி (முதலிடம் தந்து உயர்த்தி) விடாதீர்கள். ஏனெனில், மக்கள் அனைவரும் மறுமை நாளில் மூர்ச்சையாகி விடுவார்கள். நானும் அவர்களுடன் மூர்ச்சையாகி விடுவேன். நானே முதலாவதாக மயக்கம் தெளிந்து எழுவேன். அப்போது, மூஸா(ர), (அல்லாஹ்வின்) அர்ஷின் ஓரத்தைப் பிடித்துக் கொண்டிருப்பார். மக்களோடு சேர்ந்து அவரும் மூர்ச்சையாகி, பிறகு எனக்கு முன்பாகவே மயக்கம் தெளிந்து எழுந்திருப்பாரா, அல்லது அல்லாஹ் அவருக்கு மட்டும் (மூர்ச்சையடையத் தேவையில்லையென்று) விதி விலக்கு அளித்திருப்பானா என்று எனக்குத் தெரியாது" என்று கூறினார்கள். (புஹாரி: 2411)

(நடந்தவை அனைத்தையும் விசாரித்துத் தெரிந்து கொண்ட பின்) நபி(ச) அவர்கள், மூஸாவை விட என்னைச் சிறப்பாக்கி (முதலிடம் தந்து உயர்த்தி) விடாதீர்கள். ஏனெனில், மக்கள் அனைவரும் மறுமை நாளில் மூர்ச்சையாகி விடுவார்கள். நானும் அவர்களுடன் மூர்ச்சையாகி விடுவேன். நானே முதலாவதாக மயக்கம் தெளிந்து எழுவேன். அப்போது, மூஸா(ர), (அல்லாஹ்வின்) அர்ஷின் ஓரத்தைப் பிடித்துக் கொண்டிருப்பார். மக்களோடு சேர்ந்து அவரும் மூர்ச்சையாகி, பிறகு எனக்கு முன்பாகவே மயக்கம் தெளிந்து எழுந்திருப்பாரா, அல்லது அல்லாஹ் அவருக்கு மட்டும் (மூர்ச்சையடையத் தேவையில்லையென்று) விதி விலக்கு அளித்திருப்பானா என்று எனக்குத் தெரியாது" என்று கூறினார்கள். (புஹாரி: 2411)

இஸ்லாத்தின் இந்த நடுநிலையான, நிதானமான போக்கு இஸ்லாத்தின் தாராளத் தன்மையையும் உண்மையை நேசிக்கும் போக்கையும் எடுத்துக்காட்டுகின்றது. எல்லாத் தூதர்களும் இறைவனால் அனுப்பப்பட்டவர்கள் அவர்கள் அனைவரும் போதித்தது ஒரே அடிப்படையைத்தான் எனும் போது அதில் ஒருவரை நிராகரித்தாலும் நபிமார்கள் அனைவரையும் நிராகரிப்பதற்குச் சமமானதாகும்.

தொடரும் .. ..




# வாரமொரு ஜோக்

- ஜெ.துர்க்கா -
12 (கலை), சேனையூர்

போலீஸ் : என்னம்மா உங்க கணவர் காணாம போய் இருபது நாள் ஆச்சுன்னு சொல்றீங்க..... ஏன் இவ்வளவு நாள் கழிச்சு வந்து கம்ப்ளைண்ட் பண்றீங்க ?
மனைவி : இன்னிக்குத் தான் சார் அவரோட சம்பள நாள்.

**ஹா! ஹா! ஹா!**

தரகரே.. நீங்க பெரிய விஷயத்தை மறைச்சுட்டீங்க.. இப்படி செய்யலாமா..?
ஏங்க.. என்ன ஆச்சு இப்போ..?
பொண்ணு அஞ்சரை அடி உயரம்ன்னு சொன்னீங்க.. சரி.. மூணு அடி அகலம்ன்னு சொன்னீங்களா..?

**ஹா! ஹா! ஹா!**

டாக்டர் : உங்க மாமியாருக்கு ஆபரேஷன் பண்ணனும், ரெண்டு லட்சம் ரூபாய் ஆகும்...!
மருமகள் : என்ன டாக்டர், கூலிப் படையை விட அதிகமா சொல்றீங்க...!

**ஹா! ஹா! ஹா!**

புதிதாக திருமணமானவர்கள்
மனைவி ஆ... என்னாங்க கால்ல முள்ளு குத்திடிச்சி
கணவன் : அடக்கடவுளே! பாத்து நடக்கிறதில்லையா அம்மா? (முள்ளை எடுத்து விட்டார்)
6 மாதங்களுக்குப் பிறகு
மனைவி : ஐயொ முள்ளு குத்திடிச்சிங்க!
கணவன் : ஏன்டி. ரோட்ல பாத்து நடந்து வர ஏலாதா? சும்மா என்ட உயிர வாங்கிக்கொண்டு

**ஹா! ஹா! ஹா!**

"கோழியில இருந்து தான்டா முட்டை வந்தது." "அது எப்படிடா அவ்ளோ உறுதியா சொல்ற... "சிக்கன் பிரியாணியில முட்டை இருக்கும். ஆனா, முட்டை பிரியாணியில சிக்கன் இருக்காது. அதனால கோழியில இருந்துதான் முட்டை வந்தது!!!"

**ஹா! ஹா! ஹா!**

சொந்த ஊர் எது? .... அந்த அளவுக்கு வசதி இல்லீங்க.... சொந்த வீடுதான் இருக்கு!

**ஹா! ஹா! ஹா!**

ஏன் தினமும் கோவில்ல உங்க மனைவிக்கு அர்ச்சனை பண்றீங்க?.... வீட்டல எனக்கு மனைவி தினமும் அர்ச்சனை பண்றா, அதான் திருப்பி நான் பண்ணுறேன்!




# முருங்கைக்கீரை கட்லட்



வைட்டமின்களும், தாது உப்புகளும் அடங்கிய முருங்கை கீரை எண்ணற்ற நோய்களை குணப்படுத்தக்கூடியது. கண் நோய்களுக்கு மருந்தாக இருப்பதுடன், இரத்த சோகையையும் தடுக்கிறது. இதனை கொண்டு செய்யப்படும் கம்பு- முருங்கை கீரை கட்லெட் சுவையாக இருப்பதுடன் ஆரோக்கியம் நிறைந்தது.

**தேவையான பொருட்கள்**

கம்பு மாவு: 100 கிராம், சோள மாவு: 100 கிராம், கேரட், பீன்ஸ், முட்டைக்கோஸ், உருளைக்கிழங்கு: சிறிதளவு, முருங்கை கீரை: 50 கிராம், உப்பு, எண்ணெய்: தேவையான அளவு

**செய்முறை**

கேரட், பீன்ஸ், முட்டைக்கோஸ், உருளைக்கிழங்கு போன்றவற்றை பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். நறுங்கிய காய்கறிகள் மற்றும் முருங்கை கீரையை வேக வைத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் சோள மாவு, கம்பு மாவு உப்பு போட்டு அதில் வேக வைத்த காய்கறிகளை போட்டு சப்பாத்தி மாவு பதத்திற்கு பிசைந்து கொள்ளவும். பிறகு தோசை கல்லை அடுப்பில் வைத்து கல் சூடானதும், தேவையான வடிவில் தட்டி போட்டு வேக வைத்து எடுத்தால் சுவையான கட்லெட் ரெடி.

# சும்மா நச்சென்டு இருக்கனுமா?!!



நல்ல உணவு, அமைதியான மனம், மலர்ந்த முகம் இந்த மூன்றுமே உலகின் தலைசிறந்த டாக்டர்கள். மூன்றும் நன்றாக இருந்தால் தோற்றத்தில் அழகு துள்ளும். இயற்கையாகவே பெண்கள் அழகுதான். அழகுக்கு மேலும் அழகு சேர்க்க சில டிப்ஸ்:

- பசுமையான மரம் செடி கொடிகளை அடிக்கடி பார்ப்பது, கண்ணுக்கு குளிர்ச்சி. மனதுக்கும் மகிழ்ச்சி.
- கன்னம் ஒட்டிப் போய் இருக்கிறதா? தினமும் வாயில் தண்ணீர் ஊற்றி கன்னத்தின் உட்பகுதி விரியுமளவுக்கு நன்றாக கொப்பளியுங்கள்.
- உடை உடலை கவ்விப் பிடிக்கும் அளவுக்கு இறுக்கமாக இருக்கவேண்டாம். ரிலாக்ஸ்டாக இருக்கிறது என்று ஓவராக தொளதொளவும் வேண்டாம். கச்சிதமாக இருப்பதே அழகு.
- வேலைக்கு போகும் பெண்களுக்கு புடவை கம்பீரமாக இருக்கும்.
- வெளியூர் அல்லது உல்லாசப் பயணத்துக்கு ஜீன்ஸ் எப்போதும் வசதிதான். உடல் உழைப்பு அதிகம் தேவைப்படுகிற வேலை என்றாலும் ஜீன்ஸ் சௌகர்யம்,
- கூந்தலில் சிக்கு விழுகிறது என்ற பயத்தில் பலர் வாரம் ஒருமுறை தலை குளிப்பதைக்கூட தவிர்க்கின்றனர். தலையை குனிந்தபடி கூந்தலை முன்னால் போட்டு கைவிரல்களால் கோதி அழுத்தி நன்றாக அலசி சுத்தம் செய்யவேண்டும். அழுக்கு எளிதில் நீங்குவதுடன், சிக்கு விழாது. வெயில் காலங்களில் வாரத்திற்கு மூன்று தடவையாவது தலைக்கு குளித்தால் நல்லது.
- வெயில் காலத்தில் உடற்பயிற்சி செய்யும்போது கூந்தலை இறுக்கிக் கட்டக்கூடாது. முடி அதிகமாக உதிரிந்து விடும். தூக்கி குதிரைவால் போட்டு கட்டலாம். ரப்பர் பாண்ட் போட வேண்டாம்.
- தலையை துடைக்க தனியாக டவல் வைத்துக்கொள்ளுங்கள். முகத்துக்கு அதே துண்டை பயன் படுத்தும்போது, தலையில் இருக்கக் கூடிய பொடுகு முகத்தில் பருக்கள் வரக் காரணமாகலாம்.
- பொறுப்புள்ள பணியில் இருப்பவர்கள் ஓரளவு டல் கலரில் பேன்ட்டும் அதே துணியில் முக்கால் கை சட்டையும் அணியும்போது அசத்தலாக தோற்றமளிக்கும்.
- தியானம், யோகாசனம், இசை கேட்பது, பாடுவது, நடனமாடுவது போன்ற ஏதாவது ஒரு பொழுது போக்கில் ஈடுபட்டு மன அழுத்தத்தை குறைக்க வேண்டும்.






# நித்திரையின்மை Vs புற்றுநோய்


மனிதன் தோன்றிய காலம் முதல் தற்போது வரை தூக்கம் என்பது வாழ்வின் இன்றியமையாத ஒன்றாகியுள்ளது. இன்றைய மனிதன் குறைந்தபட்சம் 6 மணி நேரமாவது தூங்க வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். ஆனால், இதற்கு குறைவான நேரம் தூங்கும் மனிதர்களுக்கு ரத்தஅழுத்தம், உடல்கொழுப்பு, உடல்பருமன், சர்க்கரை வியாதி உள்ளிட்ட நோய்பாதிப்புகள் அதிகம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக ஏற்கவே பல்வேறு மருத்துவ ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாளொன்றுக்கு 5 மணி நேரத்திற்கும் குறைவாக தூங்குபவர்களுக்கு புற்றுநோய் ஏற்படவும் வாய்ப்புள்ளதாக சமீபகால ஆய்வுகள் தெரிவித்துள்ளது. குறைந்த நேரம் தூங்குபவர்களில் சுமார் 12 சதவீதம் பேர் சராசரி வாழ்நாளுக்கு முன்னதாகவே உயிரிழக்கின்றனர். இந்த தகவல்கள் அனைத்தும் பிரபல மருத்துவ ஆராய்ச்சி பல்கலைக்கழகங்களான ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், ஹாவார்ட், மேன்செஸ்டர் உள்ளிட்ட பல்கலைக்கழங்கள் நடத்திய ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.



இதுகுறித்து ஆக்ஸ்போர்டு விஞ்ஞானிகள் கூறுகையில், மனித வாழ்வின் சராசரி தூக்கம் என்பது 8 மணிநேரமாகும். ஆனால், இன்றைய நவீன உலகில் கணனி, கைப்பேசி போன்வற்றிலேயே பெரும்பாலானவர்கள் நேரத்தை செலவிடுகின்றனர். இதனால் அவர்களின் தூங்கும் நேரம் குறைகிறது. நாளடைவில் அதுவே அவர்களின் வாடிக்கையாகிவிடுகிறது. இது அவர்களின் உடல்நலத்தை வெகுவாக பாதித்து, இதயநோய், மனஅழுத்தம், ரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

இது தவிர 6 மணி நேரத்திற்கு குறைவாக தூங்கும் நபரில், சுமார் 2 ஆயிரம் பேரில் ஒருவருக்கு புற்றுநோய் பாதிப்பு ஏற்படுகிறது என்று கூறியுள்ளனர். அதிக நேரம் தூங்கினாலும் உடல் எடை அதிகரித்து பல்வேறு வியாதிகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. அதேவேளை மிகவும் குறைவான நேரம் உறங்கினாலும் உயிருக்கு ஆபத்து ஏற்படும். குறிப்பாக இரவு வேலைக்கு செல்பவர்கள் பகலில் சரிவர தூங்குவதில்லை. எனவே, சரியான நேரத்தில் உறங்கி எழுந்து உடல்நலத்தை ஆரோக்கியத்துடன் வைப்போம்.



# இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : ஆடம்பரச்செலவு தவிர்ப்பதால், பணக்கடன் வாங்குகிற சூழ்நிலை விலகும்.
**ரிஷபம்** : அதிக விலையுள்ள பொருளை, கவனமுடன் பயன்படுத்தவும்.
**மிதுனம்** : பொது இடங்களில் நல்ல கருத்துகளை பேசுவதிலும், நிதானம் பின்பற்றவும்.
**கடகம்** : உடன் பிறந்தவர் வகையில், மங்கள நிகழ்ச்சிக்கான பேச்சு வார்த்தை முன்னேற்றம் பெறும்.
**சிம்மம்** : குடும்பத்தில் மங்கள நிகழ்ச்சி நடத்த, அனுகூலம் உண்டு.
**கன்னி** : சத்தான உணவு உண்பதும், சீரான ஓய்வும் உடல் நலம் பாதுகாக்கும்.
**துலாம்** : உங்களின் நல்ல கருத்து நிறைந்த பேச்சு, உறவினர், நண்பர்களிடம் வரவேற்பு பெறும்.
**விருச்சிகம்** : பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை தவறாமல் பின்பற்ற வேண்டும்.
**தனுசு** : உடன்பிறந்தவரின் செயல், மனவருத்தம் தரலாம். அக்கம், பக்கத்தவரின் அன்பு, உபசரிப்பு கிடைக்கும்.
**மகரம்** : எதிரியால் வரும் கெடுதல் பலமிழக்கும். இல்லறத்துணையின் ஆலொசனையை கிட்டும்
**கும்பம்** : உங்களை அதிகமாக புகழ்ந்து பேசுபவரிடம், நிதானித்து பழகவும். புதிய முயற்சி நிறைவேற அனுகூலம் உண்டு.
**மீனம்** : இல்லறத்துணையின் மனம், செயலால் உத்வேகம் பிறக்கும். தொழில், வியாபாரம் ஜோராக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## கிழக்கு பல்கலைக்கழகம்

## பூப்பந்தாட்ட போட்டி

கிழக்கு பல்கலைக்கழகத்தில் நான்கு வருடத்திற்கு பிறகு முதல் தடவையாக ஊழியர்களுக்கிடையில் நடைபெற்ற பூப்பந்தாட்ட போட்டியில் கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீட அணியினர் வெற்றி பெற்றனர்.

கிழக்கு பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவு இணைப்பாளர் மற்றும் உடற்கல்விக்குப் பொறுப்பான ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









## இலங்கை, இந்தியா மோதுகின்றன



பாகிஸ்தானில் இஸ்லாமாபாத் நகரில், பெண்களுக்கான 3 ஆவது தெற்காசிய கால்பந்து சாம்பியன்ஷிப் தொடர் நடக்கிறது. இதில் 'நடப்பு சம்பியன்' இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட 8 அணிகள் இரண்டு பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றன. இத்தொடரின் அரையிறுதியில் இலங்கை இந்தியா அணிகள் புதன்கிழமை மோதுகின்றன.

## உலகக் கிண்ண கால்பந்தாட்டம்

2022 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டித் தொடரை நடத்துவதற்கான நாட்டினை தேர்ந்தெடுக்க நடத்தப்படும் வாக்கெடுப்பில் பணத்தை அள்ளி வழங்கி ஆதரவை பெற்றுக் கொண்டதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளில் கட்டார் அவ்வாறான மோசடிகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ள போதிலும் இது தொடர்பில் நடைபெற்ற விசாரணைகளில் 2018 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண போட்டிகளை நடத்தும் வாய்ப்பை பெறுவதற்காக இங்கிலாந்தின் கால்பந்து சம்மேளனமே முறையற்ற செயற்பாடுகளை மேற்கொண்டதாக சிக்கிக் கொண்டுள்ளது.

## *தெரிந்ததையே ஏன் கேட்கிறீங்க!!*



கோஹ்லியும், அனுஷ்காவும் பல இடங்களுக்கு ஒன்றாக சுற்றிவருகின்றனர். இதனால் இவர்களுக்கு இடையில் காதல் மலர்ந்ததாக செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. கோஹ்லியாவது அனுஷ்கா பற்றி ஏதாவது அவ்வப்போது தெரிவிப்பார். இந்நிலையில் மும்பையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லி கலந்து கொண்டார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், நானும் நடிகை அனுஷ்கா சர்மாவும் காதலிக்கிறோம். தெரிந்து கொண்டே அதை பற்றி கேட்டால் என்ன அர்த்தம் என கடுப்பாகியுள்ளார்.

## இலங்கையை விழ்த்திய இந்தியாவுக்காக காத்திருப்பு

இலங்கையை ஒருநாள் தொடரில் வீழ்த்திய இந்திய அணி, அவுஸ்திரேலியா டெஸ்ட் தொடரில் 'ஒயிட்வாஷ்' ஆகும் என்று முன்னாள் வீரர் கிளென் மெக்ரா கூறியுள்ளார்.

இந்திய அணி அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவுடன் டெஸ்ட் தொடரில் மோதவுள்ளது. இதன் முதல் போட்டி வருகின்ற 4ம் திகதி தொடங்கவுள்ளது.

## டென்னிஸின் வெற்றி வீராங்கனை



பெண்கள் டென்னிஸ் சங்கத்தின் சார்பில், இந்த ஆண்டில் மிகவும் முன்னேறிய வீராங்கனையாக கனடாவின் 20 வயதான பவுச்சார்ட் தேர்வு செய்யப்பட்டுள்ளார். விம்பிள்டனில் இறுதிப்போட்டி வரை முன்னேறிய பவுச்சார்ட் உலக பெண்கள் சாம்பியன்ஷிப் போட்டிக்கும் முதல் முறையாக தகுதி பெற்று சாதனை படைத்தார். 'எனக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி. ஒவ்வொரு நாளும் நான் முன்னேற்றம் காண முயற்சிக்கிறேன். ஏற்கனவே சில புதிய இலக்குகளை நிர்ணயித்துள்ளேன். அதை நோக்கி அடுத்த ஆண்டில் பயணிப்பேன்' என்று பவுச்சார்ட் கூறினார்.

# சர்வதேசச் செய்திகள்

- **தீவிரவாத தாக்குதலில் முதலிடத்தில் ஈராக்.**

உலக அளவில் தீவிரவாத தாக்குதல்கள் அதிகம் நடைபெறும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் ஈராக் உள்ளது. அங்கு 2 ஆயிரத்து 492 தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. அதில் 6 ஆயிரத்து 300 க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். பட்டியலில் இரண்டாவது இடத்தில் ஆப்கானிஸ்தானும், மூன்றாவது இடத்தில் பாகிஸ்தானும் உள்ளன.

- **மூன்று நாட்களில் ஒரு வருடகால பனிப்பொழிவு**



அமெரிக்க நியூயோர்க் மாநிலத்திலுள்ள பவலோ பிராந்தியத்தை செவ்வாய்க்கிழமை தாக்கிய கடும் பனிப்புயல் காரணமாக குறைந்தது 4 பேர் பலியாகியுள்ளனர்.

- **தமிழகம் எதிர்த்தாலும் காவேரிக்கு குருக்கே அணை கட்டப்படும்**



முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் பிறந்தநாள் நிகழ்ச்சியில் பங்கேற்ற கர்நாடக முதல்வர் சித்தராமையா கூறியதாவது: நடுவர்மன்ற தீர்ப்பு படி, காவிரி நதியில் இருந்து தமிழகத்துக்கு அளிக்க வேண்டிய 192 டிஎம்சி நீரை அளித்துவிட்டு எஞ்சிய நீரை பயன்படுத்த கர்நாடகாவுக்கு எந்த தடையும் கிடையாது.

- **மரணதண்டனைக் கைதி திடீர் விடுவிப்பு**

அமெரிக்காவின் கடந்த 1975ஆம் ஆண்டு விற்பனை பிரதிநிதி ஒருவரை கொலை செய்ததாக ரிக்கி ஜான்சர் என்பவர் கைது செய்யப்பட்டார். இந்த கொலையை நேரில் பார்த்ததாக 12 வயது பள்ளி மாணவன் எட்டி வெர்னோன் என்பவர் அளித்த சாட்சி காரணமாக ரிக்கி ஜானுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் மேல்கோர்ட்டில் அப்பில் செய்யப்பட்டு மரண தண்டனை பின்னர் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த 39ஆண்டுகளாக சிறையில் இருந்து வரும் ரிக்கி ஜான் தற்போது திடீரென விடுதலை செய்யப்பட்டுள்ளார். இவருக்கு எதிராக 39 வருடங்களுக்கு முன்னர் சாட்சி சொன்ன 12 வயது சிறுவன் தற்போதைய 51 வயதில் தான் அந்த கொலையை நேரில் பார்க்கவில்லை என்றும், அந்த நேரத்தில் தான் பள்ளி வேனில் இருந்ததாகவும் மறுத்து கூறியுள்ளார்.

- **மிரட்டிய பெண் கைது**

அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு கடந்த ஆகஸ்ட் மாதம் கொலை மிரட்டல் கடிதம் வந்தது. இதுபற்றி போலீசார் விசாரித்த போது ஹுஸ்டனைச் சேர்ந்த 56 வயது பெண் டெனிஸ் ஓ நீல் கொலை மிரட்டல் விடுத்தது தெரியவந்தது. இதையடுத்து அவரை போலீசார் கைதுள்ளனர்.

- **சட்டவிரோதமாக இருந்தவர்கள் நாடு கடத்தப் பட்டனர்.**

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியுள்ள இந்தியர்கள் உள்பட சுமார் 1 கோடியே 10 லட்சம் வெளிநாட்டினர் நாடு கடத்தப்பட மாட்டார்கள் என்றும் இது தொடர்பாக அமெரிக்க அதிபர் ஒபாமா விரைவில் உத்தரவு ஒன்றை பிறப்பிப்பார் என்றும் கூறப்படுகிறது.

- **47 வருடங்களின் பின் சேகுவேரா**



உலகம் முழுவதும் புரட்சிகர சக்திகளுக்கு உந்துதலாகத் திகழும் சேகுவாரா கியூப இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட பிறகு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளன. கியூபாவில் ஃபிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்து புரட்சியில் ஈடுபட்ட சேகுவாரா ஆட்சி மாற்றத்திற்கு வித்திட்டார்.

- **ஆயுத தொழிற்சாலை தரைமட்டம்**

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பினர் குண்டுகளை தயாரிக்க பயன்படுத்திய தொழிற்சாலை கட்டிடம் ஒன்றின் மீது கனடிய யுத்த விமானங்கள் குண்டுவீச்சினை மேற்கொண்டுள்ளன. ஈராக்கின் வட பகுதியில் அமைந்துள்ள இந்த தொழிற்சாலை மீது கனேடிய போர் விமானங்களுடன், ஏனைய கூட்டணி நாடுகளின் விமானங்களும் இணைந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளது. இந்த தாக்குதலில் அந்த ஆயுத தொழிற்சாலை தரைமட்டமானதாகவும், நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் இறந்ததாகவும் கூறப்படுகிறது.

- **அமெரிக்காவை கண்டுபிடித்தது முஸ்லீம்களே**

துருக்கியின் இஸ்தான்புல் நகரத்தில் நடைபெற்ற இலத்தீன் அமெரிக்கா நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனை கூறினார். அமெரிக்காவை கண்டுபிடித்தது கிறிஸ்டோபர் கொலம்பஸ் என்று கூறுகின்றனர். உண்மை அதுவல்ல. அமெரிக்காவை 1178 ஆம் ஆண்டில் (12ம் நூற்றாண்டில்) முஸ்லிம்கள் கண்டுபிடித்துள்ளனர்.

- **மர்ம நபரால் கத்திக்குத்து**

சீனாவின் தலைநகர் பெய்ஜிங் அருகே பெய்டேகே என்ற கடற்கரையோர நகரில் உள்ள ஒரு ஆஸ்பத்திரியில் 20.11.2014 ஒரு வாலிபர் புகுந்து திடீர் தாக்குதல் நடத்தினார். அங்கு பணிபுரிந்த நர்சுகள் மற்றும் பணியாளர்களை அவர் சரமாரியாக கத்தியால் குத்தினார். இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த ஆஸ்பத்திரி ஊழியர்களும், நோயாளிகளும் பயந்து ஓட்டம் பிடித்தனர். இந்த தாக்குதலில் 6 நர்சுகள் உள்பட 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

- **விஞ்ஞானியின் தொடையில் நிர்வாணப் படம்**

பிரித்தானியாவை சேர்ந்த விஞ்ஞானி ஒருவர் நிர்வாண பெண்களின் உருவங்களை தனது தொடையில் பச்சைக்குத்தியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

- **யூத கோவிலில் தாக்குதல்**

மேற்கு ஜெருசலேமிலுள்ள யூத வழிபாட்டு ஸ்தல மொன்றில் துப்பாக்கி, கத்திகள், கோடரிகள் என்பவற்றுடன் இருவர் நடத்திய தாக்குதலில் குறைந்தது 4 இஸ்ரேலியர்கள் பலியானதுடன் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

- **தினமும் அவதியுறும் 5 வயது குழந்தை**



பிரித்தானியாவின் மேற்கு யோக்ஷைர் நகரை சேர்ந்த கெல்லிடேவிட் டையலர் என்ற தம்பதியினர் தங்களது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதற்கு பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். ஏனெனில், இவர்கள் வசிக்கும் வீடு, பள்ளியிலிருந்து வெகுதொலைவில் உள்ளதால், இவர்களின் 5 வயது குழந்தை தினமும் 12 பேருந்துகளில் பயணம் செய்து பள்ளிக்கு செல்ல வேண்டியுள்ளது.

- **முத்தத்தால் – 8 கோடி பக்டீரியாக்கள்**



ஒருவருக்கொருவர் முத்தமிடும் போது நோய் பரவும் ஆபத்து உள்ளதாக டாக்டர்கள் எச்சரிக்கின்றனர். இது அனைவரும் அறிந்தது தான். ஆனால், 10 வினாடி முத்தமிட்டால் 8 கோடி பக்டிரீயாக்கள் இருவரது உடலுக்குள் பரவும் என்ற புதிய தகவல் வெளியாகி உள்ளது.

- **ஓரினச் சேர்க்கை அனுமதி**

பிரேசிலில் ஓரினச் சேர்க்கைக்கு அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி ஆயிரக்கணக்கான ஓரினச் சேர்க்கையாளர்கள் பேரணியொன்றை நடத்தியுள்ளனர். மில்லியன் குரல்கள் என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட இப்பேரணியானது ஓரினச் சேர்க்கையாளர்களால் 19 ஆவது முறையாக நடத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பற்றோர் – 180,000



மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலையற்றிருப்போரின் தொகை ஏறக்குறைய 180,000 என மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் திருமதி சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சின் ஏற்பாட்டில் கொரிய நாட்டு வைத்தியர்களைக் கொண்ட வைத்திய முகாமினை ஆரம்பிவைத்து உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களில் 54,000 மில்லியன்களை அபிவிருத்தி நிதியாகப் பெற்றுக்கொண்ட இம் மாவட்டம் பாரிய அபிவிருத்திகளைக் கண்டுள்ளது.

ஆனாலும் வேலையற்றோர் தொகையைக் குறைக்கும் முகமாக இவ் அபிவிருத்திப் பணிகளில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## யுவதியைக் கடத்திய சந்தேகநபர் கைது?



கடந்த 22.09.2014ல் இருந்து காணாமற் போயுள்ளதாகக் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள மட்டக்களப்பு யுவதியான கந்தசாமி நிரோஜினியின் கடத்தலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் இளைஞன் ஒருவர் கைதாகியுள்ளார்.

வாகரைக் காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள இக் காணாம்றபோதல் நாடகத்தில் குறித்த காணாமற்போன திகதியில் இவ்யுவதி வங்கியொன்றில் இருந்து அடைவு பிடிக்கப்பட்ட நகையொன்றை மீட்டு வருவதாகக் கூறிச் சென்றிருந்தார்.

அதன் பின்னர் குறித்த யுவதியின் தாய்க்கு ஆறு அலைபேசி இலக்கங்களில் இருந்து தொடர்புகள் 13

## இலங்கை வங்கியின் "தேசத்திற்கு நிழல்"

(றபாய்தீன் பாபு)

தேசத்திற்கே நிழல் தரும் இலங்கை வங்கியின் சமூக சேவை வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் மரக்கன்றுகளை நாட்டும் "துரு மித்துரு" நாடளாவிய நிகழ்ச்சித்திட்டத்தின் நிகழ்வுகள் திருகோணமலையில் நடைபெற்றுள்ளன.

உப்புவெளி இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் திரு.ரகுராம் தலைமையில் இலங்கை வங்கி பிராந்திய உதவி பொது முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசன், மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் ரத்னாயக்க ஆகியோர் கலந்துகொண்ட நிகழ்வில் ஆத்திமோட்டை தமிழ் வித்தியாலயத்தில் மரம் நாட்டு விழாவும், 13





## இலங்கையின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடாது

அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள அதிகாரிகள், மட்டக்களப்பிலுள்ள சிவில் சமூகப்பிரதிநிதிகளையும் தமிழ் மற்றும் முஸ்லிம் முக்கியஸ்தர்களையும் இன்று சந்தித்துக் கலந்துரையாடினர்.


மட்டக்களப்பு பிரஜைகள் சபையின் தலைவர் எஸ்.கமலதாஸ் தலைமையில் அதன் உறுப்பினர்களை கல்லடி அலுவலகத்தில் ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள அதிகாரிகள் சந்தித்தனர்

மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனப் பிரதிநிதிகள் மற்றும் ஆரையம்பதி முக்கியஸ்தர்கள், சர்வமத முக்கியஸ்தர்கள், மதப் 13

## திருகோணமலை நகரப் பகுதியிலும் வெள்ளம்

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்துவரும் அடை மழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கத் தொடங்கியுள்ளன.

குறிப்பாக திருகோணமலை நகரப்பகுதியை அண்டியுள்ள சுமேதகம, கிருஸ்னபுரம் ஆகிய கிராமங்கள் முற்றாக வெள்ள நீரினால் பாதிக்கப்பட்டுள்ளன. (நிக்கி தொம்சன்)





## இடைத்தங்கல் முகாம் வெள்ளக் காடாகின்றது

### தமிழ்க் கட்சிகள் அமைதி

சம்பூரில் இருந்து இடம் பெயர்த்தப்பட்ட மக்களின் இடைத்தங்கல் முகாம்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பட்டித்திடல் , கிளிவெட்டி மற்றும் மணற்சேனை ஆகிய முகாம்களில் நீர்நிரம்பி வழிவதாகவும் மக்களின் குடியிருப்புக்களில் நீர் உள் நுழைந்துள்ளதாகவும் அவ்விடங்களைப் பார்வையிடச் சென்ற மலைமுரசின் பிரதிநிதி தெரிவித்தார்.

மேற்படி முகாம்களின் உண்மை நிலையைப் படப்பிடிப்புச் செய்ய படைத்துறை அனுமதிக்கவில்லை எனத் தெரிவித்த அவர் உடனடியாக மூதூர் பிரதேசசபைத் தவிசாளரைத் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அம்முயற்சி கைகூடவில்லை.

அண்மையில் எதிர்பாரா அழிவுகள் தொடர்பாக பிரதேசச் செயலாளரின் தலைமையில் பிரதேச சபை 13

## திட்டமிட்ட வகையில் புதிய 463 விகாரைகள் நாட்டில்

- சி. யோகேஸ்வரன்-

வடக்கு - கிழக்கில் திட்டமிடப்பட்டு 463 பௌத்த விகாரைகள் நிறுவப்பட்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சீனித்தம்பி யோகேஸ்வரன் நேற்று பாராளுமன்றத்தில் அதிருப்தி வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற 2015ம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்

இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டுவருகின்ற இந்து - கிறிஸ்தவம், இஸ்லாம் மற்றும் பௌத்தம் ஆகிய நான்கு மதங்களுக்கும் பொதுவானதாக பௌத்த விவகார அமைச்சு என்று உருவாக்கப்பட்டுள்ளது.

பௌத்த விவகார அமைச்சானது பௌத்த சமயத்துக்கே முன்னுரிமை கொடுக்கின்றதே தவிர ஏனைய மதங்களைப் பற்றி சிந்திப்பதாக இல்லை.

மத விவகாரங்களுக்கென ஒதுக்கப்படுகின்ற நிதியானது 99 வீதம் பௌத்த மதத்துக்கான விவகாரங்களுக்கும் எஞ்சியிருக்கும் ஒருவீத நிதியே இந்து - கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மத விவகாரங்களுக்கும் என ஒதுக்கப்படுகிறது. 13

வார இறுதி நாட்களில் 1000 ரூபாவிற்கு மேல்
வருமானமீட்ட இதோ வழி
**விற்பனையாளர்கள் தேவை**
மலைமுரசு பத்திரிகையினை விற்பனை செய்வதற்கு விருப்பம் உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.... உரிய விற்பனைப் பயிற்சி வழங்கப்படும்... அழையுங்கள் 077 199 8499
**விற்பனைத் தரகு 33 வீதம்**

மலைமுரசு
MALAIMURASU
மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 22.11.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

உங்கள் கையடக்கத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா?
செய்திகளை எமக்குச் சொல்லுங்கள்
நாங்கள் மீள் நிரப்புகின்றோம்
0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org